அலகு

5

# இந்தியப் பண்பாட்டிற்குப் பேரரசுகளின் கொடை

ZIJECH

## கற்றல் நோக்கங்கள்

- மௌரியப் பேரரசு- ஆட்சிமுறை, சமூக, பொருளாதார, சமய, கலை, கட்டடக்கலை ஆகியவற்றைப் பற்றி மாணவர்கள் அறிதல்.
- குஷாணர்கள், குப்தர்கள் கால ஆட்சிமுறை, சமூக பொருளாதார, சமயநிலை, கலை, கட்டடக்கலை பற்றி மாணவர்கள் அறிதல்.
- சாளுக்கியர்கள், பல்லவர்கள், சோழர்கள், ராஷ்டிரகூடர்கள், பிற்காலப் பண்டியர்கள், ஹொய்சாளர்கள் கால ஆட்சிமுறை மற்றும் அவர்களின் சமூக, பொருளாதார, சமய, கலை, கட்டடக்கலை, பண்பாட்டுக் கொடை பற்றி மாணவர்கள் அறிதல்
- டெல்லி சுல்தானியர்கள் கால ஆட்சிமுறை, சமூக, பொருளாதார, சமய, கலை, கட்டடக்கலை, பண்பாட்டுக் கொடை பற்றி மாணவர்கள் அறிதல்
- பாமினி, விஜயநகர அரசுகள் கால ஆட்சிமுறை மற்றும் அவர்களின் சமூக, பொருளாதார, சமய, கலை, கட்டடக்கலை, பண்பாட்டுக்கொடை பற்றி மாணவர்கள் அறிதல்
- முகலாயப் பேரரசு கால ஆட்சிமுறை, சமூக, பொருளாதார, சமய, கலை, கட்டடக்கலை, பண்பாட்டுக்கொடை பற்றி மாணவர்கள் அறிதல்.

## நுழைவு வாயில்

இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட முதல் பேரரசான மௌரியப் பேரரசு காலத்திலிருந்து கலை, கட்டடக்கலை, ஆட்சிமுறை போன்றவற்றில் வியக்கத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. மேலும், புதிய ஆட்சிமுறையைத் தொடங்கி வைத்தனர். குப்தப் பேரரசு, மௌரியப் பேரரசுக் கூறுகளை விரிவுபடுத்துவதில் முக்கிய பங்காற்றியது. இந்தியப்பண்பாட்டிற்கும் இந்து சமயத்திற்கும் அளப்பரிய பணியினை ஆற்றியுள்ளது. குப்தர்களின் அறிவியல்நோக்கு இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கு வித்திட்டன. குஷாணர்கள் காலத்தில் பௌத்த சமயமும், கலை, கட்டடக் கலையும் உலகநாடுகளுக்குப் பரவியது. சாளுக்கிய நாட்டிலிருந்து தமிழகத்தில் கணபதி வழிபாடு, காணாபத்யம் என்ற புதிய சமயப்பிரிவாக அறிமுகப்படுத்தப்பட்டது. பல்லவர்கள் குடைவரைக் கோயில்கள், ஒற்றைக்கல் இரதங்கள் ஆகியவற்றை உருவாக்கி, இந்தியப்பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தனர். இவர்களுக்குப்பின் வந்த சோழர்கள் ஆட்சிமுறை, கலை, கட்டடக்கலை, இலக்கியம், சமயச் சகிப்புத்தன்மை போன்றவற்றைப் பரப்புவதில் மற்றப் பேரரசுகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தனர்.

பிற்காலப் பாண்டியர் காலத்தில், பொருளாதாரத்தில் வியக்கத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. வாணிபக் குழுக்கள், அயல்நாட்டு வாணிபம் மூலம் உள்நாட்டு வருவாயைப் பெருக்கின. இன்று நாம் பின்பற்றும் அளவை முறைகளுக்கு(Measurement)முன்னோடி, பாண்டியர் கால அளவைகளே ஆகும்.




XII Ethics_Lesson 5.indd 86 16-03-2020 14:56:37

ராஷ்டிரகூடர்கள், ஹொய்சாளர்கள் காலத்தில் கன்னடமொழி மறுமலர்ச்சி பெற்றது. முகலாயப் பேரரசின் நிருவாகக் கூறுகளே தற்கால இந்தியாவின் பிர்கா, பஞ்சாயத்து போன்ற நிருவாக முறைக்கு காரணமாகும்.

## 5.1 மௌரியர் காலப் பண்பாடு

பழங்கால இந்தியாவின் ஆட்சிமுறை, சமூக, பொருளாதார, சமய நிலைகளின் வளர்ச்சிக்கும், நுண்கலைகளின் உருவாக்கத்திற்கும், மௌரியர்களே அடித்தளமிட்டனர். மௌரிய மன்னர்களுள் சந்திரகுப்தர், பிந்துசாரர், அசோகர் ஆகியோர் இந்தியப்பண்பாட்டிற்கு அளித்த கொடை குறிப்பிடத்தக்கது.

### சான்றுகள்



சாணக்கியர்

மௌரியர்களின் ஆட்சியைப் பற்றி அறிய **கௌடில்யர்** (சாணக்கியர்) எழுதிய **அர்த்தசாஸ்திரம், விசாகதத்தர்** எழுதிய **முத்ரா ராட்சசம், தேவி சந்திரகுப்தம்,** கிரேக்கப் பயணி **மெகஸ்தனிஸ்** எழுதிய **இண்டிகா,** மகாவம்சம், தீபவம்சம் போன்ற பௌத்த நூல்கள், மாமன்னர் அசோகரின் கல்வெட்டுகள், நாணயங்கள் போன்றவை சான்றுகளாக உள்ளன.

### மௌரியர்களின் ஆட்சிமுறை

**அர்த்தசாஸ்திரம்** என்ற நூல் மௌரியர்களின் ஆட்சிமுறை குறித்த தகவல்களைத் தெரிவிக்கிறது. இந்நூல், மௌரிய ஆட்சிமுறையின் 'வேதம்' எனப்படுகிறது. அர்த்தசாஸ்திரம், மன்னனின் நிருவாகமுறை எவ்வாறு இருக்க வேண்டும் என்ற வரையறையைத் தருகிறது. நாட்டில் தர்மத்தையும் நீதியையும் நிலைநாட்ட வேண்டியது மன்னனின் கடமையாகும். அரசனின் இக்கடமைகள் **இராஜ்ய தர்மம்** எனப்பட்டது. அரசனுக்கு நிருவாகத்தில் உதவி செய்ய 12 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழு இருந்தது. மௌரியப் பேரரசு நான்கு பெரும் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. தட்சசீலம், உஜ்ஜயினி, தோசாலி, சுவர்ணகிரி ஆகிய நகரங்கள் அம்மாகாணங்களின் தலைநகரங்களாக விளங்கின. '**மகாமாத்திரர்கள்**' என்றழைக்கப்பட்ட ஆளுநர்கள் இம்மாகாணங்களை ஆட்சி செய்தனர். அரசனுக்கு உதவ அமைச்சரவைக் குழு ஒன்று இருந்தது. அதில் புரோகிதர் (அரசகுரு), சேனாதிபதி (படைத்தலைவர்), சன்னிதத்தா (கருவூல அதிகாரி), சம்ஹர்தர் (வரி வசூல் செய்பவர்), பிரதிஹாரா (மன்னனின் தனி உதவியாளர்), பிரசஸ்தா (காவல்துறைத் தலைவர்), நியாயாதீஷ் (தலைமை நீதிபதி), அந்தபாலா (எல்லைப்புறப் பாதுகாவல் அதிகாரி), பௌர் (தலைநகர ஆளுநர்), அத்வர்வம்சிகா (பெண் பாதுகாவல் அதிகாரி), துர்க்கபாலா (கோட்டைப் பாதுகாவல் அதிகாரி) ஆகியோர் முக்கிய இடம் வகித்தனர்.

மாகாண வருவாய்த்துறை அதிகாரி '**ராஜுகர்கள்**' எனப்பட்டனர். மௌரிய மாகாணங்கள் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. அம்மாவட்டங்களை '**ஸ்தானிகர்**' என்ற தலைமை அதிகாரியும் நிருவகித்தார். மாவட்ட ஆட்சியருக்கு உதவ **யுக்தர்கள்** என்ற துணை அதிகாரிகள் இருந்தனர்.

நகரங்களின் நிருவாகத்தைக் கண்காணித்த அதிகாரி **நகரிகா** எனப்பட்டார். நகரத்தலைமை அதிகாரிகளின் பணிகள் பற்றி மெகஸ்தனிஸ், கௌடில்யர் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். மௌரியர்களின் தலைநகரான பாடலிபுத்திரம் தலா ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஆறு குழுக்களால் நிருவகிக்கப்பட்டது. கிராம நிருவாகத்தைக் **கிராமணி** என்ற அதிகாரி கவனித்தார். பத்து முதல் பதினைந்து கிராமங்களைச் சேர்த்து நிருவகித்தவர் '**கோபன்**' எனப்பட்டார்.


### படை நிருவாகம்

படை நிருவாகத்தைச் '**சேனாதிபதி**' என்ற தலைமைத்தளபதி கவனித்தார். யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை போன்ற



XII Ethics_Lesson 5.indd 87 16-03-2020 14:56:37

படைகள் முக்கியத்துவம் பெற்றன. கிரேக்க நாட்டறிஞர் **பிளினி**(Pliny) என்பவர் மௌரியர்களின் படையில் ஆறு லட்சம் காலாட்படையினரும், முப்பதாயிரம் குதிரைப்படை வீரர்களும், ஒன்பதாயிரம் யானைப்படைவீரர்களும், எட்டாயிரம் தேர்ப்படைவீரர்களும் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். கடற்படை மற்றும் போக்குவரத்து நிலைப்படை ஆகியவையும் இருந்தன. சேனாதிபதியின் கீழ் படைகளை **ஆயுதகரஅத்யக்ஷா** என்ற அதிகாரிகள் மேற்பார்வையிட்டனர்.



பிளினி

## நீதி மற்றும் காவல் நிருவாகம்

மௌரியர் கால நீதிமன்றங்கள் பற்றிக் கௌடில்யர், தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். மௌரியர் காலத்தில் நிறுவப்பட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் **தர்மஸ்தானியம்** என்றும், குற்றவியல் நீதிமன்றங்கள் **கண்டக சோதனங்கள்**(Civil Court) என்றும் அழைக்கப்பட்டன. நீதிபதிகள் தர்மாதிகாரி என்றழைக்கப்பட்டனர்.

## வருவாய் நிருவாகம்

நிலவரியே முதன்மையான வரியாக இருந்தது. விளைச்சல் வருவாயில் ஆறில் ஒரு பங்கு, வரியாக விதிக்கப்பட்டது. நீர்ப்பாசன வரி, படகுவரி, வனவரி, சுரங்கவரி என்று பலவரிகள் விதிக்கப்பட்டன. அயல்நாட்டு வாணிகத்தை முறைப்படுத்தும் விதமாகச் சுங்கவரி விதிக்கப்பட்டது. நிலவரி **பாகா** என்ற பெயரிலும், பழங்கள் மீதான வரி **பலி** என்ற பெயரிலும் அழைக்கப்பட்டன.

## ஒற்றர்முறை

மௌரிய மன்னர்களான சந்திரகுப்த மௌரியர், பிந்துசாரர் ஆகியோர் ஒற்றர்களை(Spy) நியமித்து நாட்டைக் கண்காணித்தனர். அசோகர் ஒற்றர் முறையைப் பரவலாக்கினார். மௌரியர் கால ஒற்றர்களைக் **குதபுருஷர்கள்** என்றழைத்தவர் கௌடில்யர் ஆவார்.

## மௌரியர்கள் காலச் சமூகநிலை

மௌரியர்கள் காலத்தில், சமூகத்தில் நிலவியிருந்த வர்ணாஸ்ரமமுறை மேலும் வலுவடைந்தது. இந்தியாவில் அலெக்சாந்தரின் படையெடுப்பிற்குப் பின்னர், கிரேக்கர்கள் இந்தியர்களுடன் திருமண உறவு வைத்துக் கொண்டனர். இதனால் இந்தோ – கிரேக்கம் என்ற புதிய சமூகப் பிரிவு தோன்றியது. இதனால் கிரேக்கப் பண்பாட்டுக் கூறுகள் இந்தியப்பண்பாட்டுக் கூறுகளுடன் ஒன்றிணைந்தன. மெகஸ்தனிஸ் என்பவர் இந்தியச் சமூகத்தில் தத்துவஞானிகள், தோட்டக்காரர்கள், கால்நடை வளர்ப்போர், கைவினைஞர்கள், இராணுவ வீரர்கள், கண்காணிப்பாளர்கள், மதிப்பீட்டாளர்கள் ஆகிய ஏழு பிரிவினர் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். மௌரியர் காலத்தில் புகழ்பெற்றிருந்ததட்சசீலப்பல்கலைக்கழகம்பல கல்வியாளர்களையும், ஆட்சியாளர்களையும் உருவாக்கியது. மௌரியர் காலத்தில் ஆணாதிக்கச் சமூகம் வலுப்பெற்றது. ஆனால், உயர்குடிப் பெண்கள், சுயம்வரம் உள்ளிட்ட உரிமைகளைப் பெற்றிருந்தனர். பருத்தி, கம்பளி போன்ற ஆடைகளையும், தங்கம் வெள்ளியால் ஆன அணிகலன்களையும் மக்கள் அணிந்தனர்.

## மௌரியர்கள் கால பொருளாதார நிலை

வேளாண்மை முக்கியத் தொழிலாக இருந்தது. விளைச்சல் அடிப்படையில் மக்கள் மீது பருவ மற்றும் ஆண்டு வரிகள் விதிக்கப்பட்டன. அரசின் விவசாயப் பண்ணைகளை '**சித்தியக்ஷா**' என்ற அதிகாரி நிருவகித்தார்.**நியார்கஸ்**(Nearchus)என்றகிரேக்கர் மௌரியர் கால கைத்தொழில்கள், மட்பாண்ட உற்பத்தித் தொழில் போன்றவை பற்றிப் புகழ்ந்து குறிப்பிடுகிறார். பெண்கள் பல்வேறு விதமான காதணிகளை அணிந்ததாகவும், உற்பத்தி செய்ததாகவும் **அர்ரியன்** (Arrian) என்பவர் குறிப்பிடுகிறார். கனிம வளங்கள் நிறைந்திருந்த



XII Ethics_Lesson 5.indd 88 16-03-2020 14:56:37

இடமான சோட்டாநாக்பூர் பீடபூமியிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட இரும்பு, செம்பு, வெள்ளி போன்ற உலோகங்களைக் கொண்டு ஆயுதங்களும், அணிகலன்களும் தயாரிக்கப்பட்டன. உலோக வேலை செய்வோர், தச்சுவேலை செய்வோர். மீன்பிடித் தொழில் செய்வோர் போன்றோர்கள் சமூகநிலையிலும், பொருளாதார நிலையிலும் முக்கியத்துவம் பெற்றிருந்தனர். சுரங்கத் தொழிலை அரசே ஏற்று நடத்தியது.

வணிகர்கள் தங்களுக்குள் **'ஸ்ரேனி'** என்ற வணிகக் குழுக்களை ஏற்படுத்திக் கொண்டனர். தட்சசீலம், கௌசாம்பி, பாடலிபுத்திரம், உஜ்ஜயினி போன்ற நகரங்கள், மௌரியர் கால முக்கிய வணிக மையங்களாகத் திகழ்ந்தன. **தாமிரலிப்தி** என்ற துறைமுகம் சிறப்பு பெற்றிருந்தது. பருத்தி, கம்பளியாலான ஆடைகள் முத்துகள் போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன. தங்கம், வெள்ளி போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன. வணிகர்கள் கிரீஸ், சிரியா, எகிப்து போன்ற நாடுகளுடன் வாணிப உறவு வைத்திருந்தனர். வணிகப் பரிமாற்றத்தில் **'நிஷ்கா'** என்ற தங்க நாணயமும், மயில், குன்று, வளர்பிறை பொறிக்கப்பட்ட **'பனா'** என்ற வெள்ளி நாணயமும், **கர்சபனா** என்றழைக்கப்பட்ட செப்பு நாணயமும் வழக்கத்திலிருந்தது.

## மௌரியர்கள் கால சமயநிலை

இந்து, சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களை மக்கள் பின்பற்றினர். இந்துக்களிடத்தில் உருவ வழிபாட்டு முறை அதிகரிக்கத் தொடங்கியது. கிருஷ்ணர், சிவன், இந்திரன் போன்ற கடவுளை மக்கள் வழிபட்டனர். கங்கை, யமுனை போன்ற நதிகளைத் தாயாகக் கருதி மக்கள் வழிபட்டனர். சந்திரகுப்த மௌரியர், பத்ரபாகு என்ற சமணத்துறவியால் சமணத்திற்கு மதமாற்றம் செய்யப்பட்டார். அதன் பிறகு அரசப்பதவியைத் துறந்து நாடு முழுவதும் சமண சமயத்தைப் பரப்பினார். அவர் தற்போதைய கர்நாடகத்திலுள்ள **சிரவணபெலகோலா** (மைசூருக்கருகில்) என்ற இடத்தில் உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்தார். அவரது மறைவுக்குப்பின் **'சந்திரபாஸ்டி'** என்ற இடத்தில் அவருக்குக் கோயில் கட்டப்பட்டது.

**சல்லேகனம்** – இது சமணத்துறவிகள் பின்பற்றும் உண்ணா நோன்பு முறையாகும். தம் வாழ்வைத் தாமாகவே முடித்துக் கொள்ள விரும்பும் சமணத்துறவிகள் வடதிசையை நோக்கி உண்ணாநோன்பிருந்து உயிர்நீங்கும்வரை கடுந்தவம் செய்வதை இந்நோன்பு முறை குறிப்பிடுகிறது.

கி.மு. (பொ.ஆ.மு.) 261 இல் நடைபெற்ற **கலிங்கப்போர்** வெற்றிக்குப்பின் அசோகர், உபகுப்தர் என்ற சமயத்துறவியால் பௌத்த சமயத்திற்கு மாற்றப்பட்டார். இவர் பௌத்த சமயத்தையும் அறக்கருத்துக்களையும் பரப்ப **தர்மமகாமாத்திரர்கள்** என்ற அதிகாரிகளை நியமித்தார். பௌத்த சமயத்தை மக்களின் சமயமாகப் பரப்புவதில் ஈடுபட்டார். தன் தலைநகரான பாடலிபுத்திரத்தில் **மொக்காலி புத்ததிசா** என்பவர் தலைமையில் அசோகர் மூன்றாவது புத்தசமய மாநாட்டைக் கூட்டினார். திபெத், சீனா, பர்மா போன்ற நாடுகளுக்குப் பௌத்த சமயத்தைப் பரப்பத் துறவிகளை அனுப்பினார். இலங்கையில் பௌத்த சமயத்தைப் பரப்ப தன் மகன் மகேந்திரனையும், மகள் சங்கமித்திரையையும் அனுப்பினார். பௌத்த சமயம் உலக சமயமாக மாற்றப்படுவதில், அசோகர் முக்கிய பங்கு வகித்தார். தாமும், புத்தரின் வாழ்வுடன் தொடர்புடைய லும்பினி, ரும்மிண்டி, நீக்லிவா, கயா, குசிநகரம் ஆகிய இடங்களுக்குச் சென்று வழிபட்டார். அசோகர் பரப்பிய அவரது கோட்பாடுகள் **அசோக தம்மம்** எனப்பட்டன. அதன்படி ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டியவை.

- தாய் தந்தைக்குப் பணிவிடை செய்தல். அகிம்சையைக் கடைப்பிடித்தல், உண்மையை நேசித்தல், ஆசிரியர்களைப் போற்றுதல், உறவினரை மதிப்புடன் நடத்துதல்



XII Ethics_Lesson 5.indd 89 16-03-2020 14:56:37

- சமயச் சடங்குகளைத் தவிர்ப்பதுடன், திருவிழாக்களில் விலங்குகள் பலியிடப்படுவதைத் தடுத்தல்.
- தர்மயாத்திரை மேற்கொண்டு தர்மத்தைப் பரப்புதல்
- பணியாளர்களையும், கைதிகளையும், அரசின் அதிகாரிகள் மனிதாபிமானத்துடன் நடத்துதல்.
- மன்னரையும், பிராமணர்களையும், சான்றோர்களையும் போற்றுதல்
- சமய சகிப்புத் தன்மையைக் கடைபிடித்தல்
- போரைத்தவிர்த்துத் தர்மத்தின்வழி நடந்து, வாழ்வில் வெற்றி பெறுதல் போன்றவற்றைக் கடைப்பிடிக்கவேண்டும் என்றார்.

## இலக்கியம்

மௌரியரின் ஆட்சிக்காலத்தில் சமஸ்கிருதம், பாலி, பிராகிருதம் போன்ற மொழிகள் வட இந்தியா முழுதும் சிறப்புப் பெற்றிருந்தன. தமிழ் தென்முனையில் வழக்கிலிருந்தது. இந்திய கிழக்குப் பகுதியில் பிராகிருத மொழியே அரசாங்க மொழியாக இருந்தது. இலக்கியத்திற்குச் சமஸ்கிருதமும், பேச்சுவழக்கிற்குப் பாலி மொழியும் மக்களிடத்தில் எளிமையாகக் கையாளப்பட்டன.


உங்களுக்குத் தெரியுமா?

**மௌரியக் காலத்தின் இலக்கியப் படைப்புகள்**

| | | |
|---|---|---|
| கௌடில்யர் | – | அர்த்த சாஸ்திரம் |
| பத்ரபாகு | – | கல்பசூத்திரம் |
| வ்யாதி | – | வியாக்கரணம் (இலக்கணம்) |
| பாணினி | – | அஸ்டத்யாயி |
| சுபந்து | – | வாசவதத்தா நாட்டிய தாரா (நாட்டிய கலை) |
| பிங்கலர் | – | சந்த சூத்திரங்கள் |
| வாமனர் | - | காவியலங்கார சூத்திரவிருத்தி |
| சிலாலின் கிருசாஸ்வர் | - | நாடக சூத்திரங்கள் |
| பௌத்த சமயநூல் | - | திரிபீடகங்கள் |
| வேதாந்த நூல்கள் | - | கிருஹ்ய சூத்திரம் |

## நுண்கலைகள்


ஸ்தூபிகள், சைத்தியங்கள், விகாரங்கள் போன்றவை மௌரியர் கால கட்டடக் கலையில் முக்கியத்துவம் பெற்றன. இறந்தவர்கள் (பௌத்த ஞானிகள், பௌத்த சமயத்தைப் பின்பற்றிய அரசர்கள்) நினைவாக எழுப்பப்பட்ட வட்ட வடிவக் குவிமாடம் கொண்ட கட்டடங்களே **ஸ்தூபிகள்** எனப்பட்டன. பௌத்தர்களின் தியானக் கூடங்கள் '**சைத்தியங்கள்**' எனப்பட்டன. பௌத்த குருமார்களின் விடுதிகள் '**விகாரங்கள்**' எனப்பட்டன. மௌரியர்கள் ஸ்தூபிக்களை அமைப்பதில் அதிக ஆர்வம் காட்டினர். அவர்கள் காலத்தில் ஸ்தூபிகள் கட்டப்பட்டன.



சாஞ்சி ஸ்தூபி



சைத்தியங்கள்



விகாரங்கள்

இவற்றில் அசோகர் காலத்தில் போபால் அருகே '**சாஞ்சி**' என்ற இடத்தில் கட்டப்பட்ட ஸ்தூபி புகழ்பெற்றதாகும்.



XII Ethics_Lesson 5.indd 90 16-03-2020 14:56:38

இந்த ஸ்தூபி அடர்வெண்சாம்பல் நிறக்கற்களால் கட்டப்பட்டது. இது 121½ அடி அகலம், 77½ அடி உயரமும் கொண்டது. இதன் நான்கு பக்கங்களிலும் உயரமான நுழைவாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தூண்கள் யாவும் சிற்பக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். கல்லாலான ஸ்தூபிகளையும், குகைக் கோயில்களையும் கட்டடங்களையும் மெருகேற்றிப் பளபளப்பாக இன்றும் கண்ணாடிபோல் மின்னும் வகையில் செய்துள்ளனர்.

அசோகர் தம்முடைய ஏழாவது தூண் கல்வெட்டில் "தர்மமானது நெடுநாள் வாழும் பொருட்டு எங்கெல்லாம் கற்றூண்களும், கற்பாறைகளும் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் தர்மம் ஆணைகள் பொறிக்கப்படுவதாக" என்று கூறியுள்ளார். ஆகவே, பல இடங்களில் காணப்படும் தூண்களின் அமைப்பையும், இடத்தையும் கருதி, அங்கெல்லாம் கல்வெட்டுகளைப் பொறிக்கச் செய்தார். சாஞ்சி ஸ்தூபியைப் பின்பற்றி மற்றொரு ஸ்தூபி இலங்கையிலுள்ள அனுராதபுரத்தில் கட்டப்பட்டது. சாரநாத், லௌரியாநந்தன்கர், இராம்பூர்வா போன்ற இடங்களில் எழுப்பப் பெற்றக் கற்றூண்கள் சிறப்பானவையாகும். இத்தூண்களில் திமிலுடன் கூடிய எருது, சிங்கம், போன்ற உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

## மௌரியர் கால கலை, கட்டடக்கலை



சாரநாத் கற்றூண்

மௌரியர்கள் தங்கள் கலை, கட்டடக்கலையால் மிகவும் புகழ்பெற்றனர். **சாரநாத்தில்** காணப்படும் கற்றூண் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இத்தூணின் அடிப்பகுதி கவிழ்ந்த நிலையில் உள்ள ஒரு தாமரை மலர் அல்லது மணி போல் காணப்படுகிறது. அதற்கு மேல் நான்கு சக்கரங்களைப் பக்கவாட்டில் கொண்ட வட்ட வடிவ முரசு போன்ற அமைப்பு காணப்படுகிறது. தர்ம சக்கரம் என்று அழைக்கப்படும் அந்தச் சக்கரங்களில் 24 ஆரங்களும் நான்கு பக்கங்களிலும் சிங்கம், குதிரை, எருது மற்றும் யானை உருவங்களும் காணப்படுகின்றன. முரசின் மேல்பகுதியில், நான்கு சிங்கங்கள் ஒன்றையொன்று பின்புறம் ஒட்டி நிற்பதுபோல் அமைந்துள்ளன. மௌரியர்கால புகழை வெளிப்படுத்தும் இந்தக் கலைப்படைப்பு, நமது நாட்டின் தேசிய சின்னத்திலும், ரூபாய் நோட்டுகளிலும் மற்றும் நாணயங்களிலும் இடம்பெற்றுள்ளது. தர்மசக்கரம் நம் தேசியக்கொடியை அலங்கரிக்கின்றது.

**சாரநாத் கற்றூண்:** இக்கற்றூணில் யானை, திமிலுடன் கூடிய எருது, குதிரை, சிங்கம் ஆகிய விலங்குகளின் உருவங்கள் ஓடும் நிலையில் பொறிக்கப்பட்டுள்ளன. இவை மூலம் புத்தரின் வாழ்வில் நடந்த நான்கு முக்கிய நிகழ்வுகள் குறிப்பிடப்படுகின்றன. அவை

- யானை – புத்தரின் அன்னை மாயாதேவி கனவில் வெள்ளையானையைக் கண்டதை நினைவுபடுத்துகிறது.
- எருது – இளவரசர் சித்தார்த்தரின் (புத்தர்) இளமைக்கால ஆசைகளைத் தெரிவிக்கிறது.
- குதிரை – சித்தார்த்தர் (புத்தர்) ஆசைகளைத் துறந்து, அரண்மனையை விட்டு வெளியேறிய நிகழ்வைக் குறிக்கிறது.
- சிங்கம் – சாக்கியர்களின் சின்னமாக விளங்கும் இது, புத்தரின் சாதனைகளைக் குறிக்கிறது.



XII Ethics_Lesson 5.indd 91 16-03-2020 14:56:38



பராபர்குகை

அசோகர் மற்றும் அவரது பெயரன் தசரதன் ஆகியோரால் அவர்களுக்குக் கொடையாக அளிக்கப்பட்டுள்ள பராபர்குகைகள் நம் நாட்டின் பாரம்பரியச் சின்னங்களில் ஒன்றாகத் திகழ்கின்றன.

### இந்தியப்பண்பாட்டிற்கு மௌரியர்களின் கொடை

- மௌரியர்களின் ஆட்சி முறையில் மைய அரசு, தலைமைச் செயலகம், மாநில அரசுகள், நிதி, நீதி நிருவாகம், பொதுப்பணித்துறை, நகராட்சி முறை போன்றவை நமக்கு அளிக்கப்பட்டுள்ள கொடைகளாகும்.
- தட்சசீலம், உஜ்ஜயினி, காசி போன்ற மௌரியர் கால பல்கலைக்கழகங்கள் இன்றும் நமது இந்தியப்பண்பாட்டு மையங்களாகச் சிறந்து விளங்குகின்றன.
- இந்துதர்மக் கோட்பாடுகளையும் அன்பு, அஹிம்சை போன்ற பௌத்த சமய நெறிகளையும் வெளிநாடுகளில் பரப்பி, இந்தியப்பண்பாட்டிற்குப் பெருமை சேர்த்தவர்கள் மௌரியப் பேரரசர்களே ஆவர்.
- மௌரியர்கள் கல்வி, கலை, இலக்கிய வளர்ச்சியில் கவனம் செலுத்தியது போன்று, பிராகிருதம் (ஆட்சிமொழி) சமஸ்கிருதம் (இலக்கியமொழி) பாலி (எளிய மக்கள் பேசும் மொழி) போன்ற மொழிகளின் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுத்தனர்.
- கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம், இலக்கண நூலான வியாக்கரணம் போன்ற நூல்கள் இந்தியப்பண்பாட்டிற்கு மௌரியர் காலத்தில் வழங்கப்பட்ட கொடைகளாகும்.
- அசோகரின் தர்மக்கோட்பாடுகளான அகிம்சை,சத்தியம்,தயை(இரக்கம்),தானம் போன்றவை இந்தியப்பண்பாட்டிற்கு வழங்கப்பட்ட பிற கொடைகளாகும்.

## 5.2 குஷாணர்காலப் பண்பாடு

குஷாணர்கள் என்போர் யூச்சி என்ற மரபைச் சார்ந்தவர்கள். இவர்களின் காலம் இந்தியப்பண்பாட்டு வரலாற்றில் கட்டடக்கலையில் சிறப்புற்று விளங்கிய காலமாகும். இம்மரபின் தலைசிறந்த மன்னர் **கனிஷ்கர்** ஆவார். இவரது காலத்தில் இந்தியப்பண்பாட்டில் **காந்தாரக்கலையும்** (Gandhara Art), பௌத்த சமயமும் வளர்ச்சி பெற்றிருந்தன.

### சான்றுகள்

- குஷாணர்கள் காலவரலாற்றைஅறிவதற்கு அவர்கள் வெளியிட்ட நாணயங்கள் சான்றுகளாக அமைந்துள்ளன.
- பௌத்த சமயநூலான மகாவிபாஷம், குஷாணர்களின் சமய நிலையைப் பற்றித் தெரிவிக்கிறது.
- காந்தாரக்கலை, குஷாணர்களின் கலையையும், பண்பாட்டையும் வெளிப்படுத்துகிறது.
- சீனப்பயணி யுவான்சுவாங்கின் பயணக்குறிப்புகள், குஷாணர்களின் காலவரிசையை அறிந்துகொள்ள உதவியாக உள்ளன.

### முக்கிய அரசர்கள்

- முதலாம் காட்பீசஸ், குஷாண (மரபைத் தோற்றுவித்தவர்)
- கனிஷ்கர் (புகழ்பெற்ற மன்னர்)
- வாசுதேவர் (கடைசி மன்னர்)



XII Ethics_Lesson 5.indd 92 16-03-2020 14:56:39

## குஷாணர்களின் ஆட்சி முறை

அரசனே நாட்டின் தலைவனாக விளங்கினார். அரசர்கள் **மகேசுவரன், தேவபுத்திரன்** போன்ற விருதுப் பெயர்களைச் சூட்டிக்கொண்டனர். அரசனுக்குப் பின் மூத்த மகன் அரசனாவது **பிறங்கடை** (வாரிசு) உரிமையாகும். பரந்த பேரரசு **சத்ரப்புகள், அகாரா, ஜனபதா, தேசா** என்ற பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. மதுரா, காசி, கௌசாம்பி, அயோத்தி ஆகிய பகுதிகள் சிறப்புற்று விளங்கின. மகாசேனாதிபதி என்பவர், நிருவாகத்தில் முக்கிய இடம் வகித்தார்.

## சமுதாயம்

குஷாணர் கால சமுதாயத்தில், வருணாசிரமமுறை நடைமுறையில் இருந்தது. இருப்பினும், சமுதாயத்தில் பல தரப்பட்ட தொழிலாளர்களும் வணிகர்களும் இருந்துள்ளனர். சமூகத்தில் பெண்கள் உயர்ந்த நிலையில் காணப்பட்டனர். வீரக் கழலணிதல், கையில் கங்கணம் கட்டுதல், காதணி போன்றவற்றை ஆண்கள் அணிந்திருந்தனர். மற்போர் செய்தல் மற்றும் உடல் வலிமையை வளர்க்கும் விளையாட்டுகள் விளையாடப்பட்டன.

## பொருளாதார நிலை

நாட்டின் முக்கிய தொழிலாக வேளாண்மை விளங்கியது. வேளாண்மை சார்ந்த பிற தொழில்களும் வளர்ச்சி பெற்றிருந்தன. குஷாணர்கள் காலத்தில் உள்நாட்டு வாணிகமும், அயல்நாட்டு வாணிகமும் தடையின்றி நடந்தன. உரோம நாட்டுடன் நடந்த வணிகத்தால் அந்நாட்டுத் தங்கம் இந்தியச் சந்தைகளில் மிகுதியாகக் காணப்பட்டன. இந்தியாவின் மஸ்லீன் துணி, ரோம் நாட்டில் மிகுதியாக விற்பனையாயிற்று. தொழிற்கழகங்களும், வாணிகக்கழகங்களும் செயல்பட்டன. இவ்வணிகக் குழுவின் தலைவனாகப் **பிரமுக்** என்பவர் செயல்பட்டார்.

## சமயநிலை

குஷாணர் காலத்தில் பௌத்தசமயம், இந்துசமயம், சமணசமயம் ஆகியவை செல்வாக்குப் பெற்றிருந்தன. இவர்கள் சமயப்பொறையைக் கடைப்பிடித்தனர். இக்காலத்தில்தான், மகாயான பௌத்த சமயத்தின் மொழியாகச் சமஸ்கிருதம் இருந்தது. இந்து சமயத்திற்கு நிகராகப் பௌத்த சமயமும் வளர்ச்சி பெற்றிருந்தது.

## நான்காவது பௌத்த சமய மாநாடு

இப்பௌத்த சமய மாநாடு, காஷ்மீரிலுள்ள குந்தல் வனத்தில் **வசுமித்திரர்** தலைமையில் நடைபெற்றது. அஸ்வகோசர் முன்னிலை வகித்தார். இம்மாநாட்டில் பௌத்தக் பீடகங்களுக்கான விளக்க உரை தொகுக்கப்பட்டுள்ளது. இவ்விளக்கவுரை **விபாஷங்கள்** எனப்பட்டன. மேலும், மகாயான பௌத்த கருத்துகளைப் பரப்ப நெறிமுறைகள் வகுக்கப்பட்டன. புத்த சமயம் இருபிரிவுகளாகப் பிரிந்தது. (ஹீனயானம் – மகாயானம்) ஹீனயானத்தைப் பின்பற்றியவர்கள் மகாவிபாஷம் என்ற பௌத்த சமய தத்துவ நூலை செப்புப் பட்டயத்தில் எழுதினர். இவர்கள் பௌத்த ஸ்தூபிகளை எழுப்பினர். மகாயானம் மத்திய ஆசியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளிலும், ஹீனயானம் இலங்கை, பர்மா, தாய்லாந்து மற்றும் தென்கிழக்காசிய நாடுகளிலும் பரவின.

## மொழியும் இலக்கியமும்

குஷாணர்கள் காலத்தில் சமஸ்கிருதமொழி செல்வாக்குப் பெற்றிருந்தது. இவர்கள் காலத்தில் பல சமஸ்கிருத நூல்கள் எழுதப்பட்டன. அஷ்வகோஷரால் எழுதப்பட்ட **புத்தசரிதம், சௌந்தரநந்தம்** சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டவையாகும். **நாகார்ஜுனர்** எழுதிய **மத்தியமிகசூத்திரம்**, வசுமித்திரர் எழுதிய மகாவிபாசசரித்திரம் போன்ற நூல்கள் இக்காலத்தவையாகும்.

## கலை, கட்டடக்கலை

கனிஷ்கர், பெஷாவர் என்ற நகரில் ஸ்தூபிகளை எழுப்பினார். கனிஷ்கபுரம் (புருஷபுரம்) என்ற புதிய நகரை நிர்மாணித்தார்.

கனிஷ்கர் காலத்தில் காந்தாரக்கலையும் மதுரா சிற்பக்கலையும் சிறப்புப் பெற்று விளங்கின.

## காந்தாரக்கலை



மதுரா கலைபாணி

காந்தாரப்பகுதியில் தோன்றி வளர்ந்த கலையே காந்தாரக்கலையாகும். இந்தியச் சிற்பக்கலையும் கிரேக்கக்கலையும் ஒன்றிணைந்து உருவான கலையே **காந்தாரக்கலை** ஆகும். இக் கலை காந்தாரப் பகுதியில் தோன்றி வளர்ந்ததால் இப்பெயர் பெற்றது.

## காந்தாரக்கலையின் சிறப்பம்சங்கள்

- மனித உருவத்தில் தசைகள், மீசை, சிகை தெரியும்படி உருவத்தை வடித்தல்.
- தடித்த ஆடைகள் அவற்றின் மடிப்புகள் தெரியும்படி வடிவமைத்தல்.
- அழகான சிற்பங்கள், அழகான ஆபரணங்கள் மற்றும் சிற்ப நுணுக்கங்கள் மூலமாக கருத்துகளை உணர்த்துதல்.
- இக்கலையின் முக்கிய கருப்பொருள், 'சிற்பக்கலை வாயிலாகவே மகாயான பௌத்த சமயக் கோட்பாடுகளைப் பரப்புதலாகும்'.
- நின்ற வடிவில் புத்தரது சிலை(Mathura Art) வடிவமைக்கப்பட்டிருத்தல்.
- காந்தாரக் கலையில் சிலையின் தலைக்குப் பின்னால் வட்ட வடிவ ஞான ஒளியை இடம்பெறச் செய்தல்.

## மதுரா கலைபாணி



காந்தாரக்கலை

தற்போதைய உத்திரப்பிரதேசத்திலுள்ள மதுரா என்னுமிடத்தில் தோன்றி வளர்ந்த கலையே மதுராகலையாகும். தொடக்கக் காலத்தில் மதுரா கலைபாணி, உள்நாட்டு கலைநயத்துடன் வளர்ச்சி பெற்றது. புத்தரது உருவங்களில் குறிப்பாக அவரது முகம் ஆன்மிகப் பொலிவு நிறைந்து காணப்பட்டது. இத்தகைய பொலிவு காந்தாரக்கலைச் சிற்பங்களில் இல்லை எனலாம். இவ்வகைக் கலைபாணியில் அமைக்கப்பட்ட சிவன், பார்வதி, விஷ்ணு, லட்சுமி போன்ற கடவுளர்களின் உருவங்கள், மதுராவில் கலைநயத்துடன் செதுக்கப்பட்டன. யக்சினிகள், அப்சரஸ்கள் ஆகிய உருவங்கள் மதுரா கலைபாணியின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

## இந்தியப்பண்பாட்டில் குஷாணர்களின் கொடை

- குஷாணர்கள் காலத்தில் பௌத்த சமயம் சீனா, ஜப்பான், தென் கிழக்காசிய நாடுகளில் பரவியது.
- இந்தியாவில் காந்தாரக்கலை, மதுராகலை போன்றவை புதிதாகத் தோன்றின.
- பாலிமொழிக்கு பதிலாகச் சமஸ்கிருத மொழியில் பல நூல்கள் இயற்றப்பட்டன.



XII Ethics_Lesson 5.indd 94 16-03-2020 14:56:39

- கனிஷ்கர் காலத்தில், நாடு அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் அடைந்ததால் இவரை **இரண்டாம் அசோகர்** என்றழைத்தனர்.
- இந்து சமயம், பௌத்த சமயம் மற்றும் பிறசமயங்களும் வளர்ச்சி பெற்றன.
- இக்காலத்தில் புத்தரது உருவ சிலைகள் நின்ற நிலையில் வடிக்கப்பட்டன.
- இச்சிலையின் தலைக்குப் பின்னால் வட்டவடிவ ஞானச்சுடர் இக்காலம் முதல் செதுக்கப்பட்டது. இம்முறை பிற்காலத்தில் இந்துக் கடவுளர் சிலை உருவாக்கத்தில் பின்பற்றப்பட்டது.

## 5.3 குப்தர்கால பண்பாடு

கி.பி. (பொ.ஆ.) 3–ஆம் நூற்றாண்டின் இறுதியில் குப்தப்பேரரசு **ஸ்ரீகுப்தர்** என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. முதலாம் சந்திரகுப்தர், முதலாம் சமுத்திரகுப்தர், இரண்டாம் சந்திரகுப்தர், முதலாம் குமாரகுப்தர் போன்றோர்கள் இப்பேரரசின் சிறந்த மன்னர்களாகத் திகழ்ந்தனர். இந்தியப்பண்பாட்டிற்குக் குப்தர்கள் பல வகையிலும் உதவினர். ஆட்சிமுறை, சமூக, பொருளாதார, சமய, நுண்கலைகள், இலக்கியங்கள், அறிவியல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு வகையான பண்பாட்டுக் கூறுகளில் தங்களின் முத்திரையைப் பதித்துள்ளனர்.

### சான்றுகள்



மெஹ்ரோலி இரும்புத்தூண்

விசாகதத்தர், காளிதாசர் ஆகியோரின் இலக்கியங்களும், அலகாபாத் கற்றூண் கல்வெட்டு, மெஹ்ரோலி இரும்புத்தூண் போன்றவை சீனப்பயணி பாஹியானின் '**போகோகி**' எனப்பட்ட பயணக்குறிப்புகளும், நாணயங்கள் மற்றும்வரலாற்றுச்சின்னங்களும் குப்தர்களைப் பற்றிஅறிவதற்கான சான்றுகளாகத் திகழ்கின்றன.

> **பாஹியானின் குறிப்புகள்**
>
> இந்தியாவிற்கு வந்த முதல் சீனப்பயணி பாஹியான் ஆவார். இவர் பெஷாவர், காசி, கயா உள்ளிட்ட இடங்களுக்குச் சென்று பார்வையிட்டார். இவர் இந்தியாவில் 9 ஆண்டுகள் தங்கியிருந்தார். பாடலிபுத்திரத்தில் 3 ஆண்டுகளிருந்து சமஸ்கிருத மொழியையும், பௌத்த இலக்கியங்களையும் கற்றார். இவருடைய குறிப்புகள் இரண்டாம் சந்திரகுப்தரின் கால அரசியல், சமூக, பொருளாதார சமய நிலைகளைப் பற்றிக் கூறுகின்றன.

### ஆட்சிமுறை

குப்தப் பேரரசர்கள் பரம பட்டாரகா, மகாராஜாதிராஜா, பரமேஸ்வரா, சாம்ராட் போன்ற விருதுப் பெயர்களைச் சூட்டிக் கொண்டனர். பேரரசருக்குக் கீழ் முதலமைச்சர், படைத்தலைவர் உள்ளடக்கிய அமைச்சரவையும் இருந்தது. இந்த அமைச்சர்கள் அரசனுக்கு ஆலோசனை வழங்கினர். குப்தர் காலத்தில் குமாரமாத்யர்கள் என்ற வருவாய்த்துறை உயரதிகாரிகள் பற்றியும் மகாசந்திவிக்ரஹா என்ற வெளியுறவுத் துறை அமைச்சர் பற்றியும் குப்தர் காலக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. நீதித்துறை மற்றும் ராணுவத்துறையில் பொறுப்பு வகித்த அமைச்சர்களை முறையே தண்டநாயகர், மகாதண்டநாயகர் என்ற பெயர்களால் குறிப்பிட்டதை அலகாபாத் கற்றூண் கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது. குப்தர்கள்கால



XII Ethics_Lesson 5.indd 95 16-03-2020 14:56:40

குதிரைப்படைத் தலைவர், **மகாஅஸ்வபதி** என்றழைக்கப்பட்டார்.

**அலகாபாத் கற்றூண் கல்வெட்டு**

இக்கல்வெட்டு அரிசேனர் என்பவரால் 33 வரிகளில் பொறிக்கப்பட்டது. இதில் முதலாம் சமுத்திரகுப்தரின் போர் வெற்றிகள், படைத்திறன் ஆகியவை பற்றியும், குப்த பேரரசின் ஆட்சி எல்லைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன.

## குப்தர்களின் ஆட்சிப் பிரிவுகள்

குப்தர்களின்பேரரசு தேசம்அல்லதுபுக்தி என்ற பெயர்களைக் கொண்ட மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. இம்மாநிலங்களை **உபாரிகா** என்ற ஆளுநர்கள் ஆட்சி செய்தனர். இவர்கள் பேரரசரால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உபாரிகா மற்ற அதிகாரிகளை நியமித்தார். **உபாரிகா** மாநில நிருவாகத்துடன் யானைப்படை, குதிரைப்படை வீரர்களையும் படைத்துறை நிருவாகத்தை மாநில அளவில் நிருவகித்தார். லோகபாலா என்ற அலுவலரைப் பற்றி ஈரன் என்ற கல்வெட்டுச் செய்தி குறிப்பிடுகிறது. மாநிலங்கள் விஷயம் என்ற மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. இவற்றை ஆட்சி செய்தவர்கள் விஷயபதிகள் எனப்பட்டனர். இவர்கள் மாநில ஆளுநரால் நியமிக்கப்பட்டனர்.

மாவட்டங்கள் பூமி, பதாகா, பீடா போன்ற பல்வேறு வித ஆட்சிப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. இவற்றை ஆயுக்தகா, மகதரா போன்ற அதிகாரிகள் ஆட்சி செய்தனர். மகதராவின் கீழ் எட்டு உறுப்பினர்களைக் கொண்ட குழு செயல்பட்டது. இரண்டாம் சந்திர குப்தர் காலத்தில் **பஞ்ச மண்டலி** என்ற குழுமத்தைப் பற்றிய குறிப்புகள் சாஞ்சிக் கல்வெட்டில் காணப்படுகின்றன. மாவட்ட அளவிலிருந்து, ஆலோசனைக் குழு விஷயபதிகளுக்கு நிருவாக முறையில் ஆலோசனை கூறியது. இக்குழுவிற்கு அத்யக்ஷா என்று பெயர். கிராமப் பஞ்சாயத்துகளும் சிறப்புப் பெற்றுத் திகழ்ந்தன. வங்காளம், பீகார், உத்திரப்பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகள், மன்னரின் நேரடி நிருவாகத்தின் கீழ் செயல்பட்டன. குப்தர்கள் ஆட்சி முறை வாகாடகர்கள், காலச்சூரிகள், சாளுக்கியர்கள், ராஷ்டிரகூடர்கள் போன்றோர்க்கு முன்னோடியாகத் திகழ்ந்தது எனலாம். குப்தப்பேரரசின் பல்வேறு நிருவாக முறைகளை இவர்கள் பின்பற்றினர்.

## படை நிருவாகம்

குப்தர்கள் காலத்தில் காலாட்படை, குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை ஆகிய படைகள் இருந்தன. மன்னரால் சிறப்பாக வழி நடத்தப்பட்ட இப்படை நிருவாகம் குப்தர்களின் வெற்றிக்குக் காரணமாகத் திகழ்ந்தது. காலாட்படையின் தலைவர் **பாலாதிகிருதியா** என்றழைக்கப்பட்டார். குதிரைப்படைத் தலைவர் **சேனாதிபதி** என்றழைக்கப்பட்டார். ராணுவக் கிடங்குகளின் தலைமை அலுவலகம் **ரணபந்தகா** எனப்பட்டது.

மகாபிரதிஹாரா என்ற அரண்மனைக் காவலர்களும், கத்யதபகிதா என்ற அரச சமையலறைக் கண்காணிப்பாளரும் முக்கிய இடம் பெற்றனர். அமாத்யா, சச்சிவா போன்ற அலுவலர்கள் நிருவாக அதிகாரிகளாகப் பணியாற்றினர். ஒற்றர்களைக் கொண்ட உளவு அமைப்பு **துடாகா** என்றழைக்கப்பட்டது.

## சமூக நிலை

குப்தர்கால சமூகநிலை சிறந்து விளங்கியது. குடும்பங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்தன. வர்ணாஸ்ரமமுறை அடிப்படையிலான குப்தர்கள்கால சமூகத்தில், பல்வேறு தொழிற்பிரிவு மக்களும் வாழ்ந்தனர். உயர்குடியினர்கள் சமூகத்தில் அனைத்து உரிமைகளையும் பெற்றிருந்தனர். பெண்கள் உயர்ந்த நிலையில் வைத்து மதிக்கப்பட்டனர், இவர்கள் கல்வியறிவு பெற்றுச் சமூகத்தில் சிறந்து விளங்கினர். **ஆச்சார்யா** எனப்பட்ட ஆசிரியர்களுக்குச் சமூகத்தில் உயர்ந்த மதிப்பிருந்தது. பெண்கள் காதணிகள், கழுத்தணிகள், வளையல்கள்



XII Ethics_Lesson 5.indd 96 16-03-2020 14:56:40

போன்றவற்றை அணிந்தனர். தங்கம், வெள்ளி போன்றவற்றினாலான ஆபரணங்களுக்கும் மக்களிடையே பெரும் வரவேற்பு இருந்தது. போர்க்கைதிகள், கடனாளிகள், சூதாட்டத்தில் தோற்றவர்கள் அடிமைப்படுத்தப்பட்டனர்.

## குப்தர்கள் கால பொருளாதார நிலை

குப்தர்கள் காலத்தில் வேளாண்மையே முக்கிய தொழிலாக விளங்கியது. நெல், கோதுமை, பார்லி போன்ற தானியங்கள் பயிரிடப்பட்டன. விளைச்சல் மற்றும் நிலத்தின் தன்மை அடிப்படையில் நிலம் ஐந்து வகைகளாகப் பிரிக்கப்பட்டது. நீர்ப்பாசனத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டது. ஜலநிர்கமா என்ற வடிகால்கள் மூலம் நீர்ப் பாசனப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டது. சுதர்சன ஏரி குப்தர்கள் கால நீர்ப்பாசனத்தில் முக்கிய இடம் பிடித்தது. விளைச்சலில் ஆறில் ஒருபங்கு மக்களிடமிருந்து வரியாகப் பெறப்பட்டது. அவ்வரி **பாகா** எனப்பட்டது. **கரா** என்ற வரி, கிராமங்களில் வாழ்வோர் மீது விதிக்கப்பட்டது. **ஹிரண்யா** என்ற வரி, தங்க நாணயங்கள் வைத்திருப்போர் செலுத்தும் வரியாகும். குப்தர்கள் காலத்தில் சிறந்து விளங்கிய உலோகத் தொழில், சுரங்கத் தொழில் பற்றிய செய்திகளை வராகமிகிரர், காளிதாசர் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். இக்காலத்தில் பீகாரிலிருந்து இரும்புப் படிவுகளும் ராஜஸ்தானிலிருந்து செம்புப் படிவுகளும் கண்டறியப்பட்டன.

வணிகர்களுக்குள் **வணிக், சிரேஷ்டி, சார்த்தவஹா** என்ற மூன்று பிரிவினர் இருந்தனர். சார்த்தவாஹா இலாபம் வேண்டி ஊரெங்கும் வாணிகம் செய்தனர். வணிக், சிரேஷ்டி என்போர் உள்ளூர் வணிகர்களாவர்.

உஜ்ஜயினி, காசி, வைசாலி, கயா, பிரயாகை (அலகாபாத்) மதுரா ஆகிய இடங்கள் குப்தர்கள் கால முக்கிய வணிக மையங்களாகத் திகழ்ந்தன. கங்கை, கிருஷ்ணா, காவிரி, பிரம்மபுத்திரா ஆகிய நதிகள் உள்நாட்டு நீர்வழி வாணிகத்திற்குப் பயன்பட்டன. கல்யாண், புரோச், காம்பே, தாமிரலிப்தி ஆகிய துறைமுகப் பகுதிகளிலிருந்து அரேபியா, பாரசீகம் போன்ற நாடுகளோடு அயல்நாட்டு வாணிபம் நடைபெற்றது.

## சமய நிலை

குப்தர்கள் காலத்தில் இந்து சமயம் முழுமையடைந்தது. சமண பௌத்த சமயங்களும் மக்களால் பின்பற்றப்பட்டன. தசாவதாரக் கதைகள் போன்றவற்றைக் கேட்டறிந்த மக்களுக்கு, இந்து சமயத்தின் மீது மிகுந்த மதிப்பு ஏற்பட்டது. புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவை கதைகளாகக் கூறப்பட்டன.

கங்கைச்சமவெளிப் பகுதிகளைப் பாஹியான் என்ற சீனப்பயணி, '**பிராமணர்களின் பூமி**' என்று குறிப்பிட்டுள்ளனர். குப்த மன்னர்கள் பெரும்பான்மை இந்துவாக இருந்தாலும் சமய சகிப்புத் தன்மையுடன் வாழ்ந்தனர்.

இந்து சமயத்தில் புதிய ஆன்மீக நம்பிக்கைகள் குப்தர்கள் காலத்தில் தோன்றின. மகாவிஷ்ணுவின் வாகனமாகக் கருடனையும் வணங்கினர். பாகவதம் என்ற பெயரில் மஹாவிஷ்ணு வழிபாடும் லட்சுமி வழிபாடும் புதிய சமயச் சடங்குகளுடன் வட இந்தியா முழுவதும் பரவின.

மஹாவிஷ்ணுவின் தசாவதாரக் கருத்துகள், மக்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தன. மேலும், இராமாயணத்தின் நாயகனான 'இராமனை' மக்கள் கடவுளாக வழிபட்டனர். சிவ வழிபாடும் மக்களால் பின்பற்றப்பட்டது. வாகாடக, கடம்பவம்ச மன்னர்கள் சிவ வழிபாட்டைப் பெரிதும் பின்பற்றினர். பாசுபதம் என்ற சிவ வழிபாட்டுப் பிரிவு வட இந்தியாவில் பரவியது. பிரம்மன், சூரியன், கார்த்திகேயன், கணேசன், துர்க்கை, சரஸ்வதி போன்ற கடவுளரும் மக்களால் வழிபடப்பட்டனர். பசு, பாம்பு (நாகவழிபாடு) போன்ற விலங்குகளையும் மக்கள் வழிபட்டனர். கங்கை, யமுனை போன்ற நதிகளையும் புனிதமாகக் கருதி வழிபட்டனர். பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்தி வழிபாடும், இந்திரன், வருணன், எமன் போன்ற கடவுளர் வழிபாடும் சிறப்புப்பெற்றிருந்தன. காசி, பிரயாகை போன்ற இடங்கள் புண்ணியத்

தலங்களாகக் கருதப்பட்டன. புனிதத் தலங்களுக்கு யாத்திரை செல்லும் வழக்கம், மக்களிடையே பரவலாக இருந்தது.

குப்தர்கள் காலத்தில் இந்து சமயம் மெசபடோமியா பகுதிகளிலும், ஜாவா, சுமத்ரா, போர்னியோ ஆகிய தென்கிழக்காசிய நாடுகளிலும் பரவியது. '**குப்தர்கள் காலம் இந்தியச் செவ்வியல் கலைகளின் காலம்**' என்றழைக்கப்படுகிறது. இந்துக் கடவுளர்களுக்குக் கோயில்கள் கட்டப்பட்டன.

**பாலித்தீவு**

குப்த பேரரசில் இந்துசமயம் இந்தியாவிலிருந்து பாலித்தீவிற்குப் பரவியது. இந்தியப்பண்பாடும் விழாக்களும் இன்றளவும் அங்குள்ள மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன. கி.பி. (பொ.ஆ.) 7–ஆம் நூற்றாண்டில் இந்தியப்பண்பாடு சிறப்புற்று இருந்ததாகச் சீனப்பயணி இட்சிங், தமது குறிப்பில் குறிப்பிடுகிறார்.

## பௌத்த சமணசமயங்கள்

குப்தர்கள் காலத்தில், இந்து சமயம் செல்வாக்கு பெற்றிருந்தாலும் பௌத்தமும், சமணமும் மக்களால் பின்பற்றப்பட்டு வந்தன. வங்காளம், பீகார், உத்திரப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் பௌத்த சமயம் செல்வாக்குடன் திகழ்ந்தது. **வசுபந்து** என்ற பௌத்த சமய அறிஞரை முதலாம் சமுத்திரகுப்தர் ஆதரித்தார். புத்தகோசர் என்ற இலங்கை நாட்டுப் பௌத்தசமய அறிஞர், குப்தர்காலத்தில் புகழ்பெற்றிருந்தார். காஷ்மீர், காந்தாரம் போன்ற பகுதிகளில் இந்து சமயமும், பௌத்த சமயமும் செல்வாக்கு பெற்றிருந்தன. அஜந்தா, எல்லோரா குகை ஓவியங்களும் வட இந்தியாவில் ஸ்தூபிகளும் பௌத்த சமயத்தை மக்கள் பின்பற்றியதற்கான ஆதாரமாகத் திகழ்கின்றன.

## சமண சமயம்

சமணசமயம் மதுரா, வல்லபி, உதயகிரி போன்ற இடங்களில் செல்வாக்கு பெற்றிருந்தது.

## இலக்கியம்

குப்தர் காலத்தில் பல கவிஞர்கள் பல்வேறு வகையான இலக்கியங்களைப் படைத்து வடமொழியில் புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர்.

- காளிதாசர் – சாகுந்தலம், விக்கிரமோர்வசியம், மாளவிகாக்னிமித்திரம், ரகுவம்சம், குமாரசம்பவம், மேகதூதம், ரிதுசம்ஹாரம்.
- விசாகதத்தர் – முத்ரா ராக்ஷஸம், தேவி சந்திரகுப்தம்.
- வாத்ஸ்யாயனர் – காமசூத்திரம்
- வராகமிகிரர் – பிருகத் சம்கிதை
- சந்திரர் – சந்திராச்சாரிய வியாக்கரணம்
- அமரர் – அமரகோசம்
- வாக்பட்டர் – அஷ்டாங்க சங்கிரக, அஷ்டாங்க கிருதய சம்ஹிதை (மருத்துவம்)
- ஆரியபட்டர் – கணித நூல்கள், வானவியல்
- சாமண்டகர் – நீதிசாஸ்திரம்
- வீரசேனர் - வியாகரணம்

## அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி

குப்தர்கள் காலத்தில் அறிவியல் தொழில்நுட்பம் படிப்படியாக வளர்ச்சி பெறத் தொடங்கியது. **ஆரியபட்டர்** குப்தர்கள் காலத்தில் வாழ்ந்த தலைசிறந்த அறிஞராவார். இவர் கணிதம், வானவியல் போன்ற துறைகளில் சிறந்து விளங்கினார். இவர் **ஆரியபட்டீயம்** என்ற நூலை எழுதினார். ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்ணிற்கு முன்னும் பின்னும் சுழியத்தைப் (0) பயன்படுத்தும் முறை இவரால் கண்டுபிடிக்கப்பட்டது. கணிதத்தில் இயற்கணிதம் (Algebra), வர்க்கமூலம்



XII Ethics_Lesson 5.indd 98 16-03-2020 14:56:40

போன்றவற்றை இவரே கண்டறிந்தார். சூரியனைப் பூமி வலம் வருகிறது என்றும், கோள்களின் சுழற்சியைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

**மெஹ்ரோலி இரும்புத் தூண்**

குப்தர் காலத்தில் எழுப்பப்பட்ட மெஹ்ரோலி இரும்புத் தூண் இன்று வரை பல்வேறு இயற்கை சீற்றங்களுக்கிடையேயும் துருப்பிடிக்காமல் உள்ளது. இது குப்தர்களின் உலோகக் கலைக்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது.

குப்தர் காலத்தில் வாழ்ந்த மற்றோர் அறிவியல் மேதை வராகமிகிரர் ஆவார். இவர் '**பிருகத்சம்ஹிதை**' என்ற நூலை எழுதினார். இவர் விண்வெளி, கோள்கள், தாவரங்கள், நிலஅமைப்பு போன்றவற்றைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அஸ்வசாஸ்திரத்தில் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள் பற்றியும் அவற்றிற்கான சிகிச்சை முறைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. சரகர் புகழ்பெற்ற மருத்துவராகத் திகழ்ந்தார். இவர் ***சரகசம்ஹிதா*** என்ற மருத்துவ நூலை எழுதினார். தன்வந்திரி என்பவர் குப்தர்கள் காலத்தில் வாழ்ந்த தலைசிறந்த ஆயுர்வேத மருத்துவ மேதையாவார். இவர் மனிதனுக்கு ஏற்படும் நோய்கள் பற்றியும் அதற்கான சிகிச்சை முறைகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

## கட்டடக்கலை

குப்தர்கள்கால கட்டடங்கள் மற்றும் கோயில்கள் பின்வரும் ஐந்து வகையான சிறப்பம்சங்களுடன் காணப்படுகின்றன.

**அவையாவன**

- தட்டையான கூரை கொண்ட சதுரக் கோயில்கள்
- விமானத்துடன் கூடிய (இரண்டாம் மாடி) தட்டையான கூரை கொண்ட சதுரக் கோயில்கள்
- வளைகோட்டுக் கோபுரம் (சிகரம்) கொண்ட சதுரக் கோயில்கள்
- செவ்வக வடிவிலான கோயில்கள்
- வட்ட வடிவக்கோயில்கள்

இக்கோயில்கள் வட இந்தியாவில் நாகர கட்டடக்கலைப் பாணியிலும் தென்னிந்தியாவில் திராவிடக் கட்டடக்கலைப் பாணியிலும் பின்னர் கட்டப்பட்டன.

தியோகர் என்ற இடத்தில் பஞ்சயாதன முறைப்படி மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களை மையப்படுத்தித் தசாவதாரக் கோயில் கட்டப்பட்டது. மேலும், அங்கு சாந்தி நாதர் என்ற சமணத்துறவிக்கு கோயிலும், ஜபல்பூர் அருகில் திகாவா என்ற இடத்தில் மகாவிஷ்ணுவிற்குக் கோயிலும் கட்டப்பட்டன. பூமரா என்ற இடத்திலும், நச்சனக்குதாரோ என்ற இடத்திலும் நகரப் பாணியில் கோயில்கள் கட்டப்பட்டன. கான்பூர் அருகில் பிதார்கன் என்ற இடத்தில் செங்கற்களால் கட்டப்பட்ட கோயில், குப்தர்களின் கட்டடக் கலைக்குச் சான்றாகத் திகழ்கிறது. குப்தர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களில் நான்குவகை மண்டபங்கள் இடம்பெற்றிருந்தன. குப்தர்களின் பெரும்பாலான கோயில்கள் ஹூணர்களின் படையெடுப்பின்போது இடிக்கப்பட்டன. ராஜகிருகம், சாரநாத் போன்ற இடங்களில் அழகிய பௌத்த ஸ்தூபிகள் அமைக்கப்பட்டன.

## சிற்பக் கலை

குப்தர்கள் காலத்தில் சிற்பக்கலை சிறப்புற்றிருந்தது. மதுராவில் குப்தர்கள் காலத்தில் அமைக்கப்பட்ட புத்தர் சிலையில் கிரேக்கக்கலையின் சாயல் உள்ளது. சாரநாத்தில் நின்ற வடிவிலுள்ள புத்தர் சிலை சிறப்பாக அமைக்கப்பட்டது. சாரநாத் கலை பாணி இந்தியாவில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. இது கனிஷ்கர் காலத்தின் காந்தாரக் கலையை நினைவூட்டுகிறது. விஷ்ணு, கார்த்திகேயர், துர்க்கை, நாகர் போன்ற கடவுளர்களுக்குச்




XII Ethics_Lesson 5.indd 99 16-03-2020 14:56:40

சுடுமண்ணால் செய்யப்பட்ட சிற்பங்கள் சிறப்பான வேலைப்பாடுடையனவாகும். உதயகிரி கோயிலிலுள்ள மகாவிஷ்ணுவின் வராக அவதாரச் சிற்பமும், தியோகர் கோயிலிலுள்ள தசாவதாரச் சிற்பங்களும், பரத்பூர் கோயில்களிலுள்ள சிற்பங்களும் குப்தர் காலத்தில் சிறப்பு பெற்றவையாகும்.

சைவ, வைணவ (பாகவத) சமய நம்பிக்கைகளும் தத்துவங்களும் கோயில்களில் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டன. பிதாரி என்ற இடத்திலுள்ள ஸ்கந்த குப்தரின் ஒற்றைக் கற்றூண் சிறப்பாக வடிவமைக்கப்பட்டது. சிவன், விஷ்ணு, ராமன், கிருஷ்ணன் ஆகிய கடவுளரின் சிலைகள் அழகாகவும் நேர்த்தியாகவும் இவர்கள் காலத்தில் வடிக்கப்பட்டுள்ளன.

## ஓவியக்கலை



அஜந்தா ஓவியம்

குப்தர்கள் காலத்தில் அஜந்தா, பாக்(குவாலியர் அருகில்) ஆகிய இடங்களில் ஓவியங்கள் அழகுற தீட்டப்பட்டன. அஜந்தாவிலுள்ள 16, 17–ஆவது குகை ஓவியங்கள் புத்தரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுகின்றன. போதிசத்துவர்களின் ஓவியங்களும் அழகிய பறவைகளின் ஓவியங்களும் சிறப்புப் பெற்றிருந்தன.

**உங்களுக்குத் தெரியுமா?**

யுனெஸ்கோ(UNESCO) (ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார நிறுவனம்), 1983ஆம் ஆண்டில் அஜந்தா குகையை உலகப் பாரம்பரியச் சின்னமாக அறிவித்தது.

## இசைக்கலை

**குப்தர்கள் காலம் இசையும், நடனமும் செழித்தோங்கிய காலமாகும்.** குப்தர்கள் இசைக்கலைக்குப் பேராதரவு தந்து, இசைக் கலைஞர்களை ஊக்குவித்தனர். மத்தளம், யாழ், சங்கு போன்ற இசைக்கருவிகளைப் பயன்படுத்தினர். குப்த மன்னரான முதலாம் சமுத்திரகுப்தர் வீணைவாசிப்பது போன்று உருவம் பொறித்த நாணயங்கள் காணப்பட்டன. இதன்மூலம், இவர் இசைக்கலைக்கு ஆதரவு தந்தார் என்று அறியமுடிகிறது.

## நடனக்கலை

திருவிழா நேரங்களில், கோயில்களில் நடன நிகழ்ச்சிகள் நடத்தப் பெற்றன. அரசவையிலும் நடனங்கள் இடம்பெற்றன. நடனக்கலைஞர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். நடனக்கலைக்கும் குப்தர்கள் பேராதரவு தந்தனர்.

## நாடகக்கலை

சாகுந்தலம், ரகுவம்சம், குமாரசம்பவம், மேகதூதம் ஆகியவை காளிதாசர் இயற்றிய நாடகங்களாகும். தேவிசந்திரகுப்தம், கௌமுகிமகோத்சவம் போன்ற நாடகங்களும் நடைபெற்றன. எனவே, இவர்களின் காலம் இந்திய வரலாற்றில் ஒரு முக்கிய காலகட்டமாக அறிஞர்களால் கருதப்படுகிறது; செவ்வியல்கலைகளின் காலம் எனவும் போற்றப்படுகிறது.

## இந்தியப்பண்பாட்டிற்குக் குப்தர்களின் கொடை

- மத்திய அரசு நிருவாகத் துறைகள், மாநில அரசு நிருவாகத் துறைகள், மாவட்ட ஆட்சிமுறை, நகர மற்றும் கிராம நிருவாக சபைகள் போன்றவை இந்திய பண்பாட்டிற்குக் குப்தர்கள் வழங்கிய கொடைகளாகும்.
- காளிதாசரின் சாகுந்தலம், விக்கிரமோர்வசியம், இரகுவம்சம், குமாரசம்பவம், மேகதூதம் மற்றும்



XII Ethics_Lesson 5.indd 100 16-03-2020 14:56:40

பல இலக்கிய படைப்புகள் குப்தர்காலக் கொடையாகும்.


- ஆரியபட்டரின் 'கணிதநூல்', வானவியல், வாக்பட்டரின் அஷ்டாங்க சங்கிரகம் (மருத்துவம்) வராகமிகிரரின் பஞ்சசித்தாந்தகம் (வானவியல்) சந்திரரின் சந்திராச்சாரிய வியாக்கரணம் (இலக்கணம்) மற்றும் அமரரின் நிகண்டு போன்ற நூல்கள் இந்தியப்பண்பாட்டு மற்றும் அறிவியல் வளர்ச்சிக்குக் குப்தர்கள் அளித்த கொடையாகும்.
- குப்தர் கால நீதித்துறை, இன்றைய நீதித்துறை வளர்ச்சிக்கு முன்னோடியாகத் திகழ்கிறது.
- குப்தர் காலத்தின் சமயச்சார்பற்ற ஆட்சிமுறையானது, தற்போதைய இந்திய பண்முக பண்பாட்டிற்கு அடிகோலியது எனலாம்.
- குப்தர்கால குகைக் கோயில்கள் மற்றும் கட்டுமானக் கோயில்கள் கலை வளர்ச்சிக்கும், சமயவளர்ச்சிக்கும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்வதுடன் இந்தியப்பண்பாட்டு வளர்ச்சிக்கும் துணை புரிந்தன.
- சாரநாத், மதுரா, அஜந்தா, எல்லோரா, பாக் (Bagh) போன்ற இடங்களில் உள்ள சிற்பங்கள், ஓவியங்கள் போன்ற கலை நுட்பங்கள் யாவும் இந்தியப்பண்பாட்டின் சிறந்த கூறுகளாக விளங்குகின்றன. எனவே, '**குப்தர் காலம் செவ்வியல் கலைகளின் காலம்**' என்று அழைக்கப்படுகிறது.

## 5.4 சாளுக்கியர் காலப் பண்பாடு

தென்னிந்தியாவை ஆட்சிபுரிந்த சிறந்த அரச வம்சங்களுள் சாளுக்கிய வம்சமும் ஒன்றாகும். முதலாம் புலிகேசி, இரண்டாம் புலிகேசி ஆகியோர் இவ்வம்சத்தின் சிறந்த மன்னர்களாகத் திகழ்ந்தனர். பில்ஹணர் எழுதிய **விக்ரமாங்கசரிதம்** என்ற நூல் சீனப்பயணி யுவான்சுவாங்கின் **சியூக்கி** என்றழைக்கப்படும் பயணக் குறிப்புகள், ஐஹோலே கல்வெட்டு ஆகியவை சாளுக்கிய வம்சத்தைப் பற்றி அறிய உதவும் சான்றுகளாக உள்ளன.

### ஆட்சி முறை

மன்னரே நாட்டின் தலைவராவார். அவருக்கு உதவ அமைச்சரவை இருந்தது. நாடு பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. மாகாணத்தின் தலைவராக ஆளுநர் நியமிக்கப்பட்டார். சாளுக்கிய வம்சத்தில் மன்னர் பதவி பரம்பரைப் பதவியாக அங்கீகரிக்கப்படவில்லை; தந்தைக்குப் பின் மூத்த மகன் ஆட்சிக்கு வரும் நிலையில்லை. அண்ணன் இறந்த பின், தம்பி அரியணையேறும் வழக்கம் இருந்தது என்பது இவ்வம்சத்தின் சிறப்பம்சமாகும். மன்னர்கள் போர்க்கலை மட்டுமின்றி மனுசாஸ்திரம், தர்மசாஸ்திரம், வேதங்கள் போன்றவற்றையும் அறிந்திருந்தனர். சாளுக்கியர்களின் ஆட்சி சிறப்புகளை வெளிப்படுத்தும் வகையில் மகாராஜன், சத்யாசிராயன், ஸ்ரீ பிருத்தி வல்லவன், பரமேஸ்வரன் போன்ற பட்டங்களை மன்னர்கள் சூட்டிக் கொண்டனர். அரசர்கள் சிறப்பாக ஆட்சி செய்ததைஹிரகதஹள்ளிஎன்றசெப்புப்பட்டயம் கூறுகிறது. சாளுக்கிய இளவரசிகள் மாநில ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர். அரசர், ஆளுநர், தலைமை அமைச்சர், அமாத்தியா என்ற வருவாய்த்துறை அமைச்சர், சமகர்த்தா என்ற கருவூல அமைச்சர் ஆகியோர் பற்றி ஐஹோலே கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.



ஐஹோலே கல்வெட்டு



XII Ethics_Lesson 5.indd 101 16-03-2020 14:56:40

பேரரசு பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அவை விஷயம், ராஷ்டிரம், நாடு, கிராமம் ஆகியவையாகும். விஷயபதி, சமந்தா, கிராமபோகி, **மபத்ரா** ஆகிய அதிகாரிகள் அரசனுக்கும் ஆளுநருக்கும் நிருவாகத்தில் உதவினர். சமந்தா என்பவர்கள் நிலப்பிரபுக்களாவர். கிராமபோகி கிராம நிருவாகத்தைக் கண்காணித்தார். அவருக்குக் கர்ணா என்ற கணக்கர் உதவினார். விஷயா எனப்பட்ட மாவட்டத்தின் தலைவர் விஷயபதி ஆவார். மகாஜனம் எனப்பட்ட கிராம மக்கள்குழு, கிராமங்களின் சட்டம் ஒழுங்கை பராமரித்து வந்தது.

## சமூக நிலை

சாளுக்கியர்கள் காலத்தில் சமூகமானது வர்ணாசிரம முறையின்படியே இருந்தது. ஆனால், சாதிய வேற்றுமைகள் காணப்படவில்லை. உயர்குடிப் பெண்கள் உரிமை பெற்றுக் காணப்பட்டனர்.

## பொருளாதார நிலை

சாளுக்கியர்கள் காலத்தில் வேளாண்மை முக்கியத் தொழிலாக இருந்தது. நெசவு, உலோக, தச்சுத் தொழிலாளர்கள் சிறப்பிடம் பெற்றிருந்தனர். காவிரி, நர்மதை நதிகளால் வளம்பெற்ற நிலங்களில் உற்பத்தி செய்யப்பட்ட தானியங்களை வணிகர்கள் வட இந்தியாவிற்குக் கொண்டு சென்று விற்பனை செய்தனர்.

## சமய நிலை

இந்து, சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களைப் பின்பற்றும் மக்கள் இருந்தனர். சாளுக்கிய மன்னர்கள் சமய சகிப்புத்தன்மையைப் பின்பற்றினர். இரண்டாம் புலிகேசியின் ஆட்சிக்காலத்தில் இந்து, சமண பௌத்த சமயங்களும் வளர்ச்சி பெற்றன. இரண்டாம் புலிகேசியின் அவையிலிருந்த **ரவி கீர்த்தி** என்ற அறிஞர் சமண சமயத்தைப் பின்பற்றினார். ஐஹோலே கல்வெட்டைப் பொறித்தவரும் இவரேயாவார். சீனப் பயணி யுவான்சுவாங் இரண்டாம் புலிகேசியின் அவைக்கு வருகை புரிந்தார். இவர் சாளுக்கிய நாட்டில் மகாயானம், ஹீனயானம் ஆகிய பிரிவுகளைப் பின்பற்றும் பௌத்தர்கள் வாழ்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

## கட்டடக்கலை

சாளுக்கியர்கள், கலைவளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியுள்ளனர். கோயில்களைக் கட்டுவதற்கு அவர்கள் வேசர கலைபாணியைப் பின்பற்றினர். ஐஹோலே, பாதாமி, பட்டாடக்கல் ஆகிய இடங்களில் சாளுக்கியர்களின் கட்டுமானக் கோயில்களைக் காணலாம். அஜந்தா, எல்லோரா, நாசிக் ஆகிய இடங்களில் இவர்களது குடைவரைக் கோயில்கள் உள்ளன. பாதாமி குகைக்கோயிலும் இவர்களது காலகட்டத்தில் உருவாக்கப்பட்டது. ஐஹோலே நகரில் 70 கோயில்கள் சாளுக்கியர்கள் காலத்தில் கட்டப்பட்டன. இதனால், இந்நகரம் **கோயில் நகரம்** என அழைக்கப்பட்டது. ஐஹோலே நகரில் சமதளக் கூரையுடன் நிறைய தூண்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ள லட்கான் கோயிலும், ஒரு பௌத்த சைத்தியத்தைப்போல (சைத்தியம் பௌத்தர்களின் தியானக் கூடம்) அமைக்கப்பட்ட துர்க்கையம்மன் கோயிலும், ஹுச்சிமல்லிக்குடிக்கோயிலும் புகழ்பெற்றவை. ஐஹோலே அருகிலுள்ள மெகுடி என்ற இடத்திலுள்ள சமணர் கோயிலும் அழகாக அமைக்கப்பட்டுள்ளது.

ஐஹோலே நகரம்போல் பாதாமி என்ற இடத்திலும்சாளுக்கியர்கள் பலகோயில்களைக் கட்டினர். அவற்றில் முக்தீஸ்வரர் கோயிலும், மேலக்குட்டி சிவன் கோயிலும் அவற்றின் கட்டடக்கலை நுணுக்கத்தால் புகழ் பெற்றன.



பட்டாடக்கல்



XII Ethics_Lesson 5.indd 102 16-03-2020 14:56:40

பாதாமி அருகில் ஒரே இடத்திலுள்ள நான்கு குடைவரைக் கோயில்கள், கலை நயத்துடன் அமைக்கப்பட்டன. அவற்றின் சுவர்களும்,தூண்கள் தாங்கும் மண்டபங்களும், கடவுளர் மற்றும் மனிதர்களின் அழகான சிற்பங்கள் போன்றவையும் இக்குடைவரைக் கோயில்களில் இடம்பெற்றுள்ளன.

சாளுக்கியர்கள் காலத்தில் **பட்டாடக்கல்** என்ற இடத்தில் பத்துக் கோயில்கள் கட்டப்பட்டன. இவற்றில் ஆறு கோயில்கள் திராவிட கலைபாணியிலும் நான்கு கோயில்கள் வட இந்தியக் கலை பாணியிலும் கட்டப்பட்டன. வட இந்தியக் கலை பாணியில் கட்டப்பட்ட பாபநாதர்கோயில் சிறப்பான கலை நுணுக்கங்களுடன் அமைக்கப்பட்டது. திராவிடக் கலை பாணியிலமைந்த சங்கமேஸ்வரர் கோயிலும், விருபாக்ஷர் கோயிலும் சிறப்புப் பெற்றவையாகும். விருபாக்ஷர் கோயிலைக் கட்டுவதற்குக் காஞ்சிபுரத்திலிருந்து சிற்பிகள் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் கோயில் போன்றே இக்கோயிலும் கட்டப்பட்டது. பட்டாடக்கல் நகரில் கோயில்களை அமைத்த கட்டடக் கலை வல்லுநர்களுக்குத் **திரிபுவனச்சாரியா** (மூவுலகையும் உருவாக்கியவன்) என்ற பட்டம் வழங்கப்பட்டது.

> விருபாக்ஷர் கோயிலின் அடித்தளக் கட்டுமானத்தின்படி கட்டப்பட்ட பாபநாதர் கோயிலில், இராமாயணத்தின் முக்கிய காட்சிகள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. ரேவதி ஓவஜா என்பவர் இக்கோயிலின் கருவறையை வடிவமைத்தார் என்று இங்குள்ள கன்னட கல்வெட்டு குறிப்பிடுகிறது.

### ஓவியக்கலை

ஓவியக் கலையில் சாளுக்கியர்கள், வாகாடகர்கள் என்ற அரச வம்ச கலை பாணியைப் பின்பற்றினர். விஷ்ணுவின் தசாவதாரங்கள் சாளுக்கியர்களால் ஓவியங்களாக வரையப்பட்டன. பாதாமி நகரில் உள்ள குகைக்கோயிலில் அழகிய ஓவியங்கள் தீட்டப்பட்டன. சாளுக்கிய மன்னன் மங்களேசன் கட்டிய அரண்மனையிலும் ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன.

### சாளுக்கியர்களின் பண்பாட்டுக் கொடை

- சாளுக்கியர்கள் சமய சகிப்புத் தன்மையைக் கடைப்பிடித்தனர். இந்து , பௌத்தம், சமணம் போன்ற சமயத்திலிருந்த அறிஞர்களை ஆதரித்தனர்.
- இரண்டாம் புலிகேசி தலைசிறந்த கலை, இலக்கிய புரவலராகத் திகழ்ந்தார். இவருடைய அவைப்புலவரான ரவிகீர்த்தி ஐஹோல் கல்வெட்டைப் பொறித்தார். இக்கல்வெட்டு இரண்டாம் புலிகேசியின் வெற்றிச் சிறப்புகளையும், அரசியல், சமூகம், பொருளாதார, சமய நிலையையும் குறிப்பிடுகிறது.
- சாளுக்கியர்கள் ஐஹோல் நகரில் 70-க்கும் மேற்பட்ட கோயில்களைக் கட்டினர். இந்நகரம் சாளுக்கிய நாட்டின் கோயில் நகரம் என்று அழைக்கப்படுகிறது.
- காஞ்சிபுரத்தின் கைலாசநாதர் கோயிலைப் போன்று கட்டப்பட்ட விருபாக்ஷர் கோயில், சாளுக்கியர்கள் அளித்த பண்பாட்டுக் கொடையாகும்.

## 5.5 இராஷ்டிரகூடர்காலப் பண்பாடு

இராஷ்டிரகூடர் கி.பி. (பொ.ஆ.) 6 முதல் 10-ஆம் நூற்றாண்டுவரை இந்தியாவை ஆண்ட அரச மரபினர் ஆவர். கி.பி. (பொ.ஆ.) 7-ஆம் நூற்றாண்டில் கிடைத்த, நிலக் கொடை குறித்த செப்புப் பட்டயமே இவர்களின் ஆட்சி பற்றி நமக்குக் கிடைத்த முதல் ஆவணமாகும்.

### ஆட்சிமுறை

நாட்டின் எல்லாதுறைகளுக்கும் அரசனே தலைவன். பட்டத்து இளவரசன் தகுதியின் அடிப்படையிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டான். அரசர், தம் நிருவாக வசதிக்காக அமைச்சரவையை ஏற்படுத்தினார். பேரரசு ராஷ்டிரம், விஷயம், புக்திகள் எனப் பிரிக்கப்பட்டு



XII Ethics_Lesson 5.indd 103 16-03-2020 14:56:40

ஆட்சி செய்யப்பட்டது. இராஷ்டிரத்தின் தலைவர் **ராஷ்டிரபதி** என்று அழைக்கப்பட்டார்.

### சமயநிலை

இராஷ்டிரகூடர் காலத்தில் சைவமும், வைணவமும் பெரும்பாலான மக்களால் பின்பற்றப்பட்டன. இவர்களின் முத்திரைகளில் சிவன் அமர்ந்திருக்கும் காட்சியும், கருடனின் உருவமும் காணப்படுகின்றன. **துலாபாரம், இரண்யகர்ப்பம்** போன்ற இந்து சமய விழாக்கள் கொண்டாடப்பட்டன. சமண சமயமும், இந்து கோயில்களும் சிறப்புடன் வளர்ச்சி பெற்றன.

### பொருளாதாரநிலை

இராஷ்டிரகூட அரசர்களுக்குப் பல துறைகளிலிருந்து வருவாய் கிடைத்தது. தம் மேலாண்மையை ஏற்றுக்கொண்டவர்களிடமிருந்தும், காடுகள், நிலங்கள் மூலமாகவும் வரிகள் வசூலிக்கப்பட்டன. விளைநிலத்திற்கு வசூலிக்கப்பட்ட வரி **உத்தரங்கம்** என்றழைக்கப்பட்டது. இது விளைச்சலில் 1/4 வசூலிக்கப்பட்டது. (நான்கில் 1 பங்கு)

### இலக்கியங்கள்

சமணசேனர் **ஆதிபுராணம்** என்ற நூலையும், மகாவீர ஆச்சரியார் என்பவர் கணித சாரசம்கிரகம் என்ற நூலையும், கத்தியானர் **அமோகவிருத்தி** என்ற நூலையும் எழுதியுள்ளனர். இராஷ்டிரகூட அரசன் அமோகவர்ஷன் **கவிராஜமார்க்கம்** என்னும் கன்னட நூலை எழுதியுள்ளார். இவர்கள் வடமொழியைப் பெரிதும் ஆதரித்தனர். நலிசம்பு என்ற நூலைத் திருவிக்ரமன் என்பவர் எழுதினார். ஹாளாயூதா என்பவர் கவிரஹஸ்யம் என்ற நூலையும் எழுதினார். பம்பா என்பவர், கன்னட மொழிக் கவிஞர்களுள் தலைசிறந்தவராவார். பொன்னா என்ற மற்றொரு கவிஞர் சாந்திபுராணம் என்ற நூலையும் எழுதினார்.

#### ஜீனசேனர்

இவர் புகழ்பெற்ற சமண அறிஞர் ஆவார். இவர் பார்சவநாதரின் வாழ்க்கை வரலாற்றையும் சமண போதனைகளையும் தொகுத்துப் பார்சவபூதயா என்ற நூலாக எழுதினார். இவர், புகழ்பெற்ற இராஷ்டிரகூட மன்னரான முதலாம் அமோகவர்ஷரின் ஆசிரியராவார்.

### இராஷ்டிரகூடர்களின் கலைப்பணி

### எல்லோரா



எல்லோரா கைலாசநாதர் கோயில்

எல்லோராவிலுள்ள கைலாசநாதர் கோயில் மகாராஷ்டிரா மாநிலத்தில் அமைந்துள்ளது. இக்கோயில், முதலாம் கிருஷ்ணர் காலத்தில் பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்டதாகும். இக்கோயில் **தக்காணப் பாறை படிவு** என்று அறியப்படும் மகாராஷ்டிராவின் எரிமலைப் பாறை உருவாக்கங்கள் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. 'இந்தியக் கலை வரலாற்றில் ஈடிணையற்ற பொக்கிஷமான' இக்கோயில் கட்டுமான கோயில் போன்றே செதுக்கப்பட்ட அழகிய ஒற்றைக் கற்றளி குடைவரைக் கோயிலாகும். இவ்வகை குடைவரைகளில் மிக பெரியதான ஏதென்ஸின் புகழ்மிக்க பாத்தினன் கட்டுமானத்தின் மரபையும், அதனைவிட ஒன்றரை மடங்கு உயரத்தையும் உடையதாகும். இக்கோயிலின் வெளிமுற்றமானது, 276 அடி நீளமுடையதாய் அமைந்துள்ளது. மரபுப்படியான கல்கட்டுமான



XII Ethics_Lesson 5.indd 104 16-03-2020 14:56:41

கோயில் போன்றே நான்கு அடிப்படைப் பகுதிகளைக் கொண்டது. இக்கோயிலில் கோபுரத்துடன் கூடிய நுழைவுவாயில், நந்தி மண்டபம், பெரிய அளவிலான தூண்கள் உள்ள முகமண்டபம், விமானத்துடன் கூடிய கருவறை போன்றவை அமைந்துள்ளன.

### எலிபெண்டா குகை

எலிபெண்டா குகைகள் மும்பை துறைமுகத்திலிருந்து 10 கி.மீ தொலைவில் அரபிக் கடலில் தீவாக அமைந்துள்ளன. பெரிய யானையின் சிற்பங்களைக் கண்ட போர்ச்சுகீசியர்கள் இத்தீவிற்கு **எலிபெண்டா தீவு** (Elephenda Caves) எனப் பெயரிட்டனர். எலிபெண்டா குகைக்குக் காராபுரி என்ற பழைய பெயரும் உண்டு. இக்குகையின் மேற்கூரையை ஒரு கற்றூண் தாங்கி நிற்பதுபோல், குடைந்து இருப்பது இக்குகையின் தனிச்சிறப்பாகும். குகைக்குள் உள்ள சுவரில் சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய மும்மூர்த்திச் சிற்பங்கள் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. இறைவனின் முத்தொழிலைக் குறிக்கும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய குண இயல்புகளைக் கொண்ட மகேசுவரமூர்த்தியின் சிற்பம் அழகுமிக்கதாகும்.

### ஓவியக்கலை



எலிபெண்டா குகை கோயில்

எல்லோராவில் உள்ள ஓவியங்கள் பௌத்தசமய ஓவியங்களாகும். கைலாசநாதர், தசாவதார கோயில்களில் காணப்படும் ஓவியங்கள் சிறப்பு வாய்ந்தவை. மேலும் சிவன், பார்வதி, முருகன், கணபதி ஆகியோரின் ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன.

### இந்தியப்பண்பாட்டிற்கு இராஷ்டிரகூடர்களின் கொடை

- எல்லோராவிலுள்ள கைலாசநாதர் கோயில், மகாராஷ்டிராவிலுள்ள எலிபெண்டா குகைகள் போன்றவை உலகப் பாரம்பரியச் சின்னமாக அங்கீகரிக்கப்பட்ட இடங்களாகும்.
- இராஷ்டிர கூடர்கள் சுவர்ணா, திரம்மா என்ற தங்க நாணயத்தையும், வெள்ளி நாணயத்தையும் வெளியிட்டனர்.
- இவர்களுடைய காலத்தில் ஒற்றைக்கல்லில் வரையப்பட்ட குகை ஓவியங்கள் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன.
- இவர்கள் சமயப் பொறையுடன் இருந்ததற்குச் சான்றுகளாகக் குகைகளில் இந்து, சமண சமயச் சிற்பங்களைக் காணலாம்.
- இவர்கள் காலத்தில் வடமொழி இலக்கியங்களும், கன்னடமொழி இலக்கியங்களும் வளர்ச்சி பெற்றன.

## 5.6 ஹொய்சாளர்காலப் பண்பாடு

இன்றைய கர்நாடக மாநிலத்திலுள்ள மைசூர் பகுதியை ஆட்சி செய்தவர்கள் ஹொய்சாளர்கள் ஆவர். இவர்களுடைய தலைநகரம் முதலில் **சோசவூரிலும்** பின் ஹளபேட்டுக்கும் மாற்றப்பட்டது. இம்மரபில் நிர்பகாமா கி.பி. (பொ.ஆ.) 1026 – 47 முதல் மூன்றாம் வீர பல்லாளர் (கி.பி. (பொ.ஆ.) 1292 – 1343 வரையிலான மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். ருத்ரபட்டா என்ற கவிஞர் இரண்டாம் வீர பல்லாளரால் ஆதரிக்கப்பட்டார். இவருடைய குறிப்புகள் அரசியல்நிலை, சமூக, பொருளாதார, சமயநிலைகளைப் பற்றி குறிப்பிடுகின்றன.



XII Ethics_Lesson 5.indd 105 16-03-2020 14:56:41

## ஆட்சிப்பிரிவுகள்

ஹொய்சாளர்கள் தம்முடைய நிருவாக வசதிக்காக நாடு, விஷயம், கம்பணா, தேசம் என்று பிரித்து ஆட்சி செய்தனர். ஒவ்வொரு மாகாணமும் மகாபிராதனா, நீதி நிருவாகம் 'தண்டநாயகா' என்பவரின் கீழ் செயல்பட்டன.


## கலை கட்டடக்கலைக்கு ஆற்றிய தொண்டு

இக்காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள் நட்சத்திர வடிவாகவோ (அ) பல கோணங்கள் கொண்டவையாகவோ விளங்குகின்றன. உச்சியில் பூந்தொட்டி போன்ற அலங்கார வேலைப்பாடு கொண்டு காணப்படுகிறது. பல கட்டடங்களில் ஒன்று, இரண்டு (அ) நான்கு கோபுரங்கள் காணப்படுகின்றன.

## பேளூர் (பேளூர்) கோயில்



பேளூர் கோயில்



ஹொய்சாளர் அரசு சின்னம்

பேளூர் சென்னக்கேசவா கோவிலில் எங்கு நோக்கினும் சிற்பங்கள் காணப்படுகின்றன. இக்கோயிலில் மாதனிக்கச் சிற்பங்கள் உயிருள்ள மனிதர்களை போன்றே காணலாம். மொத்தம் 42 மாதனிக்க சிற்பங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு சிற்பமும் கோபம், பெருமை, மகிழ்ச்சி, துக்கம், அன்பு போன்ற பண்புகளை வெளிப்படுத்தும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வகை சிற்பங்கள் **மாக்கல்** என்ற ஒரு வகை கல்லால் உருவாக்கப்பட்டவை.


## ஹளபேடு



ஹளபேடு கோயில்

ஹொய்சாளர் அரசர்களின் தலைநகரம் ஹளபேடு (துவாரசமுத்திரம்) ஆகும். ஹளபேட்டில் அமைந்துள்ள ஹொய்சாளேஸ்வர் கோயில் கேதரோஜா என்பவரால் கட்டப்பட்டது. இக்கோயிலில் உள்ள சிற்ப வேலைப்பாடுகள், தூண்கள், கட்டட அமைப்பு ஹொய்சாளர் கால கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. இக்கோயிலில் காணப்படும் போருக்குத் தயாரான நிலையிலிருக்கும் போர்வீரர்கள், இரதங்கள் போன்றவை கலைநயத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன. கேதாரீஸ்வரர் கோயில் **தெய்வீக ஆபரணம்** என்றழைக்கப்படுகிறது. இக்கோயிலின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படும் நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகள் வியப்பிற்குரியவை.

## சென்னக் கேசவன் கோயில் (பேளூர்)



சென்ன கேசவன் கோயில்



XII Ethics_Lesson 5.indd 106 16-03-2020 14:56:41

பேளூரில் உள்ள விஜயநாராயணன் கோயில் (சென்னக்கேசவன் கோயில்) விஷ்ணு வர்த்தன் என்பவரால் கட்டப்பட்டது. இக்கோயில் பச்சை, கருநீலநிற மாக்கல் எனப்படும் நுண் மணற்பாறைக் கற்களைப் பயன்படுத்திக் கட்டப்பட்டது.

### பஸ்திஹள்ளி பார்சுவநாதர்

பார்சுவநாதருக்காக பஸ்திஹள்ளியில் சமணர் கோயில் கட்டப்பட்டது. இங்குள்ள தூண்களை மாயாஜால தூண்கள் எனலாம். இவை நம்முடைய உருவத்தைப் பிரதிபலித்துக் காட்டும் தன்மை உடையன.

### கேசவன் கோயில் – சோம்நாத்பூர்

ஹொய்சாளர்களின் கலைப்பாணிக்குச் சான்றாக சோம்நாத்பூரில் உள்ள கோயிலைக் கூறலாம். இக்கோயில் ஸ்ரீரங்கப்பட்டணத்திலிருந்து 20 மைல் தொலைவில் உள்ளது. இக்கோயில் **திரிகுடசலம்** என்றழைக்கப்படும் மூன்று சன்னதி கோயில் ஆகும்.

வேசரா கலைப்பாணியில் கட்டப்பட்ட லட்சுமிநரசிம்மன் கோயில், நுகுஹள்ளி கோயில், ஈஸ்வர கோயில் (அரிகேசரி) போன்றவை ஹொய்சாளர் கால கட்டடக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

### மொழி

ஹொய்சாளர்கள் கன்னட மொழிக்கு முக்கியத்துவம் அளித்தனர். இவர்கள் காலத்தில் கன்னட மொழியில் பல இலக்கியங்கள் தோன்றின. சமஸ்கிருத மொழியும் வளர்ச்சிபெற்றிருந்தது.

### இலக்கியங்கள்

விஷ்ணுவர்த்தனால் ஆதரிக்கப்பட்ட நாகச்சந்திரா என்ற சமணர், இராமாயணம் எழுதினார். இராசாத்தியன் கணித நூற்சட்டங்களைச் செய்யுட்களாக்கினார். நேமிசந்திரன் என்ற சமணர் லீலாவதி என்னும் முதல் புதுமைக் கதையை எழுதினார். இவர்கள் அனைவரும் சமணர்கள் ஆவர். கிரிஜா கல்யாணம் எழுதிய அரீஸ்வரன், அரிச்சந்திரா காவியம் எழுதிய இராகவாங்கன் ஆகியோர் வீரசைவர்களாவர்.

### ஹொய்சாளர்களின் இந்தியப்பண்பாட்டுக் கொடை

- ஹொய்சாளர்களின் அனைத்துக் கோயில்களிலும் கர்ப்பகிருகம், மண்டபம், முகமண்டபம் காணப்படுகின்றன.
- ஹொய்சாளர் கால கட்டடக்கலை நட்சத்திர வடிவ கட்டடக்கலையாகும்.
- நடனம், நாடகம், இசை போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தனர்.
- பக்தி இலக்கியவாதிகளான இராமானுஜர், மத்துவர் ஆகியோர் ஹொய்சாளர்கள் காலத்தில் வாழ்ந்தவர்கள். மத்துவர் எழுதிய ரிக்பாஷ்யம் இக்காலத்தில் எழுதப்பட்டது.
- கன்னட மொழியில் சிறப்புப் பெற்ற ஹரிஹரர், ராகவங்கா, ஜனா போன்றோர் இக்காலத்தில் வாழ்ந்தவர்கள்
- இக்காலத்தில் வீரசைவம் சிவ வழிபாட்டுப் பிரிவு வளர்ச்சி பெற்றது.
- ஹொய்சாளர்களின் நிருவாக அமைப்பு பஞ்சபிரதான் எனப்பட்டது. இதில் ஐந்து அமைச்சர்கள் இடம்பெற்றனர். பிற்காலத்தில் சிவாஜி ஆட்சியில் அஷ்டபிரதான் முறை கொண்டு வருவதற்கு இதுவே முக்கிய காரணமாக அமைந்தது எனலாம்.
- யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட புராதனச் சின்னங்களாகப் பேளூர், ஹளபேடு கோயில்கள் உள்ளன. இவை, ஹொய்சாளர்களின் கலைப் பண்பாட்டிற்கு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன.

## 5.7 பல்லவர்காலப் பண்பாடு

தொண்டை மண்டலப் பகுதிகளை ஆட்சி செய்தவர்கள் பிற்காலப் பல்லவர்களாவர். சிம்மவிஷ்ணு, முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன், இராஜசிம்மன், மூன்றாம் நந்திவர்மன் போன்றோர் சிறந்த பல்லவ மன்னர்களாவர்.

## சான்றுகள்

காசக்குடி செப்புப்பட்டயம், முதலாம் மகேந்திரவர்ம பல்லவனின் மத்தவிலாச பிரகசனம், மூன்றாம் நந்திவர்மனைப் பற்றிய நந்திக்கலம்பகம் தேவாரப் பாடல்கள், சீனப்பயணி யுவான்சுவாங்கின் குறிப்புகள், ஆம்பூர் மற்றும் ஒலிக்கூரிலுள்ள வீரக்கற்கள், மாமல்லபுரத்துப் பஞ்சபாண்டவ இரதங்கள், கடற்கரைக்கோயில், குடைவரைக் கோயில்கள் ஆகியவை பிற்காலப் பல்லவர்களைப் பற்றி அறிய உதவும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

## ஆட்சிமுறை

பல்லவ நாட்டின் தலைவர் மன்னராவார். அவர் 'இறை', 'கோன்' ஆகிய பெயர்களில் அழைக்கப்பட்டார். நீதி, நிருவாகம், இராணுவம் போன்றவற்றிக்கு அரசரே தலைவனாக இருந்தார். அரசனுக்கு ஆலோசனை வழங்க அமைச்சரவைக்குழு இருந்தது. இவ்வமைச்சரவை '**மந்திரிமண்டலம்**' எனப்பட்டது. அமைச்சர்களுக்குப் '**பிரம்மராஜன்**' '**பேரரையன்**' போன்ற பட்டப்பெயர்கள் வழங்கப்பட்டன. அரசனுக்கு உதவியாகத் தனி ஆலோசகர், வாயில் காப்போர், பட்டய எழுத்தர், காரணிகர்,தமிழ்மாணிக்கம்பிள்ளைக் காப்பான் என்ற கருவூலக் காப்பாளர், கொடுக்காப்பிள்ளை என்ற நன்கொடைகளுக்கான அதிகாரி, அதிகருணீகர் ஆகியோர் இருந்தனர். மேலும் வருவாய்த்துறை, நிலவரித்துறை, நிலஅளவைத்துறை, காவல்துறை, வனத்துறை, இராணுவத்துறை எனப் பல்வேறு துறைகளாகப் பிரித்து நிருவகிக்கப்பட்டன.

பல்லவ நாடு பல ராஷ்டிரங்களாகப் (மண்டலம்) பிரிக்கப்பட்டது ராஷ்டிரங்கள், கோட்டங்களாகவும் (வளநாடுகள்) கோட்டங்கள் நாடுகளாகவும், நாடு ஊர்களாகவும் பிரிக்கப்பட்டது. பல்லவர்களின் நிருவாகத்தின் கீழ் 24 கோட்டங்கள் இருந்தன. ராஷ்டிரிகர் என்பவர் மாநில ஆளுநராகத் திகழ்ந்தார். நாடு என்பது சிற்றூர்களைவிடப் பெரியதாகவும் கோட்டங்களைவிடச் சிறிதாகவும் இருந்தது. இதனை ஆட்சிசெய்தோர் 'நாட்டார்' என்றழைக்கப்பட்டனர். ஊர் என்ற பகுதியை ஊரார் என்பவரும் சிற்றூர்களை 'ஆழ்வார்' எனப்பட்ட அவையினரும் ஆட்சி செய்தனர். மன்னர் அறிவிக்கும் ஆணைகளை பொதுமக்களுக்கு அறிவிப்பது நாட்டார்களின் முக்கியப் பணியாகும். இவ்வாணை '**அறை ஓலை**' எனப்பட்டது.

சிற்றூர்களே ஆட்சிப் பிரிவின் கடைசி அங்கமாகும். இச்சிற்றூர்கள் பிரம்மதேயச் சிற்றூர்கள், தேவதானச் சிற்றூர்கள் என்றும் அழைக்கப்பட்டன. ஒவ்வொரு சிற்றூரிலும் கிராமசபையே கிராமப் பணிகளை மேற்கொண்டன.

## நீதிமுறை

பல்லவர்கள் காலத்தில் நகரங்களிலிருந்த அறங்கூறும் அவையங்கள் **அதிகரணங்கள்** என்றழைக்கப்பட்டன. இதன் தலைவர் அதிகரணிகர் மற்றும் அதிகரண போசகர் எனப்பட்டனர். இவர்கள் நீதி வழங்குமிடம் **அதிகரணமண்டபம்** எனப்பட்டது. சிறிய ஊர்களிலிருந்த நீதிச்சபை 'கரணம்' எனப்பட்டது. இதன் தலைவர் கரணத்தார் எனப்பட்டார். பல்லவர் கால நீதிமன்றங்கள் சாட்சி, ஆவணம், அயலார் சாட்சி ஆகிய மூன்று ஆதாரங்களின் அடிப்படையில் வழக்குகளை விசாரித்தன. தலைமை நீதிமன்றம் '**தருமாசனம்**' எனப்பட்டது. இஃது அரசரின் நேரடிக்கண்காணிப்பில் இருந்தது. மன்னரே தலைமை நீதிபதியாகவும் செயல்பட்டார். பல்லவர் காலத்தில் விதிக்கப்பட்ட அபராதங்களைப் பற்றி நந்திவர்மப் பல்லவனின் காசக்குடி செப்பேடுகள் கூறுகின்றன. **மேல்நிலை** நீதிமன்றங்களில் விதிக்கப்பட்ட அபராதங்கள் '**கர்ணதண்டம்**' எனவும் **கீழ்நிலை** நீதிமன்றங்களால் விதிக்கப்பட்ட அபராதங்கள் '**அதிகரண தண்டம்**' என்றும் அழைக்கப்பட்டன.

## படையமைப்பு

பல்லவ மன்னர்கள் யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, தேர்ப்படை, கடற்படை ஆகிய ஐவகைப் படைகளைக் கொண்டிருந்தனர். பல்லவர்களின்



XII Ethics_Lesson 5.indd 108 16-03-2020 14:56:41

படைவலிமை, போர் முறை போன்றவை பற்றிக் **கூரம் பட்டயம்** தெரிவிக்கிறது. பல்லவர்களின் போர்க்கருவிகள் பற்றி **வேலூர் பட்டயம்** கூறுகிறது. தங்களின் வலிமையான கடற்படையால் முதலாம் நரசிம்மவர்மன், தம் நண்பன் மானவர்மனுக்காக இலங்கை மீது படையெடுத்து வென்றார். இராஜசிம்ம பல்லவனும் தம் கடற்படை வலிமையால் இலட்சத்தீவை வென்றார்.

## சமூகநிலை

பல்லவர் காலச் சமூகத்தில் வர்ணாசிரம முறை பின்பற்றப்பட்டது. பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு பிரிவுகள் சமுதாயத்தில் இருந்தன. சமூக அமைப்பில் இந்து சாஸ்திரக் கோட்பாடுகள் முக்கியத்துவம் பெற்றன என்று முதலாம் பரமேஸ்வரனின் கூரம் பட்டயமும், நந்திவர்மனின் காசக்குடிப்பட்டயமும் குறிப்பிடுகின்றன. உழவர்கள், வணிகர்கள், கலைஞர்கள், பொற்கொல்லர், கருமார், தச்சர், மீனவர், கைவினைஞர்கள், கால்நடை வளர்ப்போர் உட்பட பல பிரிவினர் பல்லவர் கால சமுதாயத்தில் வாழ்ந்தனர்.

### பிரம்ம தேயங்கள்

நான்கு வேதங்களையும் கற்றுத் தேர்ந்த அந்தணர்களுக்கு, அரசன் கொடையாக வழங்கும் நிலம் **பிரம்மதேயம்** எனப்படும். இந்நிலங்கள் இறையிலி நிலங்களாக வழங்கப்படுவதால், அந்தணர்கள் இந்நிலத்திற்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டனர்.

வணிகர்கள் தங்களுக்கெனச் **சுதேசி, நானாதேசிகன், ஐந்நூற்றுவர்** போன்ற பெயர்களில் வாணிகக் குழுக்களை ஏற்படுத்திக் கொண்டனர். நானா தேசிகன் என்ற குழு வெளிநாடுகளுடன் வாணிகத்தில் ஈடுபட்டது.

## சமயநிலை

சைவம், வைணவம், சமணம் ஆகிய சமயங்கள் மக்களால் பின்பற்றப்பட்டன. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் போன்றோர் தமிழகம் முழுவதும் சைவ சமயத்தைப் பரப்பினர். மக்களும் இவர்களின் பாடல்களையும், போதனைகளையும் பின்பற்றினர்,பொய்கையாழ்வார்,பூதத்தாழ்வார், பேயாழ்வார் திருமழிசை ஆழ்வார், திருமங்கையாழ்வார் போன்றோர் வைணவ சமயத்தின் கருத்துகளைப் பரப்பினர். சப்தமாதர், மற்றும் ஜேஷ்டா தேவி வழிபாடுகளும் சிறப்பு பெற்றிருந்தன. சாக்தம் என்ற சக்திவழிபாடு, கௌமாரம் என்ற முருகவழிபாடு, சௌரம் என்ற சூரிய வழிபாடு போன்ற வழிபாட்டு முறைகள் இருந்தன. இக்காலத்தில்தான் **காணாபத்யம்** என்ற கணபதி வழிபாடு, சாளுக்கிய நாட்டிலிருந்து பல்லவ நாட்டிற்கு அறிமுகமாயிற்று. இவர்கள் காலத்தில் இந்து சமயத்தில் அறுவகை வழிபாடுகள் நடைமுறையில் இருந்தன.

சைவ, சமண சமயத்தார்களிடையே அடிக்கடி சமய கருத்து மோதல்கள் இருந்து வந்தன. காஞ்சிபுரம், வள்ளிமலை, பொன்னூர், திருக்காட்டுப்பள்ளி, செந்தலை, திருப்பாதிரிப்புலியூர் போன்ற இடங்களில் சமணர்கள் வசித்தனர். பல்லவ நாட்டில் பௌத்த சமயமும் மக்களால் பின்பற்றப்பட்டதை சீனப்பயணி யுவான்சுவாங்கின் பயணக் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். மேலும், காஞ்சியில் 100 பௌத்த மடங்களும் 1000 பௌத்தத்துறவிகளும் இருந்ததாக இக்குறிப்புகள் தெரிவிக்கின்றன. போதிமங்கை, பழையாறை, நாகப்பட்டினம் போன்ற இடங்களில் பௌத்தசமயம் செல்வாக்கு பெற்றிருந்தது.

## பெண்கள் நிலை

பல்லவர் காலத்தில் பெண்கள் உயர்வாகக் கருதப்பட்டனர், சமயத்திலும், கோயிற்பணிகளிலும் அவர்கள் ஈடுபட்டனர். பெண்களுக்குச் சொத்துரிமை இருந்தது. அரசியர், அரசகுலப் பெண்கள்



XII Ethics_Lesson 5.indd 109 16-03-2020 14:56:41

கோயிற்பணிகளில் ஈடுபட்டனர். கோயில்களுக்கு நிவந்தங்களும் அளித்தனர். நெசவுத்தொழில், பூவிற்றல், பால்விற்றல் போன்ற வியாபாரத்தில் பெண்கள் ஈடுபட்டனர்.

## பொருளாதார நிலை

பல்லவர்கள் காலத்தில் வேளாண்மை முக்கிய தொழிலாக விளங்கியது. மக்கள் மீது இருவகைப்பட்ட வரிகள் விதிக்கப்பட்டன. அவற்றில் முதல் வகை விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு வரியை கிராம அதிகாரிகள் வசூல் செய்து அரசிடம் செலுத்தினர். இரண்டாவது வகை உள்ளூர் அளவில் வசூலிக்கப்பட்டது. இவ்வரி கிராமத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய பயன்படுத்தப்பட்டது.(நீர்ப்பாசனம்,கோயில் விளக்கேற்றுதல் போன்றவற்றிற்கு) கால்நடை வளர்ப்போர், திருமண வீட்டார், மட்பாண்டம் செய்வோர், நெசவுத்தொழில் செய்வோர் ஆகியோரும் அரசிற்கு வரி செலுத்தினர்.

வாணிகத்தில் பொதுவாகப் பண்டமாற்றுமுறை நடைமுறையிலிருந்தது. அதே நேரத்தில்தங்கம்,வெள்ளி நாணயங்களும் புழக்கத்திலிருந்தன. பருத்திஆடைகள், நறுமணப்பொருட்கள், விலையுயர்ந்த கற்கள்,மூலிகைகள் போன்றவை ஜாவா, சுமத்ரா, கம்போடியா, இலங்கை, சீனா, பர்மா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. மாமல்லபுரம் முக்கிய துறைமுக நகரமாக விளங்கியது. தலைநகரான காஞ்சிபுரம் முக்கிய வாணிக மையமாகத் திகழ்ந்தது.

## இலக்கியங்கள்

பல்லவர்கள் காலத்தில் தமிழிலும், வடமொழியிலும் இலக்கியங்கள் இயற்றப்பட்டன. பல்லவ மன்னனான முதலாம் மகேந்திரவர்மன் **மத்தவிலாச பிரகசனம்** என்ற வடமொழி நாடக நூலை எழுதினார். போதயானர் என்பவர் பாகவஜீகம், தண்டின் என்பவர் தசகுமார சரிதம், அவந்திசுந்தரி கதச்சாரம், சர்வநந்தி என்பவர் லோகவிபாகம் போன்ற நூல்களை வடமொழியில் இயற்றினர். அவர்தம் கல்வெட்டுகள், பட்டயங்கள் ஆகியவற்றின் பெரும்பகுதி தமிழ்மொழியிலும் இடம்பெற்றிருந்தது.

- சேரமான் பெருமாள் நாயனார் – ஞானவுலா, பொன்வண்ணத்து அந்தாதி, மும்மணிக் கோவை
- கங்கநாட்டு மன்னன் கொங்கு வேளிர் – கொங்கு வேளிர் மாக்கதை (பெருங்கதை)
- மூன்றாம் சிம்மவர்மன் – சிவத்தளி வெண்பா
- தோலா மொழித்தேவர் – சூளாமணி
- பெருந்தேவனார் – பாரத வெண்பா
- திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர் – தேவாரம் மற்றும் 'நந்திக்கலம்பகம் (3 ஆம் நந்திவர்மனைப் பற்றியது) முத்தொள்ளாயிரம் (மூவேந்தர்களைப் பற்றியது), மற்றும் இலக்கண நூல்களாக சங்கயாப்பு பாட்டியல் நூல், மாபுராணம் போன்றவை இக்காலத்தைச் சார்ந்தவையாகும்.

## கட்டடக்கலை

பல்லவர்கள் கால கட்டடக்கலை மூன்றுபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அவை:

1. குடைவரைக் கோயில்கள் – முதலாம் மகேந்திரவர்மன் பாணி
2. ஒற்றைக்கல் ரதங்கள் – முதலாம் நரசிம்மவர்மன் பாணி
3. கட்டுமானக் கோயில்கள் – ராஜசிம்மன் பாணி, நந்திவர்மன் பாணி

## குடைவரைக் கோயில்கள்

தென்னிந்திய வரலாற்றில் முதல்முறையாகப் பல்லவ மன்னரான முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில், மலைகளைக் குடைந்து கோயில்கள் உருவாக்கப்பட்டன. இவை **குடைவரைக் கோயில்கள்** எனப்பட்டன. மண்டகப்பட்டு, பல்லாவரம், வல்லம், மாமண்டூர், மகேந்திரவாடி, சீயமங்கலம், தளவானூர், திருச்சி ஆகிய இடங்களில் முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில்



XII Ethics_Lesson 5.indd 110 16-03-2020 14:56:41

குடைவரைக் கோயில்கள் உருவாக்கப்பட்டன. கோயில்கள் கட்டும் கலையில் வல்லவனாக இருந்ததால் முதலாம் மகேந்திரவர்மன் **'சேத்தகாரி'** என்றழைக்கப்பட்டார். **மாமல்லன்** என்றழைக்கப்பட்ட முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில், மாமல்லபுரத்தில் குடைவரைக் கோயில்கள் கட்டப்பட்டன. இக்கோயில்களுடன் இரதங்கள் உருவாக்கப்பட்டன. இவர் காலத்து மண்டபங்களில் காணப்படும் தூண்களில் சிங்கம் முன்னங்கால்களில் நின்று, பின்னங்கால்களில் அமர்ந்துள்ளது போலக் காணப்படுகிறது.

## ஒற்றைக்கல் ரதங்கள்



பல்லவர் கால சிங்கமுகத்தூண்

முதலாம் நரசிம்மவர்மனின் சாதனை மாமல்லபுரத்தில் ஒற்றைக்கல்லால் செதுக்கப்பட்ட ரதங்களை உருவாக்கியதாகும். ஒரே இடத்தில் அமைக்கப்பட்ட ஐந்து ரதங்கள் **பஞ்சபாண்டவ ரதங்கள்** என்று அழைக்கப்படுகின்றன.

அவையாவன

1) திரௌபதிரதம்

2) அர்ச்சுனரதம்

3) பீமரதம்

4) தர்மராஜரதம்

5)நகுல,சகாதேவரதம்ஆகியவையாகும்.

அர்ச்சுனரதத்தில் கலைநுணுக்கத்துடன் சிவன், விஷ்ணு, மிதுனா, துவாரபாலகர் ஆகியோர் சிலைகள் செதுக்கப்பட்டுள்ளன. பஞ்சபாண்டவ ரதங்களில் நேர்த்தியானதும், அளவில் பெரியதும் தர்மராஜரதமாகும். இது சதுர வடிவிலான அடித்தளத்தையும், மூன்றடுக்கு விமானத்தையும் கொண்டுள்ளது. பீமரதம் செவ்வக வடிவிலான அடித்தளத்தையும் மூன்றடுக்கு விமானத்தையும் கொண்டுள்ளது. ஹரிஹரர், பிரம்மா, விஷ்ணு, ஸ்கந்தர் (முருகன்), சிவன், அர்த்தநாரிஸ்வரர், கங்காதரர் ஆகியோரின் சிற்பங்கள் அழகுற செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள ரதங்களில் சிறியது திரௌபதி ரதம் இது துர்க்கைக்கு அர்ப்பணிக்கப்பட்டதாகும்.



மாமல்லபுரம் திறந்தவெளிப் பாறை

மாமல்லபுரத்தில் திறந்தவெளிப் பாறையில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள், கலை வெளிப்பாட்டில் முக்கியமானவையாகும். இவற்றில் கங்கை நதி ஆகாயத்திலிருந்து இறங்கிவரும் கங்காதரர் காட்சி, சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. இது பகீரதன் தவம் அல்லது அர்ஜுனன் தவம் என்றும் அழைக்கப்படுகிறது.

## கட்டுமானக்கோயில்கள்

பல்லவ மன்னான ராஜசிம்மன் இவ்வகையிலான கட்டடக்கலைப் பாணியை அறிமுகப்படுத்தினார். இதன்படி, கற்கள் செதுக்கப்பட்டு அவற்றைக் கொண்டு கருவறை, அதன் மேல் விமானம், அர்த்தமண்டபம், முகமண்டபம், சுற்றுப்புறச்சுவர் போன்றவை ஏற்படுத்தப்பட்டன.



XII Ethics_Lesson 5.indd 111 16-03-2020 14:56:42

> ஐ.நா.வின் யுனெஸ்கோ அமைப்பு, 1984 ஆம் ஆண்டு மாமல்லபுரத்திலுள்ள கோயில்களை உலகப் பாரம்பரியச் சின்னமாக அறிவித்தது. மாமல்லபுரம் இந்தியாவின் முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

## மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்



வைகுண்ட பெருமாள் கோயில் – காஞ்சிபுரம்

இக்கோயில் இராஜசிம்மன் காலத்தில் மூன்று கருவறைகளுடன் கட்டப்பட்டது. சிவன், விஷ்ணு ஆகிய கடவுளர்களுக்குத் தனித்தனியே கருவறைகள் அமைக்கப்பட்டுள்ளன. விஷ்ணுவின் கருவறைப்பகுதியில் சுற்றுச்சுவரின் வெளிப்பக்கமும், சுற்றுச்சுவரிலும் புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. தென்னிந்தியாவிலுள்ள கட்டுமானக் கோயில்களில் இதுவே முதன்மையானதாகக் கருதப்படுகிறது. இக்கடற்கரைக் கோயில், பாறையில் செதுக்கப்பட்ட நான்கு அடுக்குகளைக் கொண்டுள்ளது. காஞ்சி முத்தேஸ்வரர் கோயில், கூரம் பெருமாள் கோயில், திருத்தணி வாடாமல்லீஸ்வரர் கோயில், குடிமல்லம் பரமேஸ்வரர் கோயில் போன்றவை நந்திவர்மன்காலக் கோயில்களாகும்.

## சிற்பக்கலை

பல்லவர்களது சிற்பங்களில் பெரும்பாலானவை புடைப்புச் சிற்பங்களாகும். அவர்களது கட்டுமானக் கோயில்களில் **சோமாஸ்கந்த புடைப்புச்** சிற்பமும், 16 பட்டைகளை உடைய நன்கு மெருகூட்டப்பட்ட சிவலிங்கமும் அமைந்திருப்பது பல்லவர்கால சிற்பக்கலையின் தனிச்சிறப்பாகும். இக்காலச் சிற்பங்களில், உயிரோட்டத்தையும் இயக்க நிலையையும் காணலாம். தமிழகத்தில் முதன்முதலில் அரசர், அரசியரின் முழு உருவச் சிற்பங்கள் செதுக்கப்பட்டதும் இவர்களது காலத்தையே சாரும். மாமல்லபுரத்தில் காணப்படும் ஒற்றைக்கல் சிங்கம், யானை, குரங்கு பேன்பார்க்கும் காட்சி, மகிஷாசுரமர்த்தினியின் போர்க்கோலக் காட்சி, திரௌபதி ரதத்தில் காணப்படும் சிற்பங்கள், கோவர்த்தனகிரியைக் கண்ணன் தாங்கிப் பிடிக்கும் காட்சி ஆகியவை சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இவை, பல்லவர்களின் சிற்பக்கலைச் சிறப்புகளை எடுத்தியம்புகின்றன.

## இசைக்கலை

பல்லவர்கள் இசைக்கலைக்கு ஊக்கம் அளித்தனர். சித்தம் நமசிவாய எனத் தொடங்கும் குடுமியான்மலை இசைக்கல்வெட்டு பல்வேறு விதமான இசை நுணுக்கங்களையும் இராகங்களையும் பற்றிக் குறிப்பிடுகிறது. **உருத்திராச்சாரியார்** என்பவரின் மாணவனான பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன், பரிவாதினி என்ற வீணையை மீட்டுவதில் வல்லவனாக இருந்தார். இதனால், இவருக்குச் '**சங்கீரணசாதி**' என்ற விருதுப்பெயர் கிடைக்கப் பெற்றது. வாத்ய வித்யாதரன், ஆதோத்ய தம்புரு ஆகிய விருதுப் பெயர்களை இராஜசிம்மன் பெற்றிருந்தார். (ஆதோத்ய என்ற வீணையை வாசிப்பதில் வல்லவன்)

யாழ், குழல், கின்னரி, கொக்கரி, வீணை, தக்கை, முழவம், மொந்தை, மிருதங்கம், மத்தளம், துந்துபி, தமுருகம், துடி, தாளம், உடுக்கை, கொடுகொட்டி, தத்தலம், குடமுழா, முரசம் ஆகிய இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டதாகத் தேவாரப்பாடல்கள் கூறுகின்றன. இசை நுணுக்கங்களைப் பற்றிக் குடுமியான் மலை இசைக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது.



XII Ethics_Lesson 5.indd 112 16-03-2020 14:56:42

## நடனம், நாடகக்கலை

காஞ்சிபுரம் வைகுந்தப் பெருமாள் கோயிலின் சுவர் சிற்பங்கள், காஞ்சி கைலாசநாதர் கோயில் சிற்பங்கள், ஓவியங்கள் போன்றவை பல்லவர்கள் கால நடனக்கலையின் சிறப்பைக் கூறுகின்றன.

நடனக்கலையுடன் நாடகக்கலையும் சிறப்புப் பெற்றிருந்தது. பல்லவமன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் **மத்தவிலாச பிரகசனம்** என்ற வடமொழி நாடகநூல் சமயக் கருத்தோடு மக்களின் வாழ்க்கை முறையையும் கூறுகிறது.

## ஓவியக்கலை



காஞ்சிகைலாசநாதர் கோயில் – காஞ்சிபுரம்

காஞ்சிகைலாசநாதர் கோயில், பனைமலை தாளகிரீஸ்வரர் கோயில் போன்றவற்றின் சுவர்களிலும், தூண்களிலும் மிக அழகிய வண்ண ஓவியங்கள் காணப்படுகின்றன. முதலாம் மகேந்திரவர்மன் ஓவியக்கலையில் வல்லவனாக இருந்ததால் '**சித்திரகாரப்புலி**' என்ற விருதுப்பெயர் பெற்றார். பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த மு.வே துப்ரெய்ல் என்பவர் பல்லவர் காலத்து ஓவியங்களைக் கண்டறிந்து வெளிப்படுத்தினார். காஞ்சி கைலாசநாதர் கோயிலில் காணப்படும் சிற்பங்கள் நடராஜரின் பல்வேறு நடனக் கோலங்களை வெளிப்படுத்துகின்றன.

## கல்வி

பல்லவர் காலத்தில் காஞ்சி பாகூர், பழம்பதி போன்ற இடங்களில் கல்விக் கூடங்கள் இருந்தன. இவை உயர்கல்வி போதிக்கும் இடமாகவும், வடமொழி கற்பிக்கும் கூடங்களாகவும் திகழ்ந்தன. காஞ்சியில் கல்வி கற்ற தர்மபாலர் நாளந்தா பல்கலைக் கழகத்தின் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

"கல்வியிற் கரையிலாத காஞ்சிமா நகர்" என்று, காஞ்சிபுரத்தின் கல்வி நிலையை அப்பர் புகழ்ந்து பாடியுள்ளார். கோயில்கள், மடங்கள், அக்ரஹாரங்கள் போன்றவை கல்வி மையங்களாகத் திகழ்ந்தன. காஞ்சிகைலாசநாதர் கோயிலில் சிற்பம், ஓவியம், இசை நடனம், நாடகம், இராமாயணம், மகாபாரதம் போன்றவை கற்பிக்கப்பட்டன. காஞ்சியில் இருந்த பௌத்தக் கல்விநிறுவனங்கள் 'கடிகை' என்றழைக்கப்பட்டன.

## பல்லவர்களின் பண்பாட்டுக் கொடைகள்

- தமிழ் இலக்கியமும் வடமொழி இலக்கியமும் ஒருங்கே சிறப்புப் பெற்றன.
- தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு நாயன்மார்கள், ஆழ்வார்கள் பெரும் பங்காற்றினர், இதனால் சைவமும் – வைணவமும் தழைத்தோங்கின.
- கலம்பகம் என்ற சிற்றிலக்கியப் பகுதி புதியதாகத் தோன்றியது. இவ்விலக்கிய வகைக்கு நந்தி கலம்பகம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.
- திராவிட கலை பாணியிலமைந்த கோயில்கள், பிற்காலச் சோழர்கால கட்டடக்கலைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தன.
- பல்லவ மன்னர்கள் கலை, இலக்கியங்களை ஆதரிக்கும் புரவலர்களாகத் திகழ்ந்தனர்.
- சப்தமாதர், ஜேஷ்டாதேவி போன்ற பெண் தெய்வ வழிபாட்டுமுறை சிறப்பு பெற்றிருந்தன.
- குடைவரைக் கோயில்களும், ஒற்றைக்கல் ரதங்களும் இவர்கள் காலத்தில் ஏற்படுத்தப்பட்டன.
- காணபதீயம் என்ற கணபதி வழிபாடு, இவர்கள் காலத்தில் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.



XII Ethics_Lesson 5.indd 113 16-03-2020 14:56:42

## 5.8 சோழர்காலப் பண்பாடு

பழந்தமிழ்நாட்டை ஆண்ட மூவேந்தர்களுள் ஒருவர் சோழர்களாவர். காவிரிப் பகுதியில் நெல் மிகுதியாக விளைந்த நாடு சோழ நாடெனப்பட்டது. 'சோழ நாடு சோறுடைத்து' என்பது முதுமொழி. எனவே, 'சோறுடைத்த நாடு' பின் சோழ நாடாகியது. கி.பி. (பொ.ஆ.) 9 –ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு வலிமை பெற்று விளங்கிய சோழமன்னர்கள் பிற்காலச் சோழர்கள் எனப்படுகின்றனர். இந்திய வரலாற்றில் முதலாம் இராஜராஜ சோழனும், அவரது மகன் முதலாம் இராஜேந்திர சோழனும் குறிப்பிடத்தக்க சோழ மன்னர்களாவர். இவர்களுடைய எல்லை வடக்கே ஒடிசா வரையிலும், கிழக்கில் ஜாவா, சுமத்ரா, மலேசியா வரையிலும் தெற்கே மாலத்தீவுகள் வரையிலும் பரந்து விரிந்திருந்தது.

கடல் கடந்து கடற்படை மூலம் வெற்றிகொண்டவர்கள் பிற்காலச் சோழர்களேயாவர். இவர்களது கொடியில் புலிச்சின்னம் இடம் பெற்றிருந்தது. இராஜேந்திரசோழனது காலத்தில் வடஇந்தியாவிலுள்ள கங்கை வரை படையெடுத்தும், கப்பற்படை மூலமாக மலாய் தீபகற்பத்திலுள்ள கடாரம், ஸ்ரீ விஜயம் வரை சென்றும் வெற்றி கண்டது.

### சான்றுகள்

பிற்காலச் சோழர்களின் வரலாற்றை அறிந்துகொள்வதற்கு வரலாற்றாசிரியர்கள் வெங்கையா, உல்ச், கிருஷ்ணசாஸ்திரி ஆகியோர்கள் தொகுத்த கல்வெட்டுகளும், அன்பில் பட்டயங்கள், திருவாலங்காட்டுச் செப்பேடுகள், கரந்தை செப்பேடுகள், ஆனைமங்கலம் செப்பேடுகள், லெய்டன் செப்பேடுகள் போன்றவையும் சான்றுகளாகத் திகழ்கின்றன. மேலும் இலக்கியங்கள், மெய்க்கீர்த்திகள், நாணயங்கள், கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, படிமக்கலை முதலியனவும் சோழர்களின் ஆட்சிமுறையைப் பற்றி அறிய உதவும் சான்றுகளாக உள்ளன.

### மெய்க்கீர்த்திகள்

மெய்க்கீர்த்தி என்பது, அரசனின் புகழுக்குரிய சாதனைகளை விளக்கிக் கூறும் ஆவணமாகும். இவை முதலாம் இராஜராஜ சோழன் காலத்தில் முக்கியத்துவம் பெற்றன. இவருக்குப் பின் வந்த சோழ மன்னர்கள், தங்கள் சாதனைகளைக் குறிப்பிடும் அரச ஆவணமாக இவற்றை உருவாக்கினர்.

### ஆட்சிப் பிரிவுகள்

சோழப் பேரரசு, ஒன்பது மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சோழப்பேரரசின் சிறிய பிரிவு கிராமம் ஆகும். பல கிராமங்கள் கொண்டது நாடு எனவும் பல நாடு கொண்டது வளநாடு எனவும், பல வளநாடுகள் கொண்டது ஒரு மண்டலம் எனவும் அழைக்கப்பட்டன.

**சோழர் காலத்து மண்டலங்கள்**

சோழர் காலத்துப் பேரரசு ஒன்பது மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது.

- சோழ மண்டலம் – திருச்சி, தஞ்சை பகுதிகள்
- இராஜாராஜ பாண்டி மண்டலம் – பாண்டிய நாடு
- ஜெயங்கொண்ட சோழ மண்டலம் – தொண்டை நாடு
- மும்முடி சோழ மண்டலம் – இலங்கை
- முடிகொண்ட சோழ மண்டலம் – கங்கபாடி
- நிகரிலி சோழ மண்டலம் – நுளாம்பாடி
- அதிராஜராஜ சோழ மண்டலம் – கொங்கு நாடு
- மலை மண்டலம் – கேரளம்
- வேங்கை மண்டலம் – கீழை சாளுக்கிய நாடு



XII Ethics_Lesson 5.indd 114 16-03-2020 14:56:42

## சோழர் ஆட்சி முறை

சோழர்கள் முடியாட்சி முறையைப் பின்பற்றினார்கள். மன்னர்கள் தங்களுக்குப் பிறகு புதல்வர்களில் மூத்தோருக்கு இளவரசர் பட்டம் சூட்டினர். சோழ மன்னர்கள் முடிசூட்டி அரச உரிமைபெறும் நன்னாளில் சக்கரவர்த்திகள், திரிபுவன சக்கரவர்த்திகள், இராஜகேசரி வர்மன், பரகேசரி வர்மன், இராஜாதி ராஜன், போன்ற பட்டங்களைச் சூட்டிக் கொண்டனர். மன்னரின் கீழ் செயல்பட்ட அதிகாரிகள் **சிறுதனம்** மற்றும் **பெருந்தனம்** என அழைக்கப்பட்டனர். இவர்களில்

- திருவாய் கேள்வி – அரசனின் ஆணைகளை வெளியிடுபவர்
- திருமந்திர ஓலை நாயகம் – அரசின் ஆணைகளை ஓலையில் எழுதுபவர்
- கருமவிதிகள் – ஆணைகளை நாட்டின் பல இடங்களுக்குக் கொண்டு செல்பவர்.
- புரவுவரி திணைக் களத்தார் – நிலவரிக் கழகம்
- வரிப்பொத்தகக் கணக்கு– தணிக்கை அதிகாரி
- திருமுகக் கணக்கு – அரண்மனைக் கணக்காளர்
- நாடுவகை செய்வார் – விளை நிலத்தின் தரத்தைப் பிரிப்பவர்
- நாடு காவல் அதிகாரி – நாட்டில் அமைதியை நிலைநாட்டுபவர்.

போன்றோர் அரசவையில் இடம்பெற்றிருந்தனர்.

## கிராம ஆட்சிமுறை

சோழர் காலத்தில் கிராம ஆட்சிமுறை சிறப்புப் பெற்றிருந்தது. கிராம சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை, அதன் செயல்பாடுகள் குறித்து உத்திரமேரூர் கல்வெட்டில் குறிப்பிடப்படுள்ளது.


## குடவோலை முறை

முதலாம் பராந்தகன் காலத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் குடவோலை முறையின் மூலம் சபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமுறைகள் பற்றி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

## சபை உறுப்பினராவதற்குத் தகுதிகள்

- உறுப்பினராவதற்குக் கால்வேலி நிலம் சொந்தமாக இருக்க வேண்டும்.
- சொந்த நிலத்தில் வீடு இருக்க வேண்டும்.
- 35 வயது முதல் 70 வயதிற்குள் நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.
- வேதங்கள், புராணங்கள் கற்றுத்தேர்ந்தவராக இருக்கவேண்டும்.
- ஒரு முறை உறுப்பினராய் இருந்தோர், அடுத்த ஐந்து ஆண்டுக்குப் பிறகே உறுப்பினராக முடியும்.

## தேர்ந்தெடுக்கும் முறை




குடவோலை முறை

ஊர் பல குடும்புகளாகப்(Ward) பிரிக்கப்படும். ஒவ்வொரு குடும்பிலும் தகுதியுடையவர்களின் பெயர்களைப் பனை ஓலையில் எழுதி அதனைக் குடத்தில் இடுவார்கள். தேர்தல் நாளன்று அக்குடத்தைச் சபையோர்முன் நன்றாகக் குலுக்கிய பின், 5 வயதுக்குட்பட்ட சிறுவனைக் குடத்திலுள்ள ஓர் ஓலையை எடுக்கச் செய்வர். அதில், யார் பெயர் வருகிறதோ, அவரையே உறுப்பினராகத் தேர்ந்தெடுப்பர். இவ்வாறு, சபையின் உறுப்பினர்கள் குடவோலை முறையால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



XII Ethics_Lesson 5.indd 115 16-03-2020 14:56:42

## படைகள்

கடல் கடந்த நாடுகளைக் கைப்பற்றியவர்கள் சோழர்களே. எனவே, சோழப் பேரரசில் ஆற்றல்மிக்க தரைப்படை, யானைப்படை, கப்பற்படை ஆகியன இருந்தன. முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் ஆகியோர் காலத்தில் **'மூன்று கை மகாசேனை'** என்ற சிறப்புப் படை இருந்தது. அப்படை உள்நாட்டிலும்,வெளிநாட்டிலும் வெற்றிகளைப் பெற்றுத் தந்தது.

## சமுதாய வாழ்க்கை

சோழர்கால சமூகத்தில் சாதிமுறை குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருந்தது. சோழர்காலத்தில் அந்தணர், வணிகர், வெள்ளாளர், படைவீரர் தவிர அவரவர் செய்யும் தொழிலின் அடிப்படையில் தனித்தனி சாதிகளாகப் பிரிக்கப்பட்டனர். உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடுகள் நிலவின.

சோழமன்னர்கள் அந்தணர்களுக்கு பிரம்மதேயம், சதுர்வேதிமங்கலம் போன்ற இறையிலி நிலங்களைக் கொடுத்துக் கோயில்களில் பணியமர்த்தினர். இவர்கள் பெற்ற நிலங்கள் **இறையிலி நிலங்கள்** எனப்பட்டன. மக்களுக்கு வேதங்களை விளக்கி உரைப்போருக்கு வேதவிருத்தி, பாரதக்கதை கூறுவோர்க்கு பாரதவிருத்தி, புராணங்களை உரைப்போருக்கு புராண விருத்தி போன்ற நிலங்கள் தானமாக வழங்கப்பட்டன. கோயில் பணிகளும் அவற்றின் அறக்கட்டளைகளும் அந்தணர்களிடமே ஒப்படைக்கப்பட்டன. இவற்றை ஏற்று நடத்துபவர்களுக்கு **'மூலப்பருடையோர்'** என்று பெயர்.

## பெண்கள் நிலை

சமூக வாழ்க்கையில் பெண்கள் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தனர். 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற நியதி நடைமுறையில் இருந்தது கணவரை இழந்த பெண் பிரிவாற்றாமல் உடன்கட்டை ஏறுவதைப்பற்றிச் சில கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. முதலாம் பராந்தகன் ஆட்சிக் காலத்தில் வீரச்சோழ இளங்கோவேள் என்ற கொடும்பாளூர் சிற்றரசனின் மனைவி கங்காதேவியார் தீக்குளித்த செய்தியும், இராசராச பேரரசனின் தாயாரும் சுந்தர சோழனின் மனைவியுமான வானவன் மாதேவியார் உடன்கட்டை ஏறிய செய்தியும் திருவாலங்காட்டு செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பொருளாதார நிலை

வேளாண்மைசெய்வோர்சமுதாயத்தின் முக்கிய நபராகக் கருதப்பட்டனர். இவர்களைச் **சித்திரமேழிய பெரிய நாட்டார்** என்று குறிப்பிட்டனர். வணிகம் செய்வோர் வாணியர் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் காலத்தில் நகரத்தார், மணிக்கிராமத்தார், வலஞ்சியர், நானாதேசிகள், திசையாயிரத்து ஐந்நூற்றாவர் என்று பல வணிக குழுக்கள் இருந்தன.

## கல்வி

சோழர்காலத்தில் தமிழ் மற்றும் சமஸ்கிருத மொழியில் கல்வி போதிக்கப்பட்டன. கோயில்கள் கல்விக் கூடங்களாகத் திகழ்ந்தன. முதலாம் பராந்தகன் வேத பாட சாலை நடத்துவதற்காக, மான்யம் அளித்துள்ள செய்தியைக் காமப்புல்லூர் கல்வெட்டு பகர்கின்றது. முதலாம்இராஜராஜன் காலத்தில் வேதங்களையும், இலக்கணங்களையும் கற்பிக்கும் ஆசிரியரின் தகுதிகளை அணியூர் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இராஜேந்திரன் காலத்தில் வேதங்களைப் போதிக்கும் கல்விக்கூடங்கள் திரிபுவனம், எண்ணாயிரம், திருவொற்றியூர், வேம்பந்தூர் போன்ற இடங்களில் இருந்தன. பிற்காலச் சோழர்கள் காலத்தில் தமிழிலக்கியம் அதன் உச்சத்தை அடைந்தது. இறவாப் புகழ் பெற்ற தமிழிலக்கியங்கள் இவர்கள் காலத்தில் இயற்றப்பட்டன. அவை

## இலக்கியம்

- ஔவையார் – ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை
- சேக்கிழார் – பெரியபுராணம் அல்லது திருத்தொண்டர் புராணம்



XII Ethics_Lesson 5.indd 116 16-03-2020 14:56:42

- கம்பர் – கம்பராமாயணம், ஏரெழுபது, சடகோபரந்தாதி, சரஸ்வதி அந்தாதி, இலக்குமி அந்தாதி, சிலை எழுபது
- புகழேந்திப்புலவர் – நளவெண்பா
- ஒட்டக்கூத்தர் – மூவருலா, பிள்ளைத் தமிழ் (குலோத்துங்க சோழன்)
- ஜெயங்கொண்டார் – கலிங்கத்துப்பரணி
- கச்சியப்ப சிவாச்சாரியார் – கந்த புராணம்

போன்ற நூற்படைப்புகள் சோழர்கால இலக்கியத்திற்குப் பெருமை சேர்ப்பவையாகும்.

**மூவருலா**

உலா என்ற சிற்றிலக்கிய வகையைப் பின்பற்றி ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்ட நூல் மூவருலா ஆகும். விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கசோழன், இரண்டாம் இராஜராஜசோழன் ஆகிய மூன்று சோழ மன்னர்களைப் புகழ்ந்து பாடியதால், இந்நூல் மூவருலா எனப்பட்டது.

நம்பியாண்டார் நம்பி என்பவர் சைவத் திருமுறைகளைத் தொகுத்தார். மேலும், சைவ சமயச் சாத்திரங்கள் பதினான்கு நூல்களும் சேக்கிழார் காலத்தைத் தொடர்ந்து இயற்றப்பட்டுள்ளன.

பேரரசு முழுவதும் கோயில்களிலும், மடங்களிலும் திருப்பாவை, திருவெம்பாவை ஓதப்பட்டன. சைவ சித்தாந்த நூல்களும் இக்காலத்தே மலர்ந்தன. மெய்கண்டார் சிவஞானபோதம் என்ற நூலை இயற்றினார். வாகீச முனிவரின் ஞானாமிர்தம், திருவிய்யலூர் உய்யவந்த தேவநாயனார் எழுதிய திருவுந்தியார். அருள்நந்தி சிவாச்சாரியார் எழுதிய சிவஞானசித்தியார், உமாபதி சிவாச்சாரியாரின் எட்டு நூல்கள் சோழர்காலத்தில் இயற்றப்பட்டன.

## சமயம்

சோழர் சைவசமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர். இவர்கள் காலத்தில் சைவசமயம் உயர்ந்த நிலையிலிருந்தது. வைணவமும் சிறப்புப் பெற்றிருந்தது. சைவ, வைணவ மடங்களும் கோயில்களும் அமைக்கப்பட்டன. இம்மடங்களில் உணவிடுதல், விளக்கேற்ற எண்ணெய் வழங்குவது, நோய்க்கு மருத்துவம் செய்வது ஆகியன மேற்கொள்ளப்பட்டன.

## கட்டடக்கலை

சோழப் பேரரசின் தொடக்கக் கால கட்டடங்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. திருக்கட்டளை என்னும் இடத்திலுள்ள சுந்தரேஸ்வரர் கோயில், நார்த்தாமலையில் உள்ள விஜயாலய சோழீஸ்வரம் கோயில், கொடும்பாளூரிலுள்ள மூவர் கோயில் என்பன குறிப்பிடத்தக்கன. இன்றும் நிலைத்து நிற்கும் சோழர்கால கோயில்கள் கற்றளிகளால் ஆனவை.

## தஞ்சை பிரகதீஸ்வரர்கோயில்



பிரகதீஸ்வரர் கோயில் – தஞ்சை

இக்கோயில் **முதலாம் இராஜராஜ சோழனால்** கி.பி. (பொ.ஆ.) 1003–ஆம் ஆண்டில் தொடங்கி, கி.பி. (பொ.ஆ.) 1010–ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. தஞ்சாவூரில் உள்ள தஞ்சைப் பெருவுடையார் கோயில், (பிரகதீஸ்வரர் கோயில்) சோழர்கள் காலத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. சோழர் கால கட்டடக்கலையின் முதிர்ச்சியை



XII Ethics_Lesson 5.indd 117 16-03-2020 14:56:42

இக்கோயில் வெளிப்படுத்துகிறது. சோழர்கால கட்டடக்கலையின் மணிமகுடமாக இக்கோயில் திகழ்கிறது. 90 அடி அகலம் 90 அடி நீளமுடைய கருவறைக்குமேல் நிலத்திலிருந்து 216 அடி உயரமுடைய விமானத்தைக் கொண்டது. இதனை **'இராசராசன் தக்கணமேரு'** என்பர். இதன் பொருள் **தென்னகத்தின் இமயமலை** என்றும் **இராஜராஜேஸ்வரம்** என்றும் அழைக்கப்படுகிறது.

தஞ்சைப் பெருவுடையார் கோயில் என்பதன் வடமொழியாக்கமே பிரகதீஸ்வரர் கோயில். இக்கோயில் தொடக்கக் காலத்தில் இராஜராஜேஸ்வரம் என்றும் தஞ்சைப் பெருவுடையார் கோயில் என்றும் மராட்டிய மன்னர்கள் காலத்தில் பிரகதீஸ்வரம் என்றும் அழைக்கப்பட்டது. இக்கோயிலின் நந்தி ஒரே கல்லால் ஆனது. தஞ்சைப் பெரியகோயிலில் ஆயிரமாவது ஆண்டுவிழா 2010 செப்டம்பர் 25 –ஆம் நாள் சிறப்பாக நடைபெற்றது.

## கங்கைகொண்டசோழபுரம்



கங்கை கொண்ட சோழபுரம் கோயில்

முதலாம் இராஜேந்திர சோழன் தனது கங்கை வெற்றியின் நினைவாக உருவாக்கிய கங்கைகொண்ட சோழபுரத்தில் கட்டிய கோயில், கங்கைகொண்ட சோழீஸ்வர கோயில் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயிலின் விமானம் 150 அடி உயரமுடையது. இக்கோயிலின் உட்பகுதியில் தெற்கில் நடராசர் கோயிலும், வடக்கில் சண்டிகேசுவரக் கோயிலும் மேற்கில் சுடரி லிங்கமும் அமைந்துள்ளன. அம்மனுக்குத் தனிக் கோயில் அமைந்துள்ளது. இவ்வூரில் இவர் ஏற்படுத்திய ஏரி, சோழ கங்கம் எனப்பட்டது.

## தாராசுரம் – ஐராவதேஸ்வரர் கோயில்

இக்கோயில் இரண்டாம் இராசராசன் காலத்தில் கட்டப்பட்ட கோயிலாகும். இதில் சக்கரங்களை அமைத்துத் தேரை இழுத்துச் செல்வது போன்ற கல்தேர் அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்தை உற்று நோக்கினால் நாகரம், திராவிடம், வேசரம் ஆகிய மூன்று கலைபாணிகளை உள்ளடக்கியுள்ளதைக் காணலாம். இக்கோயிலின் விமான சுவர்களில் 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றுச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.



ஐராவதேஸ்வரர் கோயில் – தாராசுரம்

## திரிபுவனம் – கம்பகரேசுவரர் கோயில்

மூன்றாம் குலோத்துங்கன் பாண்டியரை வென்று, மதுரையில் திரிபுவன வீரத்தேவன் என்ற பட்டம் சூட்டியதன் விளைவாக இக்கோயிலை கட்டினான்.

## சிற்பக்கலை

சோழர்காலச் சிற்பங்கள், கோயில் சுவர்களிலும் தூண்களிலும் காணப்படுகின்றன. பொதுவாகச் சிவன் கோயில்களில் கருவறையின் மேற்குப் பகுதியில் லிங்கோத்பவர், தெற்குப் பகுதியில்



XII Ethics_Lesson 5.indd 118 16-03-2020 14:56:43

தட்சிணாமூர்த்தி, வடக்கே பிரம்மா ஆகியோரின் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### படிமக்கலை

கல்லில் சிலை வடித்ததைப் போன்று உலோகங்களினால் வார்ப்புச் சிலைகள் உண்டாக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டது. அவை செம்பு, வெண்கலம், வெள்ளி போன்றவற்றால் வடிவமைக்கப்பட்டன. நடராசர் சிலை, சோழர் காலச் செப்புத் திருமேனிகளில் தலை சிறந்ததும் உலகப் புகழ்பெற்றதுமாகும்.

### ஓவியக்கலை

சோழர்கள் காலத்தில் தஞ்சைகோயிலின் கருவறைச் சுவரில் காணப்படும் ஓவியங்கள் மிகச் சிறப்புடையனவாகும். அவற்றில் தடுத்தாட்கொண்ட சுந்தரர் வரலாறும் சிவபெருமான் புலித்தோல்மீது அமர்ந்துள்ள கைலாயக் காட்சியும், சுந்தரர் வெள்ளை யானைமீது அமர்ந்து செல்லும் காட்சியும் மிகவும் சிறப்பானதாகும்.

### நடனக்கலை

சிதம்பரம், தஞ்சை, காஞ்சி போன்ற கோயில்களில் காணப்படும் நடன மாந்தர்களின் சிற்பங்களும், பெரியபுராணம், கம்பராமாயணம் காட்டும் நடனக்கலையும் சோழர்கால நடனக்கலைக்குச் சான்றாகும். சோழர் கால நடனக் கலைஞர்களுக்கு **மாணிக்கம், காவிதி, தலைக்கோலி**, ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டன.

### இசைக்கலை

சோழர்கால இசைக்கலையில் ஆய்ச்சியர் குரவை குறிப்பிடத்தக்கது. ஏழுபண்களை மாறிமாறிப்பாடி இசை எழுப்புபவர், நமசிவாயா என்பதை மாற்றி உச்சரித்து ஓசைநயம் காட்டிப்பாடுவர். இதுவே ஆய்ச்சியர் குரவை எனப்பெறும். கலிங்கத்துப்பரணி, சீவகசிந்தாமணி, பெரியபுராணம், திருவிசைப்பா முதலியன சிறந்த இசைப்பாடல்களாகும். தேவாரப்பாடல்களை ஓதவும் திருப்பதிகங்களை விண்ணப்பிக்கவும் இசைக் கலைஞர்களுக்குத் திருத்தாண்டகம் என்ற நிலம் அளிக்கப்பட்டது.

### இந்தியப்பண்பாட்டிற்குச் சோழர்களின் கொடை

- மன்னருக்கு வாரிசு இல்லாதபோது, அரச குடும்பம் சார்ந்த/சாராத ஒருவர் மன்னராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முறை, நல்லாட்சிக்கு சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும்.
- கிராமசபை உறுப்பினர்களைக் குடவோலைமுறையில் தேர்ந்தெடுக்கப் பட்ட தேர்தல் முறையானது, இந்தியப்பண்பாட்டிற்குச் சோழர்கள் நல்கிய சிறந்த கொடையாகும்.
- சோழர்காலத்தில் கொண்டு வரப்பட்ட குடும்புகள் முறை, தற்கால கிராம ஊராட்சி உறுப்பினர்களுக்கு அடிப்படையானது.
- சோழர் காலத்தில் நிலங்கள் அளக்கப்பட்டு தரம் வாரியாக வரிவிதிக்கப்பட்டது. முதலாம் இராஜராஜ சோழன் நிலம் அளந்து தரம் பிரித்ததால் '**உலகளந்த சோழன்**' என்று புகழப்பட்டார்.'
- ஐம்பெரு மற்றும் ஐஞ்சிறு காப்பியங்கள், இலக்கண நூல்கள், நிகண்டுகள் போன்றவை தமிழ் இலக்கியப் படைப்பிற்கும் இந்தியப்பண்பாட்டிற்கும் சிறந்த கொடைகளாகும்.
- நாதமுனிகள் தொகுத்தளித்த நாலாயிரத் திவ்விய பிரபந்தம், சோழர் காலத்தில் வழங்கப்பட்ட சிறந்த இலக்கியக் கொடையாகும்.
- குலோத்துங்க சோழப் பேரேரி, இராசேந்திர சோழப் பேரேரி போன்றவை சோழர் காலத்தில் வெட்டப்பட்ட ஏரிகளாகும்.
- ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையும் அவர்களின் தகுதியும் கடமையும் பற்றிச் சோழர்கால கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.
- சோழர்காலத்தில் வேதக்கல்வி மற்றும் மருத்துவக்கல்வி போன்றவை இந்தியப்பண்பாட்டிற்கு அளித்த நன்கொடையாகும்.



XII Ethics_Lesson 5.indd 119 16-03-2020 14:56:43

## 5.9 பாண்டியர்காலப் பண்பாடு

பிற்காலப் பாண்டியர்கள் கி.பி. (பொ.ஆ)12–ஆம் நூற்றாண்டின் இறுதியில் முதலாம் சடையவர்மனின் தலைமையில் எழுச்சி பெற்றனர். முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன், முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன், முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் ஆகியோர் பிற்காலப் பாண்டியவம்சத்தின் சிறந்த மன்னர்களாகத் திகழ்ந்தனர். கோப்பெருஞ்சிங்கனின் வயலூர் கல்வெட்டு, பிற்காலப் பாண்டியர்களைப் பற்றி அறிய உதவும் சான்றாக உள்ளது.

### ஆட்சி முறை

பிற்காலப் பாண்டியப் பேரரசு மண்டலம், வளநாடு, ஊர் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. கல்வெட்டுச் சான்றுகள் மதுரோதய வளநாடு, ஸ்ரீவல்லப வளநாடு, பராந்தக வளநாடு, சுமிதரணவளநாடு ஆகிய வளநாடுகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. நாட்டின் தலைவன் மன்னன் ஆவார். மன்னனுக்கு ஆட்சியில் உதவுவதற்கு **மகாமந்திரர்** எனப்பட்ட அமைச்சரவை இருந்தது. படைத்தலைவர் சேனாதிபதி என்றும், அனைத்துப் படைகளுக்கும் பொதுவான தலைவர் **மகாசாமந்தன்** எனவும் அழைக்கப்பட்டனர். மேலும், பல அரண்மனைப் பணிகளைக் கண்காணித்தவர்கள் அகப்பரிவர முதலி, திருவாசல் முதலி என்றழைக்கப்பட்டனர்.

வரிவசூல் செய்வதற்குப் **புரவுவரித் திணைக்களத்து முகவெட்டி** என்ற வருவாய் அதிகாரி நியமிக்கப்பட்டார். தலைமை அதிகாரி **திணைக்களநாயகம்** என்றழைக்கப்பட்டார். வரி நிர்ணயம் செய்வோர் நாடு வகை செய்வோர் எனவும் வரித்தண்டல் செய்த அதிகாரி 'முதலி' எனவும் அழைக்கப்பட்டனர்.

### படைப்பிரிவுகள்

பிற்காலப் பாண்டியர்கள் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை ஆகிய நான்கு படைப்பிரிவுகளைப் பெற்றிருந்தனர். இவற்றைத் தவிர அவசர காலத்தில் பயன்படும் முனையெதிர்மோகர், தென்னவன் உதவிகள் என்ற படைப்பிரிவுகளும் இருந்தன. படைப்பாசறையைக் கண்காணிக்கும் அதிகாரி **ஆராய்ச்சி நாயகம்** எனப்பட்டார்.

### நீதித்துறை

பிற்காலப் பாண்டியர்களின் நீதித்துறை '**தருமாசனம்**' என்றழைக்கப்பட்டது. அதற்கு அரசரே தலைவராக இருந்தார். உள்ளாட்சி அமைப்புகள் (ஊரவை) குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்தன. ஊரவை நிராகரித்த வழக்குகள் அரசவைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

### ஊராட்சி முறை (உள்ளாட்சி முறை)

பாண்டியர்களின் ஆட்சியில் உள்ளாட்சி அமைப்புகள் வலிமை பெற்றுத் திகழ்ந்தன. இதில் மூன்று வகை சபைகளிருந்தன.

- பிராமணர்கள் இருந்த பிரம்மதேயச் சபை
- பிரம்மதேயமல்லாத ஊர்களிலிருந்த சபை
- வணிகர்கள் வாழ்ந்த நகரசபை

மேற்காணும் சபைகளைப் பற்றி, **மானூர்** கல்வெட்டு குறிப்பிடுகிறது. சபை உறுப்பினர்கள் 'குடவோலை' முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தகுதிக்கேற்ப வாரியப் பணிகளில் நியமிக்கப்பட்டனர்.

### சமூக நிலை

பாண்டியர்கள் காலத்தில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் ஆகிய நான்கு பிரிவு மக்கள் வாழ்ந்தனர். மறவர், தச்சர், ஆயர், கொல்லர், மருத்துவர், நெசவாளர், முத்துக்குளிப்போர் போன்ற பிறபிரிவு மக்களும் வாழ்ந்து வந்தனர். முதலாம் மாறவர்மன் காலத்தில் அந்தணர்களுக்கென அக்ரஹாரங்கள் என்ற குடியிருப்புகள் ஏற்படுத்தப்பட்டு, அதற்கு **அவனி வேந்த சதுர்வேதி மங்கலம்** என்று பெயரிடப்பட்டது.

பிற்காலப் பாண்டியர்கள் காலத்தில் முத்துக்குளித்தல் முக்கிய தொழிலாக இருந்தது. கடலில் மூழ்கி முத்துக் குளிப்போர் மிகுதியாயிருந்தனர். வணிகர்கள் வாழ்ந்த

பகுதிகள் நானாதேசிகப்பெருந்தெரு, ஐந்நூற்றுவர்பெருந்தெரு என்றழைக்கப்பட்டன. ஆலயங்களுக்குத் திருப்பணி செய்வதிலும் வணிகர்கள் ஈடுபட்டனர். வேளாளர்கள் வேளாண்மைத் தொழிலைச் செய்தனர். இவர்கள் தங்களை **பூமிபுத்திரர்கள்** என்றும், நாட்டு மக்கள் என்றும் அழைத்துக் கொண்டனர். நிலக்கிழார்களும் வேளாளர்களும் இணைந்த சமூகப் பிரிவு **சித்திரமேழி பெரிய நாட்டார்** எனப்பட்டது. ஏர் உழவர்கள் '**மேழிச் செல்வம்**' எனப்பட்டனர். பதினெட்டு வகையான தொழில்களைச் செய்வோர் '**இரதகாரர்கள்**' எனப்பட்டனர்.

பிற்காலச் சமூகநிலை பற்றி மார்க்கோபோலோ மற்றும் வாசப் ஆகிய அயல்நாட்டுப்பயணிகள் பின்வரும் செய்திகளைத் தங்கள் குறிப்புகளில் பதிவு செய்துள்ளனர். அவையாவன:

- பாண்டிய நாட்டில் வாழும் மக்கள் பசுக்களைப் போற்றி வணங்குவர்.
- தங்களின் வீட்டினைச் சுத்தமாக வைத்திருந்தனர். வீட்டின் தரைகளைச் சாணத்தால் மெழுகிச் சுத்தப்படுத்தினர்.
- உயர்வு-தாழ்வின்றி அனைவரும் தரையிலேயே அமர்ந்தனர்.
- சாதாரண மக்களின் ஆடைகள் எளியனவாகவும் அரச குடும்பத்தினரின் ஆடைகள் ஆடம்பரமாகவும் இருந்தன.
- குளித்த பிறகே காலை உணவுண்ணும் பழக்கத்தை மேற்கொண்டனர்.
- மது அருந்துதல் பெருங்குற்றமாகக் கருதப்பட்டது. அவ்வாறு மது அருந்திவிட்டுப் பேசுவோரின் வாக்கினைப் புறக்கணித்தல் சமூக மரபாயிற்று
- பெண்கள் சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருந்தனர்.
- அரசகுலப் பெண்கள் கோயில்களுக்காக நிலங்களைத் தானமாக வழங்கினர்.
- மார்கழி மாதம் விடியற்காலையில், பெண்கள் வீட்டு வாசலில் கோலமிட்டு நோன்பிருந்தனர்.
- பெண் வீட்டார் மணமகனுக்குச் சீதனம் தந்து திருமணம் செய்யும் வழக்கம் இருந்தது.
- பெண்கள் கோயில்களிலேயே தங்கி, இறைப்பணி செய்தனர்.
- பதின்மூன்று வயதுடைய ஆண்மகன், தன் தாய்க்குத் தன் உழைப்பில் பொருளீட்டி உணவளித்தான். தந்தையின் உழைப்பில் அவன் வாழவில்லை.

## கல்வி

பிற்கால பாண்டியர் காலத்தில் வேதபாடசாலைகள் இருந்தன. இப்பாடசாலைகளில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு '**பட்டவிருத்தி**' என்ற விருதும் '**சாலபோகம்**' என்ற மானியமும் வழங்கப்பட்டன. அந்தணர்கள் நடத்திய பாடசாலைகள் **கடிகை, வித்யாஸ்தானம்** என்றழைக்கப்பட்டன. இங்குக் கணிதம், வேதம், தத்துவம், சமயம் போன்றவை போதிக்கப்பட்டன. மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடு போன்றவற்றிற்குக் கல்விச் சாலைகள் முக்கியத்துவம் அளித்தன. சைவ சித்தாந்த வல்லுநர்கள் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் மடத்தில் தங்கிப் பாடம் கற்பித்தனர். ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலை என்ற உயர்கல்விக் கூடம் கன்னியாகுமரியிலும், காந்தளூர் சாலையிலும் (திருவனந்தபுரம்) நிறுவப்பட்டன. மாணவர்களுக்கு இலவச உணவு வழங்க நிலதானம் அரசர்களால் வழங்கப்பட்டன. இவர் காலத்திலிருந்த நூலகங்கள் '**சரஸ்வதி பண்டாரங்கள்**' என அழைக்கப்பட்டன. சிதம்பரம், சேரன்மாதேவி போன்ற இடங்களிலும் நூலகங்கள் இருந்தன. தமிழ் வளர்ச்சிக்குப் பாண்டியர் பேராதரவு தந்தனர்.

## பொருளாதார நிலை

நெசவுத் தொழில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. நெசவாளர்கள் தங்கள் வருமானத்திற்கேற்றார்போல் தறியிறை, பஞ்சுபீலி ஆகிய வரிகளைச் செலுத்தினர். நானாதேசிகன், மணிக்கிராமம், திசையாயிரத்து ஐந்நூற்றுவர்,



XII Ethics_Lesson 5.indd 121 16-03-2020 14:56:43

நகரத்தார்சபை, அஞ்சவண்ணத்தார் ஆகிய வாணிகச்சங்கங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். சீனா, இலங்கை, நேபாளம், சுமத்ரா, அரேபியா, ஏடன் போன்ற நாடுகளுடன் பிற்காலப் பாண்டிய நாட்டு வாணிகர்கள் வாணிகம் செய்தனர். நவமணிகள், மிகவும் அரிய வகைக் கற்கள், மிளகு,இலவங்கம்,ஏலம்,கிராம்பு,மூலிகைகள், உணவு தானியங்கள் போன்றவற்றை ஏற்றுமதி செய்தனர். அஞ்சுவண்ணத்தார் என்ற இஸ்லாமிய வணிகக் குழுவினர் நாகப்பட்டினத்தில் தங்கி வாணிகம் செய்தனர். இவர்கள் மூலமாகவே அரேபிய நாட்டிலிருந்து குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. பாண்டிய நாட்டில் குதிரை வியாபாரம் மிகச் சிறப்பாக நடைபெற்றதாக மார்க்கோபோலோ, வாசப் ஆகிய அயல்நாட்டுப்பயணிகள் தமது குறிப்புகளில் பதிவுசெய்துள்ளனர்.

நிலவரியே நாட்டின் முக்கிய வருவாய் ஆகும். மொத்த வருவாயில் ஆறில் ஒரு பங்கு, வரியாகப் பெறப்பட்டது. இளஞ்சினைப் பேறு, உழுதுக்குடி, பாடிகாவல், தட்டாரப்பாட்டம், இடைவெளி, பொன்வரி, தறிக்கிறை, செக்கிறை போன்ற வரிகளும் பாண்டியர்கள் காலத்தில் வசூலிக்கப்பட்டன.

**ஐந்து வண்ணத்தார்**

ஐந்து வகை வண்ணப்பொருள்களை விற்பனை செய்த இஸ்லாமிய வணிகர், 'ஐந்து வண்ணத்தார்' என அழைக்கப்பட்டனர். இவர்கள் பாண்டிய நாட்டில் தீதாண்டதானபுரத்திலும், சோழ நாட்டிலுள்ள நாகப்பட்டினத்திலும் தங்கி வாணிபம் செய்தனர்.

நிலங்கள் முறையாக அளக்கப்பட்டன. நிலங்களை அளப்பதற்குக் குடிதாங்கி, அருள்நீதி ஊர்க்கோல் என்ற அளவுகோல்கள் பயன்படுத்தப்பட்டன. நிலவரி கடமை, காணிக்கடன் ஆகிய பெயர்களில் அழைக்கப்பட்டது. இவர்கள் காலத்தில் **புதுக்களிகைப் பணம், அன்றாட நற்புதுக்காசு, தனபாலன்குளிகை** ஆகிய நாணயங்கள் வாணிகத்தில் பயன்படுத்தப்பட்டன.

மாறவர்மன் குலசேகரப் பாண்டியன்சீனஅரசன்குப்ளாய்கானுடன் நட்புறவு கொண்டிருந்தார். அதன் காரணமாக அவர் கி.பி. (பொ.ஆ.) 1281–இல் ஒரு தூதுக் குழுவைச் சீனாவிற்கு அனுப்பினார்.

## சமயநிலை

சைவம், வைணவம் போன்ற சமயங்கள் மக்களால் பின்பற்றப்பட்டன. இக்காலத்தில்தான் மெய்கண்டதேவர், சிவஞானபோதம் என்ற நூலை எழுதினார். கி.பி.(பொ.ஆ)13 ஆம் நூற்றாண்டில் சைவ சித்தாந்த மடங்கள் ஏற்படுத்தப்பட்டன. திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் சைவ சித்தாந்த நூல்களை ஓதுவதற்காகப் பதினொரு துறவி ஓதுவார்கள் (தபஸ்விகள்) அமர்த்தப்பட்டனர் என்று இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டு கூறுகிறது. இத்துறவிகள்

- தேவசந்தானமடம்
- பட்டவீர சந்தானமடம்
- திருவாரூர் மடம்
- பிட்சாமடம்
- மதுரை மடம்
- அழகிய நாயக சந்தான மடம் (நெல்லை) ஆகியவற்றைச் சேர்ந்தவர்களாவர்.

பாண்டிய மன்னர்கள் காலத்தில் வைணவ சமயமும் சிறப்புப் பெற்றிருந்தது. இவர்களில் சுந்தரபாண்டியன் வைணவ சமயத்தை ஆதரித்தார். இவரது கோயில் திருப்பணிகளை விளக்கும் வகையில் **'கோயிலொழுகு'** என்ற நூலும் வெளியிடப்பட்டது. திருவைகுண்டம் என்ற



XII Ethics_Lesson 5.indd 122 16-03-2020 14:56:43

இடத்தில் உள்ள பெருமாள் கோயில் கோபுரத்தைச் சுந்தரபாண்டியன் கட்டினார். இவரே திருப்பதியிலுள்ள ஏழுமலையான் கோயிலுக்குப் பொன்னாலான கலசத்தைச் செய்வித்தார். சடையவர்மன் குலசேகரப் பாண்டியன், விக்கிரம பாண்டியன், முதலாம் மாறவர்மன் முதலிய மன்னர்களும் வைணவத் திருத்தலங்களுக்கு நிவந்தம் அளித்தனர். திருவிழாக்கள் நடைபெற உதவி செய்தனர். அகோபில மடம், வானமாமலை மடம் போன்ற வைணவ மடங்கள் சிறப்புப் பெற்றன. தர்மகீர்த்தி என்பவர், பிற்காலப் பாண்டியர்கள் காலத்தில் வாழ்ந்த பௌத்த சமய அறிஞராவார்.



நெல்லையப்பர் கோயில்

## கட்டடக்கலை

பிற்காலப் பாண்டியர் காலத்தில், கோயில் கட்டடக்கலையினை விரிவாக்கும் புதிய அமைப்பு முறைகள் தொடங்கின. வெளிப்புறத்தில் உயர்ந்த அளவிலான கோபுரங்கள், கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், சுற்றுப்புறப் பிரகாரங்கள், பல தூண்களைக் கொண்ட மண்டபங்கள் போன்றவை எழுப்பப்பட்டன. இக்காலக் கோயிலின் நுழைவாயிலில் உயர்ந்த கோபுரங்களை எழுப்பி, கட்டடக்கலையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தினர். சிதம்பரம், ஸ்ரீரங்கம் போன்ற இடங்களிலுள்ள கோயில்களில் துணைக் கோயில்களையும், மண்டபங்களையும் கோபுரங்களையும் கட்டினர். மதுரை மீனாட்சியம்மன் கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், தென்காசி அழகர் கோயில் போன்றவை குலசேகரப் பாண்டியர் காலத்தில் சிறப்படைந்தன. இவற்றில் அர்த்த மண்டபம், மணிமண்டபம், சன்னதி, முன்கோபுரம் போன்றவை கட்டப்பட்டன.

## சிற்பக்கலை

திருப்பரங்குன்றத்தில் காணப்படும் சோமாஸ்கந்தர், திருமால், துர்க்கை, கணபதி ஆகியோரின் சிற்பங்களும், நரசிம்மர், வராகர், நடராஜர் போன்றோரின் சிற்பங்களும் முக்கியத்துவம்பெற்றன.மதுரை,திருநெல்வேலி, தென்காசி, சிதம்பரம் போன்ற இடங்களில் உள்ள சிற்பங்களும் சிற்பக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்ந்தன. பிற்காலப் பாண்டியர்களின் இறுதி காலச் சிற்பங்கள் விஜயநகர அரசு காலச் சிற்பங்களுடன் ஒத்திருந்தன.

## வார்ப்புக்கலை

உற்சவ மூர்த்திகள் மற்றும் ஆழ்வார்கள், நாயன்மார்களின் செப்புப்படிமங்கள், சிதம்பரம் நடராசரின் சிலை போன்றவை வார்ப்புக்கலை வளர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

## நடனக் கலை



சதுரத்தாண்டவத் திருக்கோலம்

நடனக்கலைஞர்கள் அரண்மனையிலும், தேவரடியார் கோயில்களிலும் நடனம் ஆடினர். நடனக்கலையின் சிறப்பு மற்றும் அதன் வளர்ச்சியினைக் கோயில்களில் காணப்படும் நடனச்சிற்பங்கள் மூலம் அறியலாம். சிதம்பரம் மற்றும் திருப்பரங்குன்றத்தில் உள்ள நடராஜரின் **சதுரத்தாண்டவத் திருக்கோலம்** நடனக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

## இசைக்கலை

இசைக்கலை இவர்கள் காலத்தில் முக்கியத்துவம் பெற்றது. வீரமத்தளம், மத்தளம், திமிலை, சேமக்கலம், திருச்சின்னம் போன்ற இசைக்கருவிகள் யாவும் கோயிற்சிற்பங்களில் காணப்படுவதின் மூலம் பாண்டியர் இசையைப் போற்றி வளர்த்தனர் என்பதை அறிய முடிகிறது.

## நாடகக்கலை

பாண்டிய மன்னர்கள் நாடகக்கலையைப் போற்றி வளர்த்தனர். கோயில்களில் நாடகங்கள் நிகழ்த்தப்பட்டன. **அழகிய பாண்டியன் கூடம்** என்று நாடக அரங்கம் அழைக்கப்பட்டது. நாடகத்தில் நடிப்போருக்குக் **'கூத்துக்காணி'** வழங்கப்பட்டன. ஆடல் மகளிருக்கு **'தலைக்கோல்'** என்ற பட்டம் வழங்கப்பட்டது. 'சாந்திக்கூத்து' 'வினோதக்கூத்து' என இரு வகைக் கூத்துகள் இருந்தன என்று ஆத்தூர் கோயில் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

## இந்தியப்பண்பாட்டிற்குப் பிற்காலப் பாண்டியர்களின் கொடை

- கோபுரக் கட்டடக்கலையில் புதிய மாற்றங்களைக் கொண்டுவந்தனர்.
- கல்விச் சாலையில் இலவச உணவுடன் மாணவர்களுக்கு அரச நிருவாகப் பயிற்சி அளித்தனர்.
- சரஸ்வதி பண்டாரம் போன்ற நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டதன் மூலம் வேதங்கள், புராணங்கள் பயிற்றுவிக்கப்பட்டு, இந்தியப்பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்தன.
- பாண்டியர்கள் காலத்தில் இசை, நடனம், ஓவியம், சிற்பம் போன்ற நுண்கலைகள் வளர்ச்சி பெற்றன.

## 5.10 டெல்லி சுல்தானியர்காலப் பண்பாடு

இந்திய வரலாற்றில் டெல்லி சுல்தானியர்களின் தோற்றமும், வளர்ச்சியும் புதிய பரிமாணத்தைக் கொடுத்தது. இம்மாற்றம் இந்தியஆட்சிமுறையில்கலாச்சாரமாற்றத்தைக் கொண்டுவந்தது. கி.பி.(பொ.ஆ)1206 முதல் கி.பி1526 வரை ஐந்து மரபினர் ஆட்சி செய்தனர். இவர்களுடைய ஆட்சியில் சமயம் சார்ந்த ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது. சமயமும் அரசியலும் இவ்வாட்சி என்ற நாணயத்தின் இருபக்கங்களாகும். சுல்தான் என்பது, முஸ்லீம் ஆட்சியாளர்கள் சூட்டிக் கொண்ட பட்டப்பெயராகும். இவர்கள் பெயரளவுக்குக் கலிபாவிற்குக் கட்டுப்பட்ட அரசர்களாகத் திகழ்ந்தனர்.

## சான்றுகள்

டெல்லி சுல்தானியர்கள் காலத்து இலக்கியங்கள் அக்கால வரலாற்றை அறிய ஆதாரமாக உள்ளன. அல்பெருனி எழுதிய தாரிக்-உல்.ஹிந்து,ஹாசன்நிசாமிஎழுதியதாஜ் – உல்-மாசீர், மின்ஹஜ் – சிராஜ் – உஸ் எழுதிய தபகத் –இ-நாசீரி, அமீர்குஸ்ரு எழுதிய 'துக்ளக் நாமா' போன்ற நூல்கள் அக்கால மன்னர்கள், வரிசை மக்கள் வாழ்க்கை நிலை, பண்பாடு போன்றவை பற்றி அறிய உதவுகின்றன.

இடைக்காலஇந்தியாவிற்குவருகைபுரிந்த அயலவர்களின் பயணக்குறிப்புகள் அரசியல், முன்னேற்றம், சமூக – பண்பாட்டு வரலாறு பற்றிக் குறிப்பிடுகின்றன. இபின் பதூதாவின் பயணக் குறிப்புகள், டெல்லி மற்றும் மதுரையில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை நிலையினை விளக்குகிறது. அப்துர் ரசாக் தன்னுடைய பயணக் குறிப்பில் தென்னிந்திய மக்களின் வாழ்க்கை, அவர்களின் நிலை, பண்பாட்டு நிலை ஆகியவற்றைப் பற்றிக் குறிப்பிடுகிறார். மேலும் மார்க்கோபோலோ, நிக்கோலோ கோண்டி, பார்போசா, பயஸ் ஆகியோரின் குறிப்புகளும் குறிப்பிடத்தக்கவையாகும். "தமிழ்க் கூடல் நகர்" என்று மதுரையைச் சிவகாசி செப்பேடு புகழ்கிறது.

## ஆட்சிமுறை

### மைய அரசு

மைய அரசு அதிகாரக் குவியல் முறையில் அமைக்கப்பட்டதாகும். மைய



XII Ethics_Lesson 5.indd 124 16-03-2020 14:56:43

அரசின் தலைவர் சுல்தான் ஆவார். இவரிடம் சட்டம், நீதித்துறை, ராணுவத் தலைமை போன்ற அதிகாரங்கள் இருந்தன.

## ஆட்சிப் பிரிவுகள்

**இக்தா** என்பது ஆட்சியில் முக்கிய பிரிவாக இருந்தது. இக்தா ஷிக்குகளாக(மாவட்டம்) பிரிக்கப்பட்டன. ஷிக்குகளின் தலைவர் ஷிக்தார் ஆவார். ஷிக்குகளுக்கு அடுத்த பிரிவு பர்கானா(வட்டம்) ஆகும். பர்கானாவிற்கு அடுத்த நிலையில் கிராமங்கள் இருந்தன. இராணுவத்துறை அதிகாரி தன் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் சட்டம், ஒழுங்கை நிலை நிறுத்துதல் இவரது கடமையாகும்.

## அமைச்சர்கள்

சுல்தான் தன் கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும், அவருக்குத் தக்க ஆலோசனைகள் வழங்கவும் அமைச்சர்கள் துணைபுரிந்தனர்.

1. நயிப் –சுல்தான் – சுல்தானுக்கு அடுத்தவர். ஆனால், எல்லா உரிமைகளையும் பெற்றவர்
2. வாசீர் – நிதி அமைச்சர்
3. அரிஸ் – இ. மாமலிக் – தலைமைத் தளபதி
4. திவான் இன்ஷா – செய்தி மற்றும் ஆவணக் காப்பகம்
5. திவானி ரிசாலத் – சமயத்துறை
6. தலைமை காஸி – நீதித் துறைத் தலைவர்
7. பாரித்-ஐ-முமலிக் – உளவுத்துறை

இவர்களின்றி வேறுபல அதிகாரிகளும் சுல்தானுக்கு உதவியாக இருந்தனர்.

## சமுதாயம்

முகமது கோரியோடு வந்த துருக்கியர் இந்தியாவில் குடியேறினர். அவர்களைத் தொடர்ந்து குத்புதீன் ஐபெக்கின் படையெடுப்பின்போது வந்த துருக்கியர் குர்தியார், சொராசனர்கள், கில்ஜிகள் போன்றோர் இந்தியாவில் தங்கினர். மங்கோலிய படையெடுப்பின்போது, பலர் இந்தியாவில் தங்கினர். இஸ்லாமிய மதமாற்றமடைந்த இவர்கள் **புதிய முஸ்லீம்கள்** என்றும் பார்சியர் என்றும் அழைக்கப்பட்டனர். துருக்கியர், அரேபியர்கள், அபிசீனியர்கள், எகிப்தியர்கள் ஆகியோர் ஆட்சி வகுப்பினராக இருந்தனர். கி. பி. 13–ஆம் நூற்றாண்டில் மூன்று வகையான ஆட்சி வகுப்பைச் சேர்ந்த பிரபுக்கள் இருந்தனர். அவர்கள் 1) கான்கள் 2) மாலிக்குகள் 3)அமீர்கள் போன்றோர்களாவர்.

## பெண்கள் நிலை

அரச குடும்பத்துப் பெண்களும், உயர் வகுப்பினப் பெண்டிரும் கல்விகற்று, சில அரச சலுகைகளுடன் செல்வாக்கு பெற்றிருந்தனர். இஸ்லாமியப் பெண்கள் **பர்தா முறையைப்** பின்பற்றினர். சமுதாயத்தில் கீழ்நிலை மக்கள் கிராமங்களில் கணவருக்குக் கட்டுப்பட்டும் விவசாயத் தொழில்களுக்கு உதவியாகவும் இருந்தனர். பல பெண்கள் குடிசைத் தொழில்களில் சிறப்புற்றிருந்தனர்.

## பொருளாதாரம்

சுல்தான்களின் ஆட்சிக் காலத்தில் நான்கு பிரிவுகளாக நிலம் பிரிக்கப்பட்டது. அவை:

இக்தா (Igta) – இந்நிலங்கள் அதிகாரிகளுக்கு ஊதியத்திற்குப் பதிலாக வழங்கப்பட்டன

காலிசா(Kalisa) – அரச நிலங்கள் (மைய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நிலங்கள்)

மரபு வழி ஜமீன்தார் நிலங்கள் – சுல்தானுக்குக் கட்டுப்பட்ட நிலங்கள்.

இனாம் – சமய அறக்கட்டளைகளுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் போன்றவை

## அலாவுதீன் கில்ஜியின் அங்காடி சீர்திருத்தம்

அலாவுதின் கில்ஜி அங்காடிச் சீர்திருத்த முறையை அறிமுகப்படுத்தினார். இதன்படி பொருள்கள் நியாயமான முறையில் விற்கப்பட்டன. அங்காடி விற்பனையாளர்கள், எடை குறைவாக விற்றாலோ, அதிக விலைக்கு



XII Ethics_Lesson 5.indd 125 16-03-2020 14:56:43

விற்றாலோ கடுமையாக தண்டிக்கப்பட்டனர். அனைத்து அங்காடிகளிலும் ஒரே விலையில் கலப்படமற்ற பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன. **சகானா–இ–மண்டி** அங்காடிகளை நிருவகித்தார்.

அலாவுதின் கில்ஜி நில மேலாண்மை, நில அளவை மற்றும் நிலவரி வசூல் முறையை ஒழுங்குபடுத்தினார். முகமதுபின்துக்ளக் நிலவரியை அதிகமாக உயர்த்தினார். பெரோஸ் துக்ளக் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி, விவசாய வளர்ச்சிக்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

## தொழில்கள்

வேளாண்மை முக்கிய தொழிலாக கருதப்பட்டாலும் பிற தொழில்களும் வளர்ச்சியடைந்தன. விலையுயர்ந்த கற்கள் உடைய ஆபரணங்கள் செய்தல், நெசவு, சாயம் தோய்த்தல், காலிக்கோ அச்சிடுதல் போன்ற துணி சார்ந்த தொழில்கள், செம்பு, பித்தளை, இரும்பு போன்ற உலோகம் சம்பந்தப்பட்ட தொழில்கள், தோல்தொழில்கள், கப்பல் கட்டும் தொழில் போன்ற தொழில்களும் வளர்ச்சியடைந்தன.

## உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகம்

உள்நாட்டு வர்த்தகம் சந்தைகள் மூலம் நடைபெற்றது. அரிசி, சர்க்கரை, வெண்ணெய் போன்ற பொருட்களைச் சோழ மண்டலத்துக்கு அனுப்பினர். ஆக்ரா முக்கிய வர்த்தக மையமாக விளங்கியது. வெளிநாட்டு வாணிகம் வடமேற்குக் கணவாய்கள் மூலம் நடைபெற்றது. லாகூரும், முல்தானும் வாணிக மையங்களாக திகழ்ந்தன. கடல்வழி வாணிகத்தின் மூலம் ஆக்ராவிலிருந்த பல பொருட்கள் உலகின் பல பகுதிகளுக்கு அனுப்பப்பட்டன. காஷ்மீரத்திலிருந்து, குங்குமப்பூ, சால்வை, ஆக்ராவிலிருந்து நீலச்சாயம் போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன. அலாவுதீன் கில்ஜி விவசாய, வர்த்தகக்கொள்கை மூலம் விவசாயத்தையும், வர்த்தகத்தையும் நவீனமாக்கிச் **சந்தைப் பொருளாதாரத்தை** உருவாக்கினார்.

## சமயம்

டெல்லி சுல்தானியர்கள் காலத்தில் இந்து சமுதாயத்தின் மீது, இஸ்லாமிய சமயத்தின் தாக்கம் இருந்தது. இஸ்லாமிய சமயச் சட்டப்படி இந்துக்கள் மாற்று சமயத்தவர்கள், இந்துக்கள் மீது **ஜெசியா** என்ற வரி விதிக்கப்பட்டது. (சமயவரி) இதனால் இந்துக்கள் தனிமைப் படுத்தப்பட்டனர். பெரோஸ்துக்ளக்–சிக்கந்தர்லோடி போன்றோர் மதமாற்றத்தை வெகுவாக ஊக்குவித்தனர்.

## இலக்கியம்

சுல்தான்களின் ஆட்சிக்காலத்தில் அரசாங்க உதவியுடன் கவிதை, உரைநடை, இலக்கியம் போன்றவை வளர்ச்சி பெற்றன. குறிப்பாக வரலாறு சார்ந்த இலக்கியத்திற்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. டெல்லி சுல்தான்கள் தத்துவம், நாடகம், மருத்துவம், சோதிடம் பற்றிய நூல்கள் எழுதப்படுவதை ஆதரித்தனர். இந்தி வங்காளம், மராத்தி, பஞ்சாபி, தமிழ், தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளில் பிராந்திய இலக்கியங்களும் இயற்றப்பட்டன.

## அமிர்குஸ்ரு

அபுல் ஹாசன் யாமினித் குஸ்ரு என்ற இயற்பெயர் கொண்ட இவர் மிகச்சிறந்த கவிஞராகவும் இசை வல்லுநராகவும் திகழ்ந்தார். இவர் பாரசீக மொழிக் கவிஞராகத் திகழ்ந்தார். அலாவுதீன் கில்ஜி பற்றி எழுதிய **தாரிக்–இ–அலாய்** என்னும் நூல் மிகச் சிறந்த நூலாகும். இந்நூல் அலாவுதீனைப் பற்றிய செய்திகள், அங்காடிச் சீர்திருத்தங்கள், நிருவாகத் திறன், மக்களின் வாழ்க்கைநிலை பற்றிக் குறிப்பிடுகின்றது. இவர் எழுதிய பாரசீக மொழி கவிதை 'கஜல்' என்ற புதிய இசை தொடங்குவதற்கு வழிகோலியது.

## இபின் பதூதா

அபு அப்துல்லா முகமது இபின்பதூதா என்ற இயற்பெயர்கொண்ட இவர், முகமது பின் துக்ளக் காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்தார். இவருடைய பயணக் குறிப்புகள் '**ரெகிலா**' என்று அழைக்கப்படுகின்றன. இக்குறிப்புகள் முகமது



XII Ethics_Lesson 5.indd 126 16-03-2020 14:56:43

பின் துக்ளக் கால அரசியல் சமூக, பொருளாதார மற்றும் சமயநிலை பற்றிக் குறிப்பிடுகின்றன. தினமும் சிலர் கைகால்களில் விலங்கிடப்பட்டு அவைக்குக் கொண்டு வரப்படுதல், துன்புறுத்தப்படுதல் போன்றவை நடைபெற்றதாக இவர் குறிப்பிடுகிறார். இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு பழக்கங்கள், புது வழக்காறுகள் பற்றியும் குறிப்பிடுகிறார். சதி என்னும் உடன் கட்டை ஏறும் பழக்கம் இந்துக்களிடையே காணப்பட்டதை விளக்குகிறார். கடிதங்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு கொண்டு சென்ற ஓட்டக்காரர்களைப் பற்றியும் குறிப்பிடுகிறார்.

## கலை கட்டடக்கலை

இந்திய இஸ்லாமியக் கலையின் ஒருங்கிணைப்பே டெல்லிசுல்தானிய கலை கட்டடக்கலை என்று பெர்கூசன் குறிப்பிடுகின்றார். இந்தியக் கலையில் இஸ்லாமிய கலை கலந்தமைக்குப் பல காரணங்கள் குறிப்பிடப்படுகின்றன. அவையாவன:

- துருக்கியர்கள் இந்தியக் கைவினைஞர்களையும் தச்சர்களையும் பயன்படுத்தினர்
- இந்துக்கள் மற்றும் சமணர்களின் கோயில்களை அழித்து அவற்றின் கட்டிடங்களின் மீது பல கட்டடங்களைக் கட்டினர்.
- சில இந்துக்கோயில்களை மசூதிகளாக மாற்றினர். எனவே, சுல்தான்கள் கலைபாணியில் இந்தியக் கலைபாணியைக் காணமுடிகிறது.

## சுல்தானியர் கால கட்டடங்களின் சிறப்பம்சங்கள்

- தூண்கள், உயர்மாடிகள், மலர் வேலைப்பாடுகள் ஏராளமாக இருந்தன.
- முகடுகள் உயரமாகவும், சமமான அளவிலும் அமைக்கப்பட்டுள்ளன.
- முன் சுவர்கள் தாழ்வாகவும் பின்னால் உள்ள கட்டடங்களுக்குப் பொருத்தமாகவும் அமைந்திருக்கின்றன.
- பிரம்மாண்டமான வளைவுகள் (Arche) இவர்கள் காலத்தில் கலை நுட்பத்துடன் எழுப்பப்பட்டன.

## குதுப்மினார்



குதுப்மினார்

பள்ளிவாயில்களில் தொழுகைக்குக் கூவி அழைப்பவர்களுக்கு **மூயாசின்** என்று பெயர். இவர்கள் பள்ளிவாயில் அருகில் இருந்த உயர்ந்த கோபுரங்களிலிருந்து கூவி அழைத்தனர். இந்த உயர்ந்த கோபுரங்களை **மினார்** என்பர். இக்கட்டடத்திற்குக் கலையழகு கூட்ட வாயிலில் இருமருங்கிலும் இருகோபுரங்கள் அமைத்தனர். டெல்லியில் உள்ள குதுப்மினார் **குத்புதீன் ஐபக்கால்** கட்டத் தொடங்கப்பட்டு **இல்துமிஷ்** காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது. இதன் உயரம் 232 அடியாகும். இது சிவந்த மணற்கற்களால் கட்டப்பட்டது. இதில் குரானிலுள்ள இறைவசனங்கள் செதுக்கப்பட்டுள்ளன. யுனஸ்கோவால் கி.பி. (பொ.ஆ.) 1993 –இல் இது உலகப் பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டது.

## அலாய் தர்வாசா

அலாவுதீன் கில்ஜி காலத்தில் கட்டப்பட்டவையாகும். இது செல்சக் – துருக்கியர் கலைபாணியில் கட்டப்பட்டவை யாகும். மிக உயரமான மேடையில் இருந்து செம்மணற் கற்களாலும், வெள்ளைச் சலவைக் கற்களாலும் உருவாக்கப்பட்ட இக்கட்டடம்

அருகில் காணும்போது வண்ணங்களின் கோப்புகளாகக் காணப்படுகின்றது.



அலாய் தர்வாசா

முகமது பின் துக்ளக்கிற்குப் பின் வந்த பிரோஸ் துக்ளக் கட்டடப்பிரியர், கட்டடக்கலைவேந்தர். இவர் காலத்தில் 1200 மலர்வனங்களை டில்லியைச் சுற்றி அமைத்தார். இவரை பூங்கா பிரியர், நீர்ப்பாசனத்தின் தந்தை என்றழைப்பர்.

பிரோஷா துக்ளக் **பிரோஷாபாத்** என்னும் நகரை அமைத்தார். இந்நகருக்குள் பிரோஸ் ஷா கோட்லா என்னும் அரண்மனைக் கோட்டை உள்ளது.

### இந்தியப்பண்பாட்டிற்கு டெல்லி சுல்தானியர்கள் பங்களிப்பு

- அமிர்குஸ்ரு கவாலி என்ற இசை பாணியில் சித்தார், காயல் போன்ற இசைக்கருவிகளைக் கண்டறிந்தார் இந்தோ – அரேபிய சங்கீதக் கலைகள் ஒன்றுபட்டு **இந்துஸ்தானி** என்ற சங்கீதமாகப் புது வடிவம் பெற்றது.
- டெல்லி சுல்தான் காலத்தில் கோரா, சானம் போன்ற புதிய ராகங்களையும், இந்து மற்றும் ஈரானிய முறைகளை ஒன்றிணைத்து **குவாலிஸ்** என்ற புதிய வகை மெல்லிசைகளும் உருவாக்கப்பட்டன.
- பிரோஸ் துக்ளக் ஆட்சிக் காலத்தில் **ராகதர்பன்** என்ற இந்திய இசை நூல் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டது.
- இந்தியாவில் திராவிட கலைபாணி வளர்ச்சி குறைந்து இந்தோ – அராபிக் கலை வளர்ச்சி பெற்றது.
- அலாவுத்தின் கில்ஜியின் காலத்தில் **சக்ரா**(Chahra) என்ற பட்டியல் முறையும், **தாக்** என்ற குதிரைகளுக்குச் சூடுபோடும் முறை (அரச விலங்குகள் என்பதற்கு அடையாளமாக) அங்காடி சீர்திருத்தமும், தற்கால உணவுத் துறை அதிகாரி பணியிடங்களுக்கு மிகச் சிறந்த கொடையாகும்.
- வேளாண்மை முறையை மேம்படுத்த, முகம்மது பின் துக்ளக் ஏற்படுத்திய துறை திவான்-இ-கோஹி ஆகும்.
- டெல்லியில் உள்ள பிரோஷ்ஷா கோட்லா மைதானம், ஆக்ரா நகரம் மற்றும் அழகிய பூங்காக்கள் இவர்கள் காலத்திற்கு எடுத்துக்காட்டுகளாகும்.
- பிரோஷ் துக்ளக் ஆட்சிகாலத்தில் வேலைவாய்ப்பு அலுவலகம் உருவாக்கப்பட்டது.
- பிரோஷ் துக்ளக் காலத்தில் அனாதை மற்றும் கைம்பெண்களுக்கு நல வாழ்வுத் துறை (திவானி கெய்ரத்) உருவாக்கப்பட்டது.
- டெல்லி சுல்தானியர் ஆட்சியில் பெண் அரசாள்வது (ரசியா சுல்தானா) இந்து, இஸ்லாமிய ஆட்சி மரபில் மாற்றத்தை உருவாக்கின.
- டெல்லி சுல்தானியர்கள் வெளியிட்ட நாணயங்கள் பிற்காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தன.

## 5.11 விஜயநகரகால பண்பாடு

**ஹரிஹரர், புக்கர்** என்ற இரு சகோதரர்கள் **மாதவ வித்யாரண்யர்** என்பவரின் உதவிகொண்டு 1336இல் துங்கபத்திரா நதிக்கரையில் விஜயநகரப் பேரரசை உருவாக்கினர். இப்பேரரசு சுமார் நான்கு நூற்றாண்டுக் காலம் தென்னக வரலாற்றில் பெரும் சாதனைகளைப் புரிந்தது



XII Ethics_Lesson 5.indd 128 16-03-2020 14:56:43

எனலாம். இப்பேரரசை சங்கம, சாளுவ, துளுவ, ஆரவீடு வம்சத்தினர் போற்றி வளர்த்தனர். இந்துசமயம், கோவில்கள், கலாச்சாரங்களைப் பாதுகாப்பதற்கென இப்பேரரசு ஏற்படுத்தப்பட்டது என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

**விஜயநகர விளக்கம்**

பெரிஸ்டாவின் கூற்றுப்படி – மூன்றாம்வல்லாளதேவன் தம் நாட்டின் வடக்கு எல்லையை இஸ்லாமிய படையெடுப்புகளின்றிக் காப்பதற்குத் துங்கபத்திரை நதியின் தென்கரையில் தம்முடைய மகன் வீரவிஜயவல்லாளின் பெயரில் விஜயநகரத்தை அமைத்தார் எனவும் இந்நகரமே பிற்காலத்தில் **விருபாட்சபுரம், ஹோசப்பட்டணம், வித்திய நகரம், விஜய நகரம்** என அழைக்கப்படுகிறது.

## சான்றுகள்

விஜய நகர கால இலக்கியச் சான்றுகள் வடமொழி, தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய மொழிகளில் காணப்படுகின்றன. **கிருஷ்ணதேவராயரின் ஆமுக்தமால்யதம், கங்காதேவி எழுதிய மதுராவிஜயம், அல்லசானி பெத்தண்ணாவின் மனுசரிதம்** போன்றவை விஜயநகரப் பேரரசைப் பற்றி அறிவதற்கான முக்கிய சான்றுகளாகும்.

விஜயநகர ஆட்சிகாலத்தைப் பற்றி அறிய, ஹம்பியில் உள்ள விருபாக்ஷர் கோயில், பெனுகொண்டா, சந்திரகிரி, வேலூர், செஞ்சி ஆகிய இடங்களில் காணப்படும் கோட்டைகளும், திருவண்ணாமலை, சிதம்பரம், மதுரை, திருப்பதி போன்ற இடங்களில் காணப்படும் கோபுரங்களும் முக்கிய தொல்பொருள் சான்றுகளாகத் திகழ்கின்றன.

விஜயநகரப் பேரரசுக்குப் பல்வேறு அயல்நாட்டுப் பயணிகள் வருகை புரிந்தனர். மெரோக்கோ நாட்டைச் சார்ந்த **இபின்பதூதா**, வெனிஷியப் பயணி **நிக்கோலோ கோண்டி**, பாரசீகப் பயணி **அப்துர்ரசாக்** போன்ற பயணிகள் விஜயநகர காலச் சமூக, பொருளாதார நிலையைப் பற்றி தங்களது பயணக்குறிப்புகளில் விவரித்துள்ளனர்.

## ஆட்சிமுறை

விஜயநகரப் பேரரசின் கீழ் ஆட்சித்துறை நன்கு சீரமைக்கப்பட்டிருந்தது. வாரிசுரிமை நிருவாகம், நீதி, சட்டம் ஆகியவற்றில் அரசர் முழு அதிகாரம் பெற்று விளங்கினார். பரம்பரை வழக்கத்திலிருந்தது. சில சமயம் அரியணையைக் கைப்பற்றிக் கொள்ளும் வழக்கமும் இருந்தது, பேரரசு பல மண்டலங்களாகவும், மண்டலங்கள் பல நாடுகளாகவும், நாடு ஸ்தலங்களாகவும், ஸ்தலம் பல கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு மண்டலமும் மண்டலேஸ்வரர் என்ற ஆளுநரின் கீழ் செயல்பட்டது.

## சமூக வாழ்க்கை

சமூகத்தில் பிராமணர், சத்ரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு பிரிவுகள் இருந்ததாக அல்லசானி பெத்தண்ணா தனது மனுசரிதத்தில் குறிப்பிட்டுள்ளார். பட்டு, பருத்தி ஆடைகளை மக்கள் அணிந்தனர். நடனம், இசை, மல்யுத்தம், சூதாட்டம், சேவல் சண்டை போன்றவை இவர்களது பொழுது போக்குகளாகும்.

## சமயம்

சங்கம மரபினர் சைவர்களாகத் திகழ்ந்தனர். விருப்பாக்ஷர் அவர்களின் குலதெய்வம் மற்ற மரபைச் சேர்த்தவர்கள் வைணவர்கள். எல்லா அரசர்களும் பிற சமயங்கள் மீது சகிப்புத்தன்மையுடன் நடந்து கொண்டனர். மக்கள் அனைவரும் சமயச் சுதந்திரம் பெற்று திகழ்ந்தனர் என போர்ச்சுகீசியப் பயணி பார்போசா குறிப்பிடுகிறார்.

## மகளிர் நிலை

பெண்கள் பழைமையில் அதிகநம்பிக்கை கொண்டிருந்தனர். அரசகுலப்பெண்கள்



XII Ethics_Lesson 5.indd 129 16-03-2020 14:56:44

கல்வியிற் சிறந்து விளங்கினர். குமார கம்பணரின் மனைவி கங்காதேவி, மற்றும் ஹன்னம்மா, திருமலம்மா ஆகியோர் அக்காலத்தில் புகழ் வாய்ந்த பெண்பாற் புலவர்கள் ஆவர். ஆலயங்களுக்குச் சேவை செய்ய மகளிர் இருந்தனர். தேவதாசிமுறை வழக்கத்திலிருந்ததாகவும், அரசகுடும்பங்களில் பலதாரமணம் வழக்கத்திலிருந்ததாகவும் சதிவழக்கம் பெருமையாக கருதப்பட்டதாகவும் போர்ச்சுகீசியப் பயணி நூனிஸ் விளக்கமாக கூறியுள்ளார்.

### விஜய நகர அரசு சின்னம்

விஜய நகர அரசசின்னம் வராகன் ஆகும். வராகன் என்பது திருமாலின் வராக அவதாரத்தை குறிப்பிடும் வகையில் இவர்களால் பின்பற்றிப் பட்ட அரச சின்னமாகும். இம்மன்னர்களில் பெரும்பாலனோர் வைணவர்களாவர்.

## பொருளாதார நிலை

### விஜய நகர நாணயங்கள்

விஜய நகர அரசர்கள் **வராகன்** என்ற தங்கநாணயத்தை அதிகளவில் வெளியிட்டனர். தங்கத்தாலான இந்நாணயங்களில் இந்து தெய்வஉருவமும், **காளை, யானை, கண்டபெருண்டா** என்ற கற்பனை பறவையும் இடம்பெற்றிருந்தன. மேலும் **பக்கோடா** என்ற நாணயமும் புழக்கத்திலிருந்தது.



வேளாண்மையே நாட்டின் முக்கிய தொழிலாகக் கருதப்பட்டன. நீர்ப்பாசனத்தைப் பெருக்க எரிகள், கால்வாய்கள், துங்கபத்திரா ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் அமைக்கப்பட்டன. பல்வேறு தொழில்கள் சிறந்து விளங்கின. நில வருவாய்த் துறை **அதவானே** என்று அழைக்கப்பட்டது. கர்நூல், அனந்தப்பூர், மாவட்டங்களில் வைரச் சுரங்கங்கள் இருந்தன. விஜயநகரம் புகழ்மிக்க ஒரு வர்த்தக மையமாகத் திகழ்ந்தது. தங்க நாணயம் **வராகன்** என்றழைக்கப்பட்டது. இந்நாணயங்களில் கன்னட, தேவநாகரி எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தன. வைணவச் சமயச்சின்னங்களும் பொறிக்கப்பட்டிருந்தன.

மலபார் கடற்கரையில் பல துறைமுகங்கள் இருந்தன. அவற்றில் கண்ணனூர் மிக முக்கியமான துறைமுகமாகும். இத்துறைமுகத்தில் அரேபியா, பாரசீகம், தென்ஆப்பிரிக்கா போர்ச்சுக்கல் நாடுகளுடன் வாணிகத் தொடர்பு இருந்தது. பருத்தி, பட்டு, நறுமணப் பொருட்கள், அரிசி, வெடியுப்பு, சர்க்கரை போன்றவை முக்கிய ஏற்றுமதி பொருள்களாகும். குதிரைகள், முத்து, செம்பு, பவழம், பாதரசம், சீனத்துப்பட்டு, வெல்வெட் துணிகள் முதலியவை இறக்குமதி செய்யப்பட்டன. கப்பல் கட்டும் தொழில் வளர்ச்சியடைந்திருந்தது.

## நீதி முறை

தண்டனைகள் தருமசாஸ்திரங்களின் அடிப்படையில் அமைந்திருந்தன. கிராமங்களில் கிராமத்து மகாஜனங்கள் தலைமை வகித்த நீதிமன்றங்களும், கோயில்களில் ஸ்தானிகர்கள் வழங்கிய கோயில்நீதிமன்றங்களும், வியாபார நீதிமன்றங்களும் வழக்கத்திலிருந்தன. சிவில் வழக்குகள், ஆவணம், சாட்சி, வாக்குமூலத்தின் அடிப்படையில் தீர்ப்பு அளிக்கப்பட்டன. அரச துரோகத்திற்கு மிகக் கொடிய தண்டனையாக நஞ்சு கொடுப்பதும், கண்களைக் குருடாக்குவதும் இருந்தது. கோயில் சொத்துகளைத் திருடியவருக்கு உடல்



XII Ethics_Lesson 5.indd 130 16-03-2020 14:56:44

உறுப்புகள் குறைத்தல் போன்ற கடுமையான தண்டனைகள்வழங்கப்பட்டன.

## நாயன்கார முறை

விஜயநகர ஆட்சிக்காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட நாயன்கார முறை தென்னாட்டில் நிலவிய கிராம சுயாட்சி முறையின் அடிப்படையைத் தகர்ந்து எறிந்தன. சோழ மன்னர்கள் காலத்தில் நிலவிய **கணபோகம், ஏகபோகம்** என்ற இருவகையான நிலவுடைமை உரிமைகள் இருந்தன. கணபோக நிலங்கள் அனைத்தும் **படைப்பற்று** நிலங்களாக மாற்றப்பட்டு நாயக்கர்களுக்கு வழங்கப்பட்டன. நில மானிய முறையில் படைப்பற்றாக நிலங்களைப் பெற்றுக் கொண்ட நாயக்கர்கள் வரிவசூல் செய்வதிலும் படை வீரர்களைத் திரட்டுவதிலும் ஆர்வம் கொண்டனர். இவர்கள் மன்னருக்குத் தேவையான படைகளைக் கொடுத்தும் உதவினர்.

## ஆயக்காரர் முறை

கி.பி. 15–ஆம் நூற்றாண்டின் இறுதியில் தென்னிந்தியாவில் தோற்றுவிக்கப்பட்ட முறை **ஆயக்காரர்** முறை (அ) கிராம அதிகாரிகள் முறையாகும். இவை விஜய நகர அரசர்களால் அமைக்கப்பட்டது. கிராம அரசியல் அமைப்புகளான சபைகள், ஊர், நாடு முதலியவைகள் மாற்றப்பட்டு இம்முறைப்படி ஆயக்காரர் என்ற அதிகாரிகளும், கிராமத் தொழிலாளர்கள் கொண்ட அமைப்பாக மாறியது. விஜயநகர ஆட்சிக்காலத்தில் ஏரி வாரியம், தோட்டவாரியம், பஞ்சவார வாரியம் போன்றவற்றைக் கர்ணம் என்பவர் செய்ய வேண்டியிருந்தது. இவரிடம் கிராமத்தில் உள்ள நன்செய், புன்செய் நிலங்கள், தோப்புகள், சுடுகாடு, மேய்ச்சல் நிலங்கள், நிலவரி போன்ற தகவல்கள் அடங்கிய அட்டவணை (அ) **அடங்கல்** என்றும் புத்தகமும் **சிட்டா** என்ற குறிப்பேடும் இருந்தது.

ஆயக்காரர்களோடு சேர்ந்து கிராம மக்களுக்குச் சேவை புரிவதற்கு புரோகிதர், பொற்கொல்லர், தச்சர், குயவர் போன்ற தொழிலாளர்களும் நியமனம் பெற்றனர். இவர்கள் செய்த தொழிலுக்கு **இறையிலி நிலங்கள்** வழங்கப்பட்டன. பரம்பரை பரம்பரையாக இந்நிலங்கள் அனுபவித்துக் கொண்டு கிராம மக்களுக்குச் சேவைகள் புரிந்தனர். விவசாயிகள் அறுவடைக் காலங்களில் மகசூலின் சிறு பகுதியை இவர்களுக்கு அளிப்பதும் உண்டு. இம்முறை, கிராம அமைப்புகளாகிய கிராம சபைகள் மறைவதற்குக் காரணங்களாக இருந்தன.

## கல்விக் கூடங்கள்

கிராமங்களில் திண்ணைப் பள்ளிகள் மூலம் அடிப்படைக் கல்வி கற்பிக்கப்பட்டது. புத்தகங்களும், காகிதங்களும் பயன்பாட்டில் இல்லாத காலத்தில் மணலின் மீது எழுதுவதும் வாய்ப்பாட்டினை மனப்பாடம் செய்வதும் வழக்கத்திலிருந்தன. ஹோனவர் என்னுமிடத்தில் ஆண் பிள்ளைகளுக்கு பள்ளிகளும் பெண் பிள்ளைகளுக்கு பள்ளிகள் செயல்பட்டதாக இபின்பதூதா குறிப்பிடுகிறார்.

வைணவக் கோயில்களில் வேதங்களையும், பிரபந்தங்களையும், வேதாந்த சாத்திரங்களையும் பாராயணம் செய்வதற்குக் கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் நிலங்கள் தானமாக அளிக்கப்பட்டன. வானநூல், சோதிடம், மருத்துவம் முதலிய கலைகளையும் விஜயநகர அரசர்கள் ஆதரித்தனர். வேதங்கள், சாத்திரங்கள், புராணங்கள் ஆறுவகையான தர்சனங்கள் முதலியவற்றில் புலமைபெற்ற ஆதித்தராயன் என்ற அந்தணருக்குத் தேவராயபுரம்(விருஞ்சிபுரம்) என்ற கிராமத்தை மல்லிகார்ச்சுனராயர் பட்ட விருத்தியாக அளித்துள்ளார்.

## இலக்கியங்கள்

விஜயநகர மன்னர்களின் ஆட்சிக்காலத்தின்போது, வடமொழியிலும் மற்ற திராவிட மொழிகளிலும் இலக்கியம் வளர்ச்சி பெற்றது. விஜய நகர அரசர்கள் சமய வேற்றுமை பாராமல் இலக்கியத்தில் புலமை பெற்ற சான்றோர்களை ஆதரித்தார்கள். இந்து சமயத்தில் ஆழ்ந்த பற்றுள்ள இரண்டாம் ஹரிஹரதேவர், **நானார்த்த ரத்தினமாலை**



XII Ethics_Lesson 5.indd 131 16-03-2020 14:56:44

என்ற வடமொழி நூலை இயற்றிய இருகப்ப தண்டநாதர் என்ற சமண சமயத்தைச் சேர்ந்தவரை ஆதரித்துள்ளார். அத்வைத கோட்பாட்டில் பற்றுள்ள அப்பய்ய தீட்சிதரை வைணவ பற்றுள்ள இரண்டாம் வேங்கடதேவர் ஆதரித்தார்.

குமார கம்பணருடைய அரசியார் **கங்காதேவி மதுராவிஜயம்** என்ற நூலையும், **இராம பத்திராம்பாள், இரகுநாத ஆப்யூதயமும், திருமலாம்பாள் வரதாம்பிகா பரிணயம்** என்ற நூலையும் இயற்றியுள்ளனர். இவர்கள் இலக்கியச் செல்வம் படைத்த அரசிகளாவர். **விஜயநகரப் பேரரசின் ஆட்சியில் தெலுங்கு மொழி மறுமலர்ச்சியடைந்தது எனலாம்.** கிருஷ்ணதேவராயர் அவையில் **அஷ்டதிக்கஜங்கள்** எனப்பட்ட எட்டுப் புலவர்கள் இருந்தனர். கிருஷ்ணதேவராயரே உஷாபரிணயம், ஜாம்பவதி கல்யாணம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

- அல்லசானி பெத்தண்ணா (ஆந்திரக் கவி பிதாமகர்) – மனுசரிதம்
- நந்தி திம்மண்ணா – பாரி ஜாதப கரணமு
- துர்ஜாதி – காளத்தி மகாத்மியம்
- பிங்காலி சூரன்னா – பிரபாவதிபிரத்யும்
- தெனாலிராம கிருஷ்ணர் – விகட கவி
- மதகிரி மல்லார்ணா – இராஜசேகர சரித்திரமு
- ஹயலாராஜீபத்ரடு – ராமபுத்யாமு
- இராமராஜபூஷணர் – வசுசரித்திரம்

போன்றோர் புகழ்பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள்.

## கட்டடக்கலை

விஜயநகர ஆட்சிக்காலத்தில் கலைநயத்துடன் கோயில்கள் கட்டப்பட்டன. சோழ மன்னர்கள் காலத்தில் கோயிலின் கர்ப்பகிரகத்தின் மேலுள்ள விமானமே சிறந்து விளங்கியது. அந்நிலைமாறி கோயில்களில் நடைபெறும் வழிபாடுகளும், திருவிழாக்களுக்கு ஏற்ப கல்யாண மண்டபங்களும், நூற்றுக்கால், ஆயிரங்கால் மண்டபங்களும், பரிவாரத் தெய்வங்களுக்கு ஏற்பச் சிறு கோயில்களும், அம்மனுக்குத் தனிக் கோயில்களும் அமைக்கப்பட்டன. குதிரை மண்டபங்களும், வசந்தமண்டபங்களும் காணப்படுகின்றன. ஆயிரங்கால் மண்டபத் தூண்களில் முன் கால்களை தூக்கிப் பாய்ந்து செல்வது போன்ற குதிரைகளும், யாளிகளும் காணப்படுகின்றன. தூண்களின் உச்சியில் அலங்காரத்துடன் தொங்குகின்ற தாமரை மொட்டு போன்ற அமைப்புகளும் காணப்படுகின்றன. தூண்களில் காணப்படும் **நாகபந்தம்** என்ற அமைப்பு விஜய நகர ஆட்சிக்காலத்தில் பின்பற்றப்பட்டது. **கூடு** என்ற கட்டுமானத்தில் வரையப்பட்ட செடி, கொடிகளை இக்காலத் தூண்களில் காணலாம்.

## ஓவியக்கலை

விஜயநகர ஆட்சிக்காலத்தின் ஓவியக்கலைச் சிறப்பைக் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவாரூர், திருவரங்கம், கும்பகோணம், உத்திரமேரூர், திருவெற்றியூர், சிதம்பரம், மதுரை, அழகர்கோயில், கோவில்பட்டி, ஸ்ரீவில்லிப்புத்தூர், ஸ்ரீவைகுண்டம் போன்ற இடங்களில் காணலாம்.

## விருபாக்ஷர் கோயில்



விருபாக்ஷர் கோயில்

ஹொய்சாளர் காலத்தில் கட்டப்பட்டுக் கிருஷ்ணா தேவராயர் ஆட்சிக்காலத்தில் மெருகூட்டப்பட்டது. கோயிலின் மேற்குப் பகுதியில், கர்ப்ப கிரகமும் அம்மன் சந்நிதியும், பரிவார தெய்வங்களின் கோயில்களும் உள்ளன. துங்கபத்திரா நதிக்கரையிலிருந்து சிறிய ஒரு கோபுர வாயிலின் வழியாக இக்கோயிலுக்குள்



XII Ethics_Lesson 5.indd 132 16-03-2020 14:56:44

வரமுடியும்.கிழக்கிலுள்ள கோபுரம் புறங்குவிந்த (convex) முறையில் கட்டப்பட்டுள்ளது.

விஜயநகர காலத்துக் குதிரை மண்டபங்கள், திருவரங்கம் அரங்கநாதர் கோயிலிலும், காஞ்சி வரதராஜர் கோயிலிலும், வேலூர் ஜலகண்டேஸ்வரர் கோயிலிலும் காணப்படுகின்றன.



குதிரை மண்டபம்

## ஹம்பி



ஹம்பி

விஜயநகர ஆட்சிக்காலத்தில் தலைநகரமாக இந்நகரம் விளங்கியது. பன்னாட்டு வாணிகத் தளமாகவும் விளங்கியது. விஜயநகர ஆட்சிக்கால சிதைப்பாடுகள் இந்நகரில் காணப்படுகின்றன. கி.பி.16 ஆம் நூற்றாண்டில், இங்குக் கட்டப்பட்ட விட்டாலா சுவாமி கோயில்களும், ஹசாரா இராமசுவாமி கோயில்களும் சிறப்புப்பெற்றவையாகும். தலைக்கோட்டைப்போரில் (பொ.ஆ 1565) அழிக்கப்பட்ட இந்நகரம் உலக பாரம்பரியச் சின்னமாக **யுனெஸ்கோவால்(UNESCO)** அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## ஹசாரா இராமசுவாமி கோயில்



ஹசாரா கோயில்

பாரசீக மொழியில் **ஹசாரா என்றால் ஓராயிரம் எனப் பொருள்படும்.** ஹசாரா இராமசுவாமி கோயிலில், இராமாயணம் தொடர்புடைய காட்சிகள் அதிகமாக காணப்படுகின்றன. இராமாயணத்திலும், பாகவதத்திலும் வரும் கதைகளைச் சிற்ப வடிவில் இங்கே காணலாம். ரிஷி சிருங்கேரிமுனிவர், புத்திர காமேட்டி யாகம் செய்வது, தாடகையை இராமன் கொல்வது, இராமர், சீதை, இலக்குவன் ஆகிய மூவரும் கங்கை நதியைக் கடப்பது, சீதையைத் தூக்கிச் சென்ற இராவணனைத் தடுப்பதற்கு ஜடாயு போர்புரிவது போன்ற காட்சிகளையும் இங்குக் காணலாம்.

விஜயநகர ஆட்சிக்காலத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட மகாநவமி திருவிழாக் காட்சிகள் பாகவதத்தில் கூறப்படும் கிருஷ்ண பகவானுடைய திருவிளையாடல்கள் போன்றவை இங்குக் காணப்படுகின்றன.



XII Ethics_Lesson 5.indd 133 16-03-2020 14:56:44

### திருவிழாக்கள்

விஜய நகர ஆட்சிக்காலத்தில் முக்கிய திருவிழாக்களாக மகாநவமி, தீபாவளி, மகரசங்கராந்தி, யுகாதி, கார்த்திகைத் திருவிழா, கல்யாண உற்சவம், சிவராத்திரி, திருவாதிரைத் திருவிழா, ராமநவமி, வைகாசிவிசாகம், கிருஷ்ணஜெயந்தி, ஏகாதசி, மார்கழிநீராடல், தசமி மகாஉற்சவம் போன்ற முக்கிய திருவிழாக்கள் கொண்டாடப்பட்டன.

### விட்டலர் சுவாமிகோயில்



விட்டலர் சாமி கோயில்

மராட்டியபகுதியில்கிருஷ்ணபகவானை விட்டலர், விட்டோபா, பாண்டுரங்கன் என்ற பெயர்களுடன் வழிபட்ட முறைக்கு (வித்தலர்) **விட்டலர் வழிபாடு** என்று பெயர். இக்கோயிலில் மகாமண்டபத்தில் 12 அடி உயரமுள்ள 56 தூண்கள் எழுப்பப்பட்டுள்ளன. தூண்களில் உச்சிப்பகுதியின் அடுக்குப் பேழைகளில் நாகபந்தமும், தாமரை மொட்டுகளும் காணப்படுகின்றன. இங்குள்ள மகாமண்டபம் திராவிடக் கோயில் அமைப்புக்கலைக்கு ஓர் அணிகலன் போல் விளங்குகிறது என்று பெர்ஸி ப்ரெளன் குறிப்பிடுகிறார்.



திருவண்ணாமலை கோபுரம்

### கோபுரங்கள்

விஜயநகர அரசர்கள் தமிழ்நாட்டில் காணப்படும் கோயில்களை விரிவுபடுத்தி ஆயிரங்கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபங்கள், திருக்குளங்கள், இராஜகோபுரங்கள் முதலியவற்றை உருவாக்கினர். காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதர் கோயில் கோபுரத்தையும், காளஹஸ்தி, திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோபுரங்களும் கிருஷ்ண தேவராயர் காலத்தில் கட்டப்பட்டன. சிதம்பரம் நடராஜர் கோயிலில் வடக்குக் கோபுரம் இவர்கள் காலத்தில் கட்டப்பட்டது. விஜயநகர அரசர்கள் காலத்தில் அமைக்கப்பட்ட கோபுரங்கள் '**இராயகோபுரங்கள்**' என்றழைக்கப்படுகின்றன. இவர்கள் காலத்து கோபுரங்கள், ஒன்பதுமுதல் பதினோரு தளங்கள்வரை எழுப்பப்பட்டன. மேலும்சமயம்சாராக்கட்டடங்கள் கட்டப்பட்டன.

### இந்தியப்பண்பாட்டிற்கு விஜயநகரப் பேரரசின் கொடை

- விஜயநகர ஆட்சியாளர்கள் ஐரோப்பாவில் நிலவி வந்த நிலமானிய முறையைத் தென்னகத்தில் **நாயன்கார முறையாக** அறிமுகப்படுத்தினர்.
- விஜயநகர ஆட்சியாளர்கள் இராமநவமி, புத்தாண்டு போன்ற பண்டிகைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.
- தமிழகத்தில் தெலுங்கு மொழி பரவவும், தெலுங்கு இலக்கியம் வளரவும் முக்கிய காரணமாக இருந்தார்கள்.
- திருப்பதி திருமலையிலுள்ள வெங்கடாசலபதி கோயிலை நவீனப்படுத்தியதுடன் மலையில் பாதைகளைச் சீரமைத்தது இவர்கள் செய்த முக்கிய பணியாகும்.
- வடஇந்தியாவிலிருந்தும் இஸ்லாமியப் படையெடுப்பாளர்களிடமிருந்தும் பழைமையான இந்தியப்பண்பாட்டுக் கூறுகளான கோயில்கள், கலைகள் போன்றவற்றைப் பாதுகாத்தது இவர்கள் பண்பாட்டிற்குத் தந்த கொடையாகும்.



XII Ethics_Lesson 5.indd 134 16-03-2020 14:56:45

- இவர்கள் காலத்தில் கோயில்களில் மிக உயர்ந்த இராயகோபுரங்கள் கட்டப்பட்டன.
- கோயில்களில் திருச்சுற்றுகள் (பிரகாரங்கள்) எண்ணிக்கை பெருகின.
- கல்யாணமண்டபம், குதிரைமண்டபங்கள், யாளிமண்டபங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள் எழுப்பப்பட்டன.

## 5.12 பாமினிஅரசின் காலப் பண்பாடு

**அலாவுதீன் ஹாசன் பாமன்ஷா** என்றழைக்கப்பட்ட ஹாசன்கங்கு பாமினி அரசைத் தோற்றுவித்தார். இவர் டெல்லி சுல்தான் முகமதுபின் துக்ளக் ஆட்சியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, சுதந்திர அரசை நிறுவினார். பாமினி அரசின் தலைநகர் **குல்பர்க்கா** ஆகும்.

### சான்றுகள்

பாமினி அரசைப் பற்றி அறிந்துகொள்வதற்குக் கன்னடம், தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளிலுள்ள கல்வெட்டுகளும், சமஸ்கிருத மொழியிலுள்ள செப்புப்பட்டயங்கள், இலக்கியச் சான்றுகள் கோயில்கள், அரண்மனைகள், கோட்டைகள் ஆகிய தொல்லியல் சான்றுகளும் உதவுகின்றன. மேலும், அயல்நாட்டுப் பயணிகளான இபின்பதுதா, அப்துர்ரசாக், நிகிடின், நூனிஸ் ஆகியோரின் குறிப்புகளும் பாமினி அரசைப் பற்றி அறிய உதவுகின்றன.

### பாமினி அரசின் நிருவாகம்

#### மையஅரசு

பாமினிசுல்தான் அரசின் நிருவாகமுறை, இஸ்லாமிய ஆட்சிமுறையை முன் மாதிரியாகக் கொண்டிருந்தது. மன்னர் அனைத்து அதிகாரங்களையும் கொண்டிருந்தார். சுல்தான் அமைச்சர்களின் கருத்துப்படி, நிருவாகத்தை நடத்தி வந்தார். பாமினி சுல்தான் **கலீபாவின்** மேன்மையான அதிகாரத்தை ஏற்றார்.

#### அமைச்சர்குழு

- வகில்–உஸ் சுல்தான் – நாட்டின் துணைத் தலைவர்
- வசீல் குல் - அமைச்சர்களின் பணியைமேற்பார்வையிடுபவர்
- அமீர்–இ. ஜும்லா - நிதியமைச்சர்
- வசீர்–இ. அஸ்ரப் - வெளியுறவு அமைச்சர்
- நசீர் - நிதித்துறை அமைச்சர்
- பேஷ்வா - அரசப் படை பொறுப்பாளர்
- கொத்வால் - காவல் துறைத் தலைவர்
- சதர்–இ. ஜஹான் - தலைமை நீதிபதி

போன்ற எட்டு அமைச்சர்களைக் கொண்டு ஆட்சி புரிந்தனர். இம்முறை பிற்காலத்தில் மராட்டிய ஆட்சியாளர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தது.

#### மாநில நிருவாகம்

அலாவுதின் ஹாசன் பாமன்ஷா பாமினி அரசை **ஆசானாபாத், தௌலதாபாத் பீரார், பீடார்** என நான்கு முதன்மை பிரிவுகளாகப் பிரித்தார். நிருவாகத்தை ஆளுநர்கள் நடத்தினர். முகமதுஷாவின் காலத்தில் பேரரசு **தரப்புகள்** என்ற பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி புரிந்தனர். தரப்புகள் சர்க்கார்களாவும், சர்க்கார்கள் பர்கானாக்களாகவும், பர்கானாக்கள் கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டன. ஆட்சியின் அடிப்படை அலகு கிராமம் ஆகும்.

#### சமூக நிலை

பாமினி அரசு இந்து–இஸ்லாமிய சமயங்களின் இணைப்பாக இருந்தது. சமூகத்தில் வேளாண்மை செய்வோர், நெசவாளர்கள், உலோக வேலை செய்வோர், கைத்தொழில் செய்வோர் போன்றோர் முக்கிய இடம் வகித்தனர்.

#### வருவாய்த்துறை

முகமது கவான் என்னும் அமைச்சர், நிலங்களை அளந்து எல்லைகளை நகர, கிராமிய நிலங்களின் எல்லைகள் எனச் சரியாகக் கணக்கிட்டு, அதனை அரசுக் குறிப்பேட்டில் இடம் பெறச் செய்தார். ஒவ்வொரு

மாநிலத்திலும் அரசருக்கென நிலங்கள் ஒதுக்கப்பட்டன. அவை **காசா-இ-சுல்தானி** எனப் பெயரிடப்பட்டன. அரசிற்கு நிலங்கள் மூலம் வருவாய் கிடைக்கப்பெற்றது.

## கல்வி

பாமினி சுல்தான்கள் கல்வியில் ஆர்வம் உடையவர்களாகத் திகழ்ந்தனர். இவர்கள் பல பள்ளிகள் தொடங்கினார்கள். முஜாஹித் ஷா என்பவர் ஆதரவற்றவர்களுக்கு ஒரு பள்ளியை ஏற்படுத்தினார். குல்பர்க்கா, பீடார் போன்ற இடங்களில் கல்விக் கூடங்கள் நிறுவப்பட்டன. சுல்தான் பிரோஷ் ஷா இறையியல், அறிவியல், ஜியோமிதி, கணிதம், ஆகியவற்றில் புலமை பெற்றிருந்தார். அரபு, பாரசீகம் போன்ற நாடுகளிலிருந்து கல்வியாளர்களை வரச் செய்து மக்களுக்குக் கல்வி போதித்தார்.

பாரசீகத்தில் பிறந்த முகமது கவான் பாரசீக மொழியிலும், கணிதத்திலும் புலமை பெற்றவராகத் திகழ்ந்தார். மேலும், சிறந்த கவிஞராகவும் மற்றும் எழுத்தாளராகவும் விளங்கினார். பீடாரில் மதராசாவை என்ற பள்ளியை நிறுவி அதில் பெரிய நூலகத்தை அமைத்தார். அதில் 3000 கையெழுத்துப் பிரதி நூல்கள் இடம்பெற்றிருந்தன என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

## கட்டடக்கலை

பாமினி அரசர்கள் காலத்தில் கட்டடங்கள் மிகுந்த எண்ணிக்கையில் கட்டப்பெற்றன. குல்பர்காவில் கட்டப்பட்ட ஜாமிமசூதி பாரசீக முஸ்லீம் கைவினைஞர்களால் கட்டப்பட்டதாகும். இவர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோல்கொண்டா, கோல்கும்பாஸ் போன்றவை மிகச் சிறந்த கட்டடங்களாகும்.

## குல்பர்காவின் ஜாமி மசூதி

இம்மசூதி முதலாம் முகமதுஷா காலத்தில் தொடங்கப்பட்டு, கி.பி(பொ.ஆ) 1367 - இல் முடிக்கப்பட்டது. இம்மசூதி 63 அரை கோளவடிவக் குவிமாடங்கள் கொண்ட விதான அமைப்பால் முற்றிலும் மூடப்பட்டுள்ளது. மைய மைதானம் விதானத்தின் கிழக்கு, வடக்கு, தெற்கு விளிம்புகளில் இடம்பெற்றிருக்கும் உருளை வடிவ விதானத்துடன்கூடிய அழகும், வளைவு அணி நடைபாதை அமைப்பு மிக அகலமாகவும் உள்ளன. இவை பாமினி கட்டக்கலைக்குச் சிறந்த சான்றாக அமைந்துள்ளன.

## கோல்கொண்டா கோட்டை



கோல்கொண்டாகோட்டை

**இராஜாகிருஷ்ணதேவ்** என்ற காகத்திய அரசரால் கட்டப்பட்ட கோட்டை ஆகும். இக்கோட்டை இருந்த பகுதி முகம்மது நகர் எனப்பட்டது. குதுப்ஷா வம்சத்தின் தலைநகரமாக விளங்கியது. கோட்டையின் ஒலிஅமைப்பு அடிப்படையில் இது சிறந்த கட்டடக்கலையின் அம்சமாகும். இக்கோட்டையின் உயர்ந்தபகுதி பாலாஹிசார் என்றழைக்கப்படுகிறது. பீரங்கிகள், அரச அரண்மனைகள், அறைகள், மசூதிகள் உட்பட நான்கு சிறிய கோட்டைகளும் இதனுள் அடங்கும். இக்கோட்டையின் நுழைவாயில் பதேதர்வாசா என்றழைக்கப்படுகிறது. 17-ஆம் நூற்றாண்டில் கோல்கொண்டா ஒரு சிறந்த வைரச் சந்தையாக திகழ்ந்தது.


## கோல் கும்பாஸ் மசூதி

கர்நாடகா மாநிலத்தில் பீஜப்பூர் மாவட்டத்தில் உள்ள அடக்கத் தலக் கட்டடம் ஆகும். இது **தக்காண சுல்தானகம்** கட்டடக்கலை பாணியில் கட்டப்பட்டது கோல்கும்பாஸ் கனசதுர வடிவ கட்டடமாகும். ஒவ்வொரு பக்கமும் நீளம், அகலம் மற்றும் உயரம் 47.5 மீட்டர் சமமாகக் கொண்டுள்ளது. இந்த அடக்கத்தலம் உலகின் மிகப்பெரிய ஒற்றை அறை இடைவெளிகள் கொண்டதாகும்.



XII Ethics_Lesson 5.indd 136 16-03-2020 14:56:46

இக்கட்டடத்தின் மையத்திலிருந்து சாதாரணமாகப் பேசினாலும் அனைத்துப் பகுதிகளுக்கும் தெளிவாகக் கேட்கும்படி ஒலியமைப்பு இருப்பது இதன் சிறப்பம்சமாகும்.



கோல்கும்பாஸ் சமாதி

**தக்காண சுல்தானகக் கலை**

பாரசீக கட்டடக்கலையை மையமாகக் கொண்டு, பாமினி சுல்தான்கள் கட்டடங்களைக் கட்டினர். இக்கலையில் வட்டவடிவ கட்டடங்கள், கனசதுர வடிவ கட்டடங்கள் கட்டப்பட்டன. இக்கலையே தக்காண சுல்தானகக் கலையாகும்.

## ஒவியக்கலை

**முணுமுணுக்கும் அரங்கம்**

பீஜப்பூரிலுள்ள கோல்கும்பாஸ் முணுமுணுக்கும் அரங்கம் என்ற சிறப்பைப் பெற்றுள்ளது. ஏனெனில், இங்குள்ள அரங்கத்தின் ஒரு மூலையில் நின்று, மெல்லப் பேசினாலே அதன் எதிரொலியை எதிர்முனையில் துல்லியமாகக் கேட்க முடியும் என்ற கட்டடக்கலை அமைப்பு முறையில் கட்டப்பட்டது.

பீஜப்பூரில் கட்டப்பெற்ற இப்ராகீம் ரௌஸாவிற்கும், அகமத் நகரிலுள்ள பாரபாக் ஆகியவற்றிற்கும் தக்காண சுல்தானகக் கலையே அடிப்படையாகும். பாமினி சுல்தான்கள் பரந்த மனப்பான்மையுடன் விளங்கினர். பாமினி சுல்தான்கள் ஆட்சிக் காலம், இந்தியக்கலை, கட்டடக்கலை போன்றவற்றில் மாற்றத்தை உருவாக்கியது எனலாம்.

## பாமினி அரசு அளித்த கொடை

- பாமினி அரசு காலத்தில் எண்ணற்ற மசூதிகள், நூலகங்கள் கட்டப்பட்டன. தென்னிந்தியாவில் மதராசாக்கள் மூலம் முஸ்லீம்களுக்கு முதன்முதலில் கல்வியை கற்பித்தவர்கள் இவர்களே ஆவர்.
- முகமது கவானின் நிருவாக சீர்திருத்தங்கள் பிற்கால இஸ்லாமிய சுல்தானுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தன.
- குல்பர்க்காவில் உள்ள ஜிம்மா மசூதி, கோல்கொண்டா கோட்டை கோல்கும்பாஸ் கட்டடம் ஆகியவை இந்திய கட்டடகலைக்குப் பாமினி அரசின் கொடையாகும்.
- நிலமானிய முறைப்படி தென்னிந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட முதல் இஸ்லாமிய அரசு இதுவாகும்.
- முதலாம் முகமது ஷாவின் சீர்திருத்தங்கள் பிற்கால பாமினி சுல்தான்கள் மற்றும் மராத்தியர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தன.

## 5.13 முகலாயர்காலப் பண்பாடு

பாபர் என்பவரால் கி.பி. (பொ.ஆ.) 1526 ஆம் ஆண்டில் இந்தியாவில் முகலாயப் பேரரசு தோற்றுவிக்கப்பட்டது. ஹுமாயூன், அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்கசீப் ஆகியோர் முகலாயர்களின் முக்கிய மன்னர்களாவர். இவர்களின் ஆட்சி முறை, சமூக, பொருளாதார, சமய நிலை, நுண்கலைகள் போன்றவற்றில் வியத்தகு முன்னேற்றங்கள் ஏற்பட்டன.

### சான்றுகள்

பாபர் எழுதிய சுயசரிதையான **பாபர் நாமா**, அவரது மகள் குல்பதான் பேகம்



XII Ethics_Lesson 5.indd 137 16-03-2020 14:56:46

எழுதிய **ஹுமாயூன் நாமா**, அபுல்பாசல் எழுதிய **அயினி அக்பரி**, **அக்பர் நாமா** ஆகிய நூல்களும் டாவர்னியர், பெர்னியர், மனுச்சி ஆகிய வெளிநாட்டவர்களின் குறிப்புகளும், பதேபூர்சிக்ரி, தாஜ்மஹால், ஜும்மா மசூதி, டெல்லி செங்கோட்டை போன்ற கட்டடங்களும் முகலாயர்களைப் பற்றி அறிவதற்கான சான்றுகளாகத் திகழ்கின்றன.

## ஆட்சிமுறை

பேரரசு எனப்பட்ட பரந்த நிலப்பரப்பை ஆட்சி செய்த மன்னர் 'பாதுஷா' என்றழைக்கப்பட்டார்.

1. வகீல் – தலைமை அமைச்சர்
2. திவானி ஆலா – நிதியமைச்சர்
3. மீர்பக்ஷி – இராணுவத் தலைவர்
4. சதர் –உஸ்–சுடூர் – சமயத்துறை அமைச்சர்
5. கான்–இ–சாமன் – உயர் அரண்மனை அலுவலர்
6. தலைமை காஸி – தலைமை நீதிபதி ஆகியோர் ஆவர்.

பிற அமைச்சர்களும் இவர்களின் கீழ் பணியாற்றினர்.

1. தரோகா–இ–தாக் – சௌகி – ஒற்றர் துறைத் தலைவர்,
2. மீர்–ஐ–அடிஷ் – பீரங்கிப் படைத்தலைவர்
3. மீர்–ஐ– பஹரி – சிறுகப்பற்படைத் தலைவர்
4. மீர்பார் – காடுகளின் பொறுப்பாளர்
5. மீர்தோசக் – அவைச்சடங்குகளின் பொறுப்பாளர்

## நிலவருவாய்

மைய அரசின் எட்டுவகை வருவாய்கள் 1) நிலவரி 2) சுங்கவரி 3) அன்பளிப்பு 4) அக்கசாலை 5) ஸகாத் 6) வாரிசற்ற மன்சப்தார் சொத்து 7) உப்பு வரி 8) கர்காணா மூலம் பெறப்பட்ட வருவாய்

முகலாயப் பேரரசின் நிலவருவாய் முறையை அக்பர் வரையறுத்தார். ராஜா தோடர்மால் என்ற நில வருவாய்த் துறையின் ஆலோசனையின்படி, ஜப்தி என்ற முறையை அக்பர் செயல்படுத்தினார். விளைச்சலின் அடிப்படையில் நிலங்கள் **பொலாஜ், பரௌதி, சச்சார், பான்சார்** ஆகிய நான்கு பிரிவாகப் பிரிக்கப்பட்டு, வரி வசூல் செய்யப்பட்டது.

## படை நிருவாகம்

முகலாய மன்னர்கள் குதிரைப்படை, காலாட்படை, பீரங்கிப்படை, கடற்படை, யானைப்படை ஆகிய படைகளைப் பெற்றிருந்தனர். மன்சப்தாரி என்ற முறையை அக்பர் அறிமுகப்படுத்தினார். இம்முறையின்படி படைகள் முறைப்படுத்தப்பட்டன. குதிரைப்படை வீரர்கள் '**சில்லேஷ்தா**' எனப்பட்டனர்.

### மன்சப்தாரி முறை

கி.பி(பொ.ஆ) 1571 –ஆம் ஆண்டு அக்பர் ஏற்படுத்திய படைநிருவாக முறை மன்சப்தாரி முறையாகும். 'மன்சப்' என்ற அரபுச் சொல்லுக்கு '**தரம்**' அல்லது '**தகுதி**' என்று பொருள். பத்து முதல் பத்தாயிரம் வரையிலான தரவரிசை அடிப்படையில் வீரர்கள் பிரிக்கப்பட்டனர்.

## சமூக நிலை

இந்துக்கள், இஸ்லாமியர்கள் கொண்ட புதிய சமூகக் கட்டமைப்பு முகலாயர்கள் காலத்தில் நிலைபெற்றது. இந்துக்களில் ரஜபுத்திரர்கள், பிராமணர்கள் வணிகர்கள் போன்றோர் உயர்ந்த நிலையிலிருந்தனர். இவர்கள் தத்தம் தொழில்களைச் சிறப்பாகச் செய்தனர். போர் வீரர்கள், மதகுருமார்கள் கைவினைஞர்கள், உலோகத் தொழில் செய்வோர், சமூகத்தில் முக்கிய இடம் பெற்றனர். இஸ்லாமியர்களின் அரசு நடைபெற்றதால் அரேபிய, துருக்கிய, மங்கோலிய, அபிசீனிய, ஆப்கானிய முஸ்லீம்கள் முக்கியத்துவம் பெற்றனர். ஷேக்சதாஸ் எனப்பட்ட இந்திய முஸ்லீம்களுக்குச் சமூகத்தில் உயர் மதிப்பு இருந்தது.



XII Ethics_Lesson 5.indd 138 16-03-2020 14:56:46

## மகளிர் நிலை

சமூகத்தில் ஆணாதிக்கம் முக்கியத்துவம் பெற்றாலும் ரஜபுத்திர, முகலாய அரசகுலப் பெண்களுக்கு அடிப்படைக்கல்வி மற்றும் சமயம் சார்ந்த கருத்துக்கள் போதிக்கப்பட்டன. இக்காலப் பெண்கள் குழந்தைத் திருமணமுறையால் பாதிக்கப்பட்டனர். விதவைகள் மறுமணம் அங்கீகரிக்கப்படவில்லை.

## கல்வி

இந்துக்களுக்கு என்று தொடக்கக் கல்வி நிறுவனங்களிலும், பாடசாலைகளிலும் அரசகுடும்பத்தினருக்கு அரண்மனையிலும் கல்வி பயிற்றுவிக்கப்பட்டது. **மக்தப், மதரசா** என்ற உயர் கல்வி நிறுவனங்களும் இஸ்லாமியர்களுக்குக் கல்வியைப் போதித்தன. பனாரஸ், நாதியா, அயோத்தி, மதுரா, அலகாபாத், உஜ்ஜயினி போன்ற இடங்களில் இந்துக்களுக்கான கல்வி நிறுவனங்கள் இருந்தன. டெல்லி, ஆக்ரா, பதேபூர்சிக்ரி, லாகூர் ஆகிய இடங்களில் இஸ்லாமிய உயர்கல்வி நிலையங்கள் இருந்தன. பாரசீக மொழி அரசவை மொழியாகவும் இஸ்லாமியக் கல்வி முறையின் பயிற்று மொழியாகவும் இருந்தது.

## பொருளாதார நிலை

முகலாயர்கள் காலத்தில் வேளாண்மை முக்கிய தொழிலாக இருந்தது. கோதுமை, நெல், பருப்பு வகைகள், பார்லி, பருத்தி, கரும்பு, அவுரி, எண்ணெய் வித்துக்கள் ஆகியவை பயிரிடப்பட்டன. பதினேழாம் நூற்றாண்டில் புகையிலை, மக்காச்சோளம் உருளைக்கிழங்கு, மிளகாய் போன்ற வேளாண்மைப் பயிர்கள் இவர்கள் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. அயல்நாட்டு வாணிகத்தில் ஈடுபட்ட வணிகர்கள் '**சேத்**' மற்றும் '**போரா**' என்றும், உள்நாட்டு வாணிகத்தில் ஈடுபட்ட வணிகர்கள் 'பானிக்' என்றும், மொத்த தானிய வாணிபத்தில் ஈடுபட்ட வணிகர்கள் '**பஞ்சாராக்கள்**' என்றும் அழைக்கப்பட்டனர். வங்காளத்தில் சர்க்கரை, அரிசி, மெல்லிய மஸ்லின் துணிகள், பட்டாடைகள் உற்பத்தி செய்யப்பட்டு மத்திய ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஐவுளி ஏற்றுமதி மையமாகச் சோழ மண்டலக் கடற்கரை திகழ்ந்தது. காஷ்மீர் சால்வைகள், கம்பளவிரிப்புகள், ஆடம்பரப் பொருட்கள் போன்றவற்றின் விற்பனை மையமாகக் குஜராத் திகழ்ந்தது. காரீயம், செம்பு, போர்க்குதிரைகள், தந்தம் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன.

> டெல்லி, பனாரஸ், சூனார் ஆகிய இடங்களில் அழகிய மட்பாண்டங்களும், குஜராத் பகுதிகளில் பருத்தி ஆடைகளும் தயாரிக்கப்பட்டன. இவை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

அக்பர் காலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கர்க்காணாக்கள் என்ற தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டதாக அபுல்பாசல் கூறுகிறார். இந்தியப் பருத்தியாடைகளைச் சீனா, ஜப்பான், பாரசீக, எகிப்திய, அரேபிய, ஐரோப்பிய வாணிகர்கள் விரும்பி வாங்கினர்.

பேரரசு சுபாக்கள் என்ற மாநிலங்களாகவும், சுபாக்கள் சர்க்கார்கள் என்ற மாவட்டங்களாகவும், சர்க்கார்கள் பர்கானாக்கள் என்ற வட்டங்களாகவும் பிரிக்கப்பட்டன. சுபாக்கள் என்ற மாநிலங்களைச் **சுபேதார்** என்பவர் ஆட்சி செய்தார். அவருக்கு உதவதிவான் என்ற மாநில நிதியமைச்சர், மாநில சதர் என்ற சமயத்துறை அமைச்சர், மாநில பக்ஷி என்ற வழக்கு அலுவலர், கொத்வால் என்ற நகரச் சிறப்பு நிருவாக அலுவலர் போன்றோர் கொண்ட மாநில அமைச்சரவை செயல்பட்டது. சர்க்கார்களை பாஜ்தார் என்பவரும், பர்கானாக்களை ஷிக்தார் என்பவரும் ஆட்சி செய்தனர். பிடிக்க்ஷி, பொட்தார், அமால் குஜார் போன்ற அலுவலர்கள் மாநில, மாவட்ட அரசு நிருவாகத்திற்கு உதவினர்.

## சமயநிலை

முகலாயர்கள் காலத்தில் இஸ்லாமிய சமய அடிப்படையிலான அரசு நடைபெற்றது என்றாலும் அக்பர் சமய சார்பற்றவராகவே இருந்தார். ரஜபுத்திரர்களுடன் கொண்டிருந்த



XII Ethics_Lesson 5.indd 139 16-03-2020 14:56:46

நட்பின் காரணமாகக் கி.பி 1563–இல் புனிதப் பயணிகள் மீதான வரியையும் கி.பி 1564–இல் இஸ்லாமியரல்லாதோர் செலுத்திய ஜிசியா என்ற வரியையும் நீக்கினார். இந்துக்களின் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடினார். இந்துக்களிடத்தில் **சதி முறை, ஜௌஹார்** என்ற முறைகளை (இந்துப்பெண்கள் தீக்குளிக்கும் முறை) எதிர்த்தார். கி.பி. (பொ.ஆ.) 1575 இல் இபாதத்கானா என்ற சமய பிரார்த்தனை மற்றும் விவாதக் கூடத்தை நிறுவிய இவர் கி.பி. (பொ.ஆ.) 1579ல் தவறுபடா ஆணையை வெளியிட்டார்.

சமய விவகாரத்தில் மன்னர் தவறிழைக்கமாட்டார் என்று மன்னர் வெளியிடும் அறிவிப்பே தவறுபடா ஆணையாகும்.

இந்து, இஸ்லாம், கிறித்தவம், சமணம் உள்ளிட்ட பல சமய அறிஞர்களுடன் கலந்துரையாடலில் அக்பர் ஈடுபட்டார்.

இவ்வுரையாடலில் புருஷோத்தம், தேவி (இந்துமதம்), மெகர்ஜிராணா (ஜொராஸ்டிரிய மதம்) அக்வாவிபா, மான்சரேட் (கிறித்துவமதம்) ஹிர விஜய சூரி (சமண மதம்) ஆகியோர் பங்கு பெற்றனர். உரையாடலின் விளைவாக அக்பர் **தீன் இலாகி** (தெய்வீக சமயம்) என்ற புதிய சமயத்தைத் தோற்றுவித்தார். அக்பர் இந்து, இஸ்லாம், சீக்கிய சமயத்தவரைச் சமமாக நடத்தினார். சீக்கியர்களுடன் நல்லுறவு கொண்டிருந்ததன் அடையாளமாக அவர்களுக்குப் பொற்கோயில் (அமிர்தசரஸ்) கட்ட நிலம் தானமாக வழங்கப்பட்டது. ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்கசீப் ஆகியோர் சமய விவகாரங்களில் அக்பரைப்போல் தாராள மனத்துடன் செயல்படாததால், இஸ்லாமியரல்லாத மக்களின் ஆதரவை இழந்தனர்.

## கட்டடக்கலை

பாபர், ஹுமாயூன் ஆகியோர் காலத்தைவிட அக்பர், ஷாஜஹான் காலத்தில்தான் கட்டடக்கலை வளர்ச்சிபெற்றது. செங்கற்களாலான கட்டடங்கள் அக்பர் காலத்தில் கட்டப்பட்டன. கட்டடங்கள் கட்டுவதில் பாரசீக பாணி பின்பற்றப்பட்டது. அக்பர் காலத்தில் ஹுமாயூனிற்குக் கல்லறை, பதேபூர் சிக்ரியில் பல அழகிய கட்டடங்கள், புலந்தர்வாசா (பதேபூர் சிக்ரியின் நுழைவாயில்) போன்றவை கட்டப்பட்டன. அக்பருக்குப்பின் ஆட்சிக்கு வந்த ஜஹாங்கீர், சிக்கந்தரா என்ற இடத்தில் அக்பரின் கல்லறையைக் கட்டினார்.



தாஜ்மஹால்

ஷாஜஹான் காலத்தில் முகலாயக் கட்டடக்கலை அதன் புகழின் உச்சத்தை அடைந்தது. **இவரது காலம் முகலாயக் கட்டடக்கலையின் பொற்காலம்** என்றழைக்கப்பட்டது. ஷாஜஹான் காலத்தில் கட்டப்பட்ட மிகச்சிறந்தக் கட்டடம் தாஜ்மஹால் ஆகும். இது அர்ஜுமன் பானு பேகம் என்ற இயற்பெயர் கொண்ட அவரது மனைவி மும்தாஜ் மஹாலின் நினைவாக ஆக்ராவில் யமுனை நதியோரத்தில் கட்டப்பட்டது. இந்திய, பாரசீக, ஆப்கன், துருக்கி, உள்ளிட்ட நாடுகளின் கட்டடக்கலை வல்லுநர்கள் தாஜ் மஹாலின் கட்டுமானப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். தாஜ்மஹாலின் கட்டுமானப் பணியை ஒருங்கிணைத்துத் தந்தவர் **உஸ்தாத் அகமதுலஹாவரி** என்பவராவார். தாஜ்மஹாலின் கட்டுமானப் பணியை சாதுல்லாகான் என்ற அதிகாரி மேற்பார்வையிட்டார். இது வெள்ளைப்பளிங்குக் கற்களால் கட்டப்பட்டது. இப்பளிங்குக் கற்கள் மெகர்க்ரானா என்ற பகுதியிலிருந்து பெறப்பட்டன. இதிலுள்ள அழகிய பூ வேலைப்பாடுகளுக்கு **பியட்ராடியூரா** என்று பெயர். டெல்லியில் செங்கோட்டை, ஜும்மாசூதி போன்றவையும் ஷாஜஹான் காலத்தில் கட்டப்பட்டன. மோதிமசூதி முத்துமசூதி, திவானிகாஸ், திவானி ஆம்



XII Ethics_Lesson 5.indd 140 16-03-2020 14:56:47

போன்றவையும் இவரது காலத்தில் கட்டப்பட்ட பிற கட்டடங்களாகும்.



செங்கோட்டை

## இலக்கியங்கள்

**'தாரிக் இ ரஷீதி'** என்ற நூலை மிர்சா ஹைதர் என்பவர் எழுதினார். இந்நூல் பாபர் ஹுமாயூன் ஆகியோர் பற்றிய தகவல்களைத் தருகிறது. நிஜாம் உத்தீன் பக்ஷி என்பவர் எழுதிய தபாகத் –இ– அக்பரி என்ற நூல் அக்பரின் ஆட்சிமுறையைக் குறிப்பிடுகிறது. முகலாய மன்னரான ஜஹாங்கீர் துசுக்- இ- ஜஹாங்கீரி என்ற சுயசரிதை நூலை எழுதினார். அப்துல்ஹமீதுலாகூரி எழுதிய 'பாதுஷா நாமா' என்ற நூலும், இனாயத்கான் எழுதிய 'ஷாஜஹான் நாமா' என்ற நூலும் ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. மிர்சா முகம்மதுகான் எழுதிய ஆலம்கீர் நாமா என்ற நூல் ஔரங்கசீப்பின் ஆட்சிக் காலத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

உங்களுக்குத் தெரியுமா?

தாஜ்மஹாலை உலகப் பாரம்பரியச் சின்னமாக யுனெஸ்கோ (UNESCO) கி.பி. (பொ.ஆ.) 1983-இல் அங்கீகரித்துள்ளது.

## இசைக்கலை

முகலாய மன்னரான அக்பர் ஆட்சிக்காலத்தில் இசைக்கலை முக்கியத்துவம் பெற்றது. **நக்காரா** என்ற இசைக் கருவியை வாசிப்பதில் அக்பர் வல்லவராகத் திகழ்ந்தார். இவரது அரசவையை **மியான்தான்சேன்** என்ற இசைக்கலைஞர் அலங்கரித்தார். ஜகாங்கீர் மற்றும் ஷாஜகான் காலத்தில் இசைக்கலைஞர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

**பாபர்நாமா** – இந்நூல் பாபரால் துருக்கி மொழியில் எழுதப்பட்டது. பாபர் தமது இளமைக்காலம், தாம் சந்தித்த வெற்றிகள், தோல்விகள் போன்றவற்றையும் அக்காலத்தைய இந்திய சமூக, சமய நிலையையும், தாவரங்கள் விலங்குகள் பற்றியும் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்நூலை அக்பரின் வேண்டுகோளுக்கிணங்க அப்துல் ரஹீம் பாரசீக மொழியில் மொழிபெயர்த்தார். வில்லியம் எர்ஸ்கின், லெய்டன் ஆகியோரால் இந்நூல் ஆங்கிலத்திலும், பாவெட்டி – கோர்ட்லி என்பவரால் பிரெஞ்சு மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டது.

## ஓவியக்கலை

**மீர்சையது அலி, அப்துல்சமது** ஆகிய இரு ஓவியர்கள். ஹுமாயூனால் பாரசீகத்திலிருந்து இந்தியாவிற்கு அழைத்துவரப்பட்டனர். அக்பர் காலத்தில் இந்த ஓவியர்கள் புகழ் பெற்றனர். பல்வேறு இலக்கிய மற்றும் சமய நூல்களுக்கு உருவங்கள் (வரையப்பட்ட ஓவியம்) மூலம் விளக்கமளிக்கும் பணியை அக்பர் தொடங்கி வைத்தார். **பஸ்வான், மிஸ்கினா, தஸ்வந்த்** ஆகிய ஓவியக் கலைஞர்களையும் ஆதரித்தார்.

இவரது காலத்தில் இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் இடம்பெற்றுள்ள கருத்துகளும், காட்சிகளும் ஓவியங்களாகத் தீட்டப்பட்டன. ஹம்சா நாமா என்ற ஓவியத் தொகுப்பு உருவாக்கப்பட்டது. இத்தொகுப்பில் ஆயிரத்திற்கு மேற்பட்ட ஓவியங்கள் இடம்பெற்றிருந்தன. ஓவியர்கள் நீலம், சிகப்பு ஆகிய வண்ணங்களைத் தமது ஓவியங்களில் மிகுதியாகப் பயன்படுத்தினர். ஜஹாங்கீர் காலத்தில் ஓவியக்கலை அதன் புகழின் உச்சியை அடைந்தது. அபுல்ஹசன், பிஷன்தாஸ், மது, ஆனந்த், கோவர்தன், உஸ்தாத் மன்சூர் ஆகிய ஓவியர்கள் இவர் காலத்தில் புகழ்பெற்றுத்



XII Ethics_Lesson 5.indd 141 16-03-2020 14:56:47

திகழ்ந்தனர். அரசன், அரசியர், அரசவை, வேட்டையாடுதல், போர்க்காட்சிகள், விலங்குகள் போன்றவை இவர்கள் வரையும் ஓவியங்களில் முக்கியத்துவம் பெற்றன. **செருகேடுகள்** (ஆல்பம்) தயாரிக்கும் முறையும் முகலாயர்கள் காலத்தில் உருவாக்கப்பட்டன. ஓவியக்கலையின் மீதுள்ள ஆர்வத்தால் பாரசீகத்திலிருந்து மீர்சையது அலி, அப்துல் சமது ஆகிய இரு ஓவியர்களை ஹுமாயூன் அழைத்துவந்தார். இவ்விருவரும் அக்பர் காலத்தில் புகழ் பெற்றனர்.

முகலாய மன்னரான பாபரால் இந்தியாவில் முதன்முதலில் **பீரங்கிப்படை** அறிமுகப்படுத்தப்பட்டது. இது இந்தியாவின் படையமைப்பில் புதிய மாற்றத்தை உருவாக்கியது. இவரது **துலுக்மா** என்ற போர் முறை மராத்தியரின் கொரில்லாப் போர் முறைக்கு அடிப்படையாக அமைந்தது.

## இந்தியப்பண்பாட்டிற்கு முகலாயர்களின் கொடை

- முகலாயர்கள் காலத்தில் அரேபிய பாரசீக, துருக்கிய மொழிகள் வளர்ச்சி பெற்றன.
- அக்பரது நிலவருவாய் முறை, ஜப்திமுறை பிற்காலத்தில் இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர்களின் நிலவருவாய் முறைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தது.
- அக்பர் அவையில் குவாலியரைச் சேர்ந்த இசைக் கலைஞரான தான்சேன் இடம்பெற்றிருந்தார். பிற்காலத்தில் எழுந்த இந்திய இசையின் பரிணாம வளர்ச்சிக்கு இவர் வித்திட்டார்.
- ஜஹாங்கீரின் மனைவியான நூர்ஜஹான் ரோஜா இதழ்களாலான வாசனை திரவியத்தை அறிமுகப்படுத்தினார். முகலாயர்களின் வாணிகத்தில் இத்திரவியம் முக்கியத்துவம் பெற்றது.
- பிரியாணியையும், மைதாவினாலான உணவு வகைகளையும் முகலாயர்கள் அறிமுகப்படுத்தினர்.
- காஷ்மீரிலுள்ள நிஷத்பாக், லாகூரிலுள்ள ஷாலிமார் தோட்டம், பஞ்சாப்பிலுள்ள பங்க்சோர் தோட்டப்பூங்கா ஆகியவை இந்தியாவிற்கு முகலாயர்களின் கொடையாகும். அவை இன்றளவும் நிலைத்துள்ளன.
- ஜஹாங்கீரின் நீதிச் சங்கிலி முறை பிற்கால நீதி வழங்கும் முறைக்கு வழிகோலியது எனலாம்.

## நிறைவுரை

மௌரியர்கள் காலத்தில் கல்வி, ஆட்சிமுறை, பண்பாடு, நுண்கலைகள் போன்றவை வியத்தகு வளர்ச்சியைப் பெற்றன. அசோகர் காலத்தில் பரப்பப்பட்ட பௌத்தம், ஆசிய நாடுகளில் பரவி இந்தியாவின் பண்பாட்டை உலகிற்கே பறைசாற்றியது. குப்தர்கள் காலத்தில் இந்துசமயம் மறுமலர்ச்சி பெற்றதாலும் கலை, கட்டடக்கலை, அறிவியல் போன்றவற்றில் வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டதாலும் இக்காலம் இந்தியாவின் செவ்வியல் காலம் என்றழைக்கப்பட்டது. குஷாணர்கள் காலத்தில் காந்தாரக் கலையின் சிறப்பம்சங்கள், இந்தியக் கலையில் தாக்கத்தை ஏற்படுத்தின. சாளுக்கியர்கள், பல்லவர்கள் போன்றோர் காலத்தில் இலக்கியங்கள், கட்டடக்கலைகள் வளர்ச்சியடைந்தன. சோழர்கள் காலத்தில் இலக்கியம், கலை, கட்டடக்கலை, போன்றவற்றில் வியத்தகு மாற்றம் ஏற்பட்டது. சோழர்களது கிராம ஆட்சிமுறை, இன்றைய உள்ளாட்சி நிருவாகத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. பாண்டியர்கள் காலத்தில் சைவ, வைணவ சமயங்கள் முக்கியத்துவம் பெற்றன. விஜயநகர காலத்தில், நாயன்கார, ஆயக்கார முறை கிராம வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தது. உலக அதிசயங்களில் ஒன்றாகத்திகழும்தாஜ்மஹால்முகலாயர்களின் கட்டடக்கலை நுட்பத்திற்குச் சான்றாகத் திகழ்கிறது. முகலாயர் காலத்தில் கட்டப்பட்ட பல கட்டடங்கள், இந்தியாவின் கட்டடக்கலையின் சிறப்பை உலகிற்கு எடுத்தியம்புகின்றன. இவ்வாறு பேரரசுகள் இந்தியப்பண்பாட்டிற்கு வியத்தகு கொடைகளை அளித்துள்ளன.



XII Ethics_Lesson 5.indd 142 16-03-2020 14:56:47